விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 25 திங்கட்கிழமை (10.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 265

# மக்களுடன் தொடர்ந்தும் நான் இருப்பேன்!

## வாக்குறுதியை காப்பாற்ற முனைந்துள்ளேன் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உறுதி



(யாழ்ப்பாணம்) எனக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட போது ஆயிரக்கணக்கில் வெகுண்டு திரண்ட எம் மக்களுக்கு அவர்களுடன் நான் இருப்பேன் என கூறியிருந்தேன். என் வாக்கைக் காப்பாற்ற நான் முனைந்துள்ளேன். இறைவன் வழி விட்டால் நான் அவர்களுடன் இருப்பேன் என முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

## வடமராட்சியில் குழு மோதல்

### 42 பேர் கைது

(கரணவாய்)

வடமராட்சி பகுதியில் விளையாட்டு மைதானத்தில் ஏற்பட்ட பிரச்சினை குழு மோதலாக 23 ☛

## ஜனாதிபதியின் அதிகாரம் மாறாது

### ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

20-வது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் ஊடாக மாகாண சபை தொடர்பில் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரம் அவ்வாறே 23 ☛

## விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

விபத்தில் காயமடைந்த இளைஞர் ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டை சாவற்கட்டை சேர்ந்த லிங்கேஸ் 23 ☛

## ராஜீவ் காந்தி கொலை வழக்கு; 7 பேரையும் விடுவிக்க பரிந்துரை

### தமிழக அமைச்சரவை முடிவு



(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருக்கும் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன், ராபட் பயாஸ், ஜெயக்குமார் ஆகிய எழு பேரை விடு 23 ☛

## 2020ஆம் ஆண்டும் மைத்திரிபாலவே பொது வேட்பாளர்!

(கொழும்பு)

2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலிலும் மைத்திரிபால சிறிசேனவே பொது வேட்பாளராகக் களமிறங்குவார் என்று அமைச்சர் விஜித் விஜித முனி சொஷ்யா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கையை கடன் 23 ☛

## அரசின் தீர்மானத்தை கூட்டமைப்பு எதிர்க்குமாம்!

### இப்படிக் கூறுகிறார் மாவை



(கொழும்பு)

இராணுவத்தை பாதுகாக்கின்றதும், தமிழ் மக்களின் நிலைப்பாட்டுக்கு எதிரானதுமான யோசனை ஒன்றை ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைப்பாரானால் அதனை தமிழ்த் 23 ☛

## மாகாணசபை தேர்தலுக்கு தயாராகுங்கள் - பிரதமர்

(கண்டி)

மாகாண சபை தேர்தலே அடுத்ததாக நடைபெறவுள்ளது. ஆகவே அதற்கு நாம் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அதற்கு துரிதமாக நாம் தயாராக வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் கண்டி சிங்கள வர்த்தக சங்க சம்பத் கட்டடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை தெரிவித்த அவர்,

உள்ளூராட்சி தேர்தலின் தோல்வியை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது மக்களின் கோரிக்கைக்குஅமைவாக நாம் மாற்றம் கண்டு வருகின்றோம் என்றும் தெரிவித்தார்.

மேலும் தற்போது 23 ☛

## சமஷ்டி பெரும்பான்மையினருக்கு எதிரானது அல்ல என்கிறார்- சுமந்திரன்



(மத்துகம)

சமஷ்டி ஆட்சி என்பது சிங்கள, பௌத்த பெரும்பான்மை மக்களுக்கு எதிரானது எனக் கூற முடியாது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மத்துகம அகலவத்தையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற புதிய அரசியலமைப்பு மற்றும் 20ஆவது திருத்தச்சட்டம் குறித்து தென்பகுதி மக்களுக்கு விழிப்பூட்டும் வகையிலான சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், இலங்கை ஜன 24 ☛

## மனித உரிமை பேரவை கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்


(ஜெனிவா)

ஐக்கிய நாடுகளின் 39-வது மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடர் இன்று ஜெனிவாவில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்பாட்டுக் குழு இன்று தனது 116-வது 23 ☛

## ஆசிய கிண்ண சம்பியனானது இலங்கை வலைப்பந்தாட்ட அணி



(சிங்கப்பூர்)

இலங்கை வலைப் பந்தாட்ட அணி 9 வருடங்களின் பின்னர் ஆசிய கிண்ண வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று சம்பியனாக தெரிவாகியுள்ளது.

சிங்கப்பூரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 23 ☛

## இலங்கைக்கு இனியும் அவகாசம் வழங்க முடியாது

### கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளை அமுலாக்குவதற்கு இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்பட முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இந்த தீர்மானத்தை அமுலாக்குவதற்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 23 ☛

# தயார் நிலையில் இராணுவம் சிலர் குழப்ப முனைகின்றனர்

## -இராணுவத் தளபதி

(கொழும்பு)

தமது சுய இலாபத்திற்காக ஓய்வுபெற்ற சில படை அதிகாரிகளும், சில அரசியல் வாதிகளும், பாதுகாப்பு முன்னேற்பாடுகளை விமர்சனம் செய்து வருவதாக இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள் ளார். இராணுவத்தின் தற்போதைய பாதுகா ப்பு தயார்நிலை குறித்து விளக்கமளிக்கும் ஊடக அறிக்கையொன்றிலேயே அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இராணு வத்தினருக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்க ப்படுவதுடன் முன்னாள் இராணுவ சிரேஷ்ட அதிகாரிகளின் ஆலோசனைகளும் தேவை யான நேரத்தில் பெற்றுக்கொள்ளப்படுகின் றன.

இதனடிப்படையில், யாழ்ப்பாணத்தில் இராணுவ முகாம் மாற்றங்கள் மேற்கொள் ளப்பட்டுவருகின்றன. இதனை சில அரசி யல்வாதிகளும் முன்னைய அதிகாரிகளும் தங்களது சுய லாபத்திற்காக மக்களை திசை திருப்பும் நோக்கில் உண்மைக்கு புறம்பான வகையில் பிரசாரம் செய்துவருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறு இராணுவ முகாம்களை மாற்றுகின்றமையினால் நாட் டின் தேசிய பாதுகாப்பிற்கு எந்தவித இடை யூறும் ஏற்படாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றார். (ம)

# ராஜபக்ஷவுக்கு ஜம்பர் அணிவிக்க நல்லாட்சி அரசாங்கம் முயற்சி

## கோத்தபாய ராஜபக்ஷ சாடல்

(இரத்தினபுரி)

கண்டி பெரஹெராவில் தன்னுடைய சீரு டையில் பொலிஸ் மா அதிபர் நடனமாடினார். இது பொலிஸ் மா அதிபர் பதவிக்கு செய்யும் அவமரியாதையாகும் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி கொடகவல பிரதேசத்தில் நேற்று மாலை நடைபெற்ற "எளிய" கருத்தர ங்கு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தனது சீருடைக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் செயற்பட்டுள்ளார். பொலிஸ் மா அதிபரின் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறியுள்ளார்.

இது பெரஹெராவிற்கு செய்யும் அவ மதிப்பாகும். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போரை முடிவுக்குக் கொண்டு வந் ததுடன், போரின் பின்னர் நாட்டில் அபிவிரு த்தியை ஏற்படுத்தினார்.

இதன் காரணமாகவே இவ்வாறான ஓர் தலைவரிடம் நாட்டை ஒப்படைக்க வேண் டும் என்று கோருகின்றோம் எனவும் குறிப்பி ட்டுள்ளார்.

இதேவேளை, ஒட்டுமொத்த அரசாங்க மும் இன்று ராஜபக்ஷவிற்கு ஜம்பர் (சிறைக் கைதிகளுக்கான அரைக்காற்சட்டை) அணி விப்பது எவ்வாறு என்றே சிந்திக்கின்றார்கள் என கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சுமத்தி யுள்ளார். (மு)

# வடக்கு மாகாண மீன்பிடி தொழிலை சர்வதேச தரத்துக்கு முன்னேற்ற வேண்டும்

## இந்திய துணைத்தூதுவர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த மட் டில், மீன்பிடித் தொழிலை சர்வதேச தரத்து க்கு முன்னேற்ற வேண்டியது அவசியமாகு மென, யாழ்ப்பாண இந்திய உயர்ஸ்தானி கராலயத் துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்தி ரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு-கரைதுறைப்பற்றுப் பிர தேசத்தில், நேற்றுமுன்தினம் 300 மீனவக் குடும்பங்களுக்கு, இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியில், படகுகள் மற்றும் இயந்திர ங்கள் வழங்கும் நிகழ்வில், கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், இந் திய அரசாங்கமானது, வடக்கு மாகாண மீன வர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அபிவிருத்தியை நோக்கி நகர்த்தவும், பல் வேறு உதவித் திட்டங்களை கட்டம் கட்ட மாக வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

அதன் முதற்கட்டமாக, மன்னார் மாவட் டத்தில், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், 70.96 மில்லியன் இலங்கை ரூபாய் செலவில், மீன்பிடி படகு கள் மற்றும் உபகரணங்கள் என்பன வழங் கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், யாழ்ப்பா ணம்-குருநகரில், 152 மில்லியன் இலங்கை ரூபாய் செலவில், மீன்பிடி வலைகளை உற் பத்தி செய்யும் தொழிற்சாலை நிர்மாணிக்க ப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தமட் டில், மீன்பிடித் தொழிலை சர்வதேச தரத்து க்கு முன்னேற்ற வேண்டியது அவசியமாகு மென அவர் மேலும் கூறினார். (மு-281)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்



நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடி காமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பி ட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங் கப்படும்.

நிறஞ்சன் நகைமாடம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.
தொடர்பு: 0763836129
(5622)

## நினைவழியாத 5ஆம் ஆண்டின் நினைவு

மலர்வு 19 - 02 - 1939



உதிர்வு 06 - 09 - 2013

**அமரர் கணபதிப்பிள்ளை நடராசா**
(இளைப்பாறிய இ.போ.ச பரிசோதகர்)
திதி:-பிரதமை (10.09.2018)

ஐந்தாண்டு ஆனபோதும்
ஆறவில்லை எம்துயரம்
நொந்து நாங்கள் வாடாத
வாழ்வினை ஈய்ந்தவரே
உந்து சக்தியாயிருந்து
உயர்வடையச் செய்தவரே
வெந்து வெதும்புகின்றோம்
என்றென்றும் உம் நினைவில்

இல.503, இராமநாதபுரம்,
கிளிநொச்சி -குடும்பத்தினர்
(சி-3757)

## சேவைநலன் பாராட்டு

**திரு.கதிர்காமசேகரம் மனோகரன் (SLTS-I)**



தனது முப்பது வருட ஆசிரியர் சேவையில் எமது பாடசாலையில் பத்து வருடங்கள் சேவையாற்றி இன்று (10.09.2018) இளைப்பாறிச் செல்லும் எமது இந்து சமய பாட ஆசிரியர் திரு.கதிர்காமசேகரம் மனோகரன் (SLTS-I) அவர்களின் சேவையை பாராட்டி மகிழ்வதோடு அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/ஏழாலை மகா வித்தியாலயம்
(5618)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திருமதி பாமினி வசிகரன்**
(ஆசிரியை,
யா/கம்பர்மலை மகா வித்தியாலயம்)



எமது சகோதரி 30.08.2018 அன்று வட மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ அ.பிறேம்சங்கர் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
இளவயதினிலேயே இக் கௌரவ பட்டத்தினைப் பெற்றமையால் நாம் பெருமை கொள்கிறோம்.

தெய்வேந்திரன் பார்த்தீபன் (அண்ணா-UK)
தெய்வேந்திரன் பகீரதன் (தம்பி-Swiss)
(5610)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எந்தக் கொள்கையும் இல்லை

## -அவர்களின் கைப்பாவையாக இருக்கவும் முடியாது- முதலமைச்சர் விக்னேஸ்வரன் உறுதி

(கொழும்பு)

மக்களின் கருத்துக்கள் மற்றும் அபிலாசைகளை மதிக்காதவர்களின் கைகளில் நான், ஒரு கைப் பாவையாக இருக்க முடியாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்."தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் குறிப்பிட்ட எந்தக் கொள்கைகளும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.




அது ஒரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி அல்ல. அதனிடம் பொதுவான சின்னமும் இல்லை. முறைப்படி கிரமமான கூட்டங்களை நடத்துவதும் இல்லை.

எமது மக்களின் தேவைகள், அபிலாசைகளை பிரதிபலிப்பதை கைவிட்ட ஒரு குழுவினால் இயக்கப்படுகிறது.

மக்களுக்கு எது சிறந்தது என்று அந்தக் குழுவே முடிவு செய்கிறது.

இந்தக் குழு குறிப்பிட்ட அந்த கனவானையும், அவரது நெருங்கிய நண்பர்களையும் உள்ளடக்கியுள்ளது.

அவர்களின் நலன்கள் சுயசார்புடையவை. மக்களின் பங்களிப்புக்கு அங்கு இடமில்லை.

தமிழ்த் தேசிய அரசியல் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள முடியும்என்றோ, அது எனது எண்ணம் என்றோ நான் கூறவில்லை.

தற்போதைய எமது தமிழ்த் தலைமைத்துவத்தின் அபத்தங்களால், என்மீது அதிக சுமை சுமத்தப்படுவதாக உணர்கிறேன் என்று தான் நான் கூறினேன்.

மக்களின் கருத்துக்கள் மற்றும் அபிலாசைகளை மதிக்காதவர்களின் கைகளில் நான், ஒரு கைப்பாவையாக இருக்க முடியாது.

மக்களே எனக்காக முதலில் வந்தார்களே தவிர, கட்சிகள் அல்ல.

மக்களே எனது எதிர்காலத்தை முடிவு செய்வார்களே தவிர வேறு எவராலும் அதனை செய்ய முடியாது" என்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (இ-7)

## சுமந்திரன் எப்போது தலைவரானார்? முதலமைச்சர் விக்னேஸ்வரன் கேள்வி



(கொழும்பு)

கருத்து வேறுபாடுகள் தொடர்பாக இரா.சம்பந்தனுடன் நடத்தவிருந்த சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கேள்வி:- "உங்களுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்க்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சி செய்கிறதா?" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன்,


பதில்:- "சந்திப்பு எனக்கும் சம்பந்தனுக்கும் இடையில் தான் நடக்கவிருந்ததே தவிர, எனக்கும் சுமந்திரனுக்கும் அல்ல. சம்பந்தன் வெளிநாடு செல்லவுள்ளதால், சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது" என்று பதிலளித்துள்ளார்.

அதையடுத்து, "முரண்பாடுகளைத் தீர்க்க சுமந்திரனை ஏன் சந்திக்கக் கூடாது?" என்று முதலமைச்சரிடம் கேள்வி எழுப்பப் பட்டது.

அதற்கு அவர், சுமந்திரன் எப்போது கூட்டமைப்பின் தலைவரானார் என்று பதில் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

### உலக பொருளாதார மாநாட்டில் பங்கேற்க

## பிரதமர் இன்று வியட்நாம் விஜயம்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று வியட்நாமுக்கு செல்லவுள்ளார்.

உலக பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே பிரதமர் வியட்நாமுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ஆசிய அமைப்புக்களுடன் தொடர்புடைய நாடுகளிலிருந்தும் ஏனைய நாடுகள் பலவற்றிலிருந்தும் உயர் மட்ட பிரதிநிதிகள் பலர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இராணுவச் சிப்பாய் படுகொலை

(கொழும்பு)

புஸ்ஸெல்லாவ, ஹெல்பொடகம பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை குறித்த சிப்பாய்க்கும் மற்றுமொரு நபருக்கும் இடையில் ஏற்பட்ட காணிப் பிரச்சினையின் காரணமாக இந்தக் கொலை இடம் பெற்றுள்ளது.

திகன இராணுவ முகாமில் கடமையாற்றி வந்த 52 வயதுடைய சிப்பாய் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த நபரை நாவலப்பிட்டிய நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-7)

## மைத்திரி மீள ஜனாதிபதியாகவும் மகிந்த பிரதமராகவும் வேண்டும்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகிந்த ராஜபக்ஷவுடன் இருக்க வேண்டும் என பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஜனாதிபதியாகவும் மகிந்த ராஜபக்ஷ பிரதமராகவும் தெரிவு செய்யப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலி தேர்தல் தொகுதியின் பொதுக்கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## ஞானசார தேரரை விடுதலை செய்ய இன்று ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஞானசார தேரரை விடுவிக்குமாறு கோரி இராணுவத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய செயலணி இன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் பொரல்லை நகரில் நடத்தப்படவுள்ளதாக அச்செயலணியின் தலைவர் யு.டீ.வசந்த தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் அண்மையில் ஞானசார தேரருக்கு 6 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஐ.தே.க. தேர்தல்களில் வெற்றிபெற முடியாது

### சந்திம வீரக்கொடி கணிப்பு



(கொழும்பு)

2030 ஆம்ஆண்டுவரையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேர்தல்களில் வெற்றி பெற முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அப்பதவியில் இருந்து அகற்றுவதற்காக கூட்டு எதிர்க்கட்சி நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை எடுத்துவந்தாலும் அவர் பிரதமர் பதவியில் இருந்தும் கட்சித்தலைவர் பதவியில் இருந்தும் விலக மாட்டார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இங்கிலாந்து வலுவான முன்னிலை


அரைச்தம் அடித்த ஜடேஜா

ஹனுமா விஹாரி, ரவிந்திர ஜடேஜா கடைசி நேரத்தில் அரைச்சதங்கள் அடித்து கைகொடுக்க. ஓவல் டெஸ்டில் இந்திய அணி சரிவில் இருந்து மீண்டது.

இறுதி இன்னிங் ஸில் ஆடும் அலஸ்ரயர் குக் சிறப் பாக துடுப் பெடுத்தாட இங்கி லாந்து வலுவான முன்னிலை நோக்கி ஜோராக நகர்கிறது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, அங்க ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொட ரில் பங்கேற்கிறது.

முதல் நான்கு போட்டிகளின் முடிவில் இந்திய அணி 1-3 என. ஏற்கெனவே தொடரை இழந்தது. ஐந்தா வது டெஸ்ட் லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் நடக்கிறது.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து அணி 332 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாம் நாள் முடிவில் முதல் இன்னிங்சில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஹனுமா விஹாரி (25). ரவிந்திர ஜடேஜா (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**விஹாரி விளாசல்**

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்சை தொடர்ந்த இந்திய அணியின் ஹனுமா விஹாரி, ரவிந்திர ஜடேஜா ஜோடி இங்கிலாந்துக்கு பதிலடி கொடுத்தது. பொறுப்பாக ஆடிய விஹாரி, ஸ்ருவேர்ட் பிரோட் வீசிய 62வது ஓவரில் 2 பவுண்டரிகள் அடித்தார். நிதானமாக ஆடிய ஜடேஜா, ஆண்டர்சன் வீசிய 63வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரிகள் விளாசினார். அறிமுக போட்டியில் அசத்திய விஹாரி, ஸ்ரோக்ஸ் பந்தில் ஒரு ஓட்., எடுத்து. அரைசதத்தை பதிவு செய்தார். 7ஆவது விக்கெட்டுக்கு 77 ஓட்டங்கள் சேர்த்த போது மொயீன் அலி 'சுழலில்' விஹாரி (56) சிக்கினார்.

**சபாஷ் ஜடேஜா**

அடுத்து வந்த இஷாந்த் சர்மா (4), மொயீன் அலியிடம் சரணடைந்தார். மொயீன் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய ஜடேஜா, டெஸ்ட் அரங்கில் தனது 9வது அரைசதமடித்தார். அடில் ரஷித் 'சுழலில்' மொஹமட் ஷமி (1) வெளியேறினார். தொடர்ந்து அசத்திய ஜடேஜா, ஆண்டர்சன் பந்தில் ஒரு சிக்சர் பறக்க விட்டார். பும்ரா (0) 'ரன்-அவுட்' ஆனார்.

முதல் இன்னிங்சில் இந்திய அணி 292 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. 'ஜடேஜா (86) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் அண்டர்சன், ஸ்ரோக்ஸ், மொயீன் அலி தலா 2 விக்கெட்டுக்களைக் கைப் பற்றினர்.

**இங்கிலாந்து முன்னிலை**

பின், 40 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணிக்கு அலெஸ்டர் குக், ஜென்னிங்ஸ் ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது.

முதல் விக்கெட்டுக் காக 27 ஓட்டங்கள் சேர்த்தபோது ஷமி 'வேகத்தில்' ஜென்னிங்ஸ் (10) வெளியேறினார். ஜடேஜா 'சுழலில்' மொயீன் அலி (20) போல்டானார். அதன்பின் இணைந்த குக், அணித் தலைவர் ஜோ ரூட் இந்திய பந்துவீச்சை எளிதாக சமாளித்து ஓட்டங்கள் சேர்த்தனர்.

இந்நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது. 2வது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 114 ஓட்டங்கள் எடுத்து. 154 ஓட்டங்களால் முன்னிலை வகித்திருந்தது. குக் (46), ரூட் (29) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**5**

அபாரமாக ஆடிய விஹாரி (56 ஓட்.). அறிமுக டெஸ்டின் முதல் இன்னிங்சில் 6வது இடத்தில் கள மிறங்கி அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர்களுக்கான பட்டியலில் 5ஆவது இடம்பிடித்தார். முதல் நான்கு இடங்களில் ரோகித் (177, எதிர் மே.தீ. 2013), ரெய்னா (120 ஓட்., எதிர் இலங்கை, 2010), சேவாக் (105 ஓட்., எதிர் தெ.ஆ., 2001, ஆம்ரே (103 ஓட்., எதிர் தெ.ஆ., 1992) ஆகியோர் உள்ளனர்.

**86**

பொறுப்பாக ஆடிய இந்தியாவின் ரவிந்திர ஜடேஜா 86 ஓட்டங்கள் எடுத்தார். இதன்மூலம் டெஸ்ட் அரங்கில் தனது 2ஆவது அதிகபட்ச ரன்னை பெற்றார். கடந்த 2016ல் மொகாலியில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் 90 ஓட்டங்கள் எடுத்திருந்தது இவரது அதிகபட்ச ஓட்டங்களாக உள்ளது.

**சிக்கல் கொடுத்த குக்**

ஓவல் டெஸ்ட் போட்டியுடன் இங்கிலாந்தின் குக் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார். நேற்று, தனது கடைசி இன்னிங்சில் துடுப்பாட்டம் செய்ய கள மிறங்கிய இவரை, மைதானத்தில் இருந்து ஒட்டுமொத்த ரசிகர்களும் கைதட்டி உற்சாகப் படுத்தினர். அபாரமாக ஆடிய இவர், இங்கிலாந்து அணி வலுவான முன்னிலை பெற உதவினார். இன்று இந்திய பந்துவீச்சாளர்கள் சாதிக்கும் பட்சத்தில் சிக்கலில் இருந்து தப்பலாம்.

# 'நீங்கள் ஒரு திருடர்'

## ராக்கெட்டை தூக்கி எறிந்து செரினா ஆவேசம்

போட்டியின்போது. பார்வையாளர்களுடன் செரினாவின் பயிற்சியாளர் பட்ரிக்கும் அமர்ந்திருந்தார்.

இரண்டாவது செட் நடந்தபோது, கை அசைவின் மூலம், பட்ரிக் பயிற்சி கொடுத்ததாக 'சேர்' நடுவர் கார்லோஸ் ரமோஸ் (போர்த்துக்கல்) செரினாவை எச்சரித்தார்.

இதை மறுத்த செரினா சற்று ஆக்ரோஷம் ஆனார். ஒரு கட்டத்தில் பின்தங்கிய இவர், டென்னிஸ் ராக்கெட்டை உடைத்தார். இது, விளையாட்டு விதியை மீறிய செயல் எனக்கூறி செரினாவுக்கு ஒரு 'பெனால்டி' புள்ளி கொடுத்தார் ரமோஸ். இது, நவோமியின் கணக்கில் சேர்க்கப்பட்டது.

இதனால், கோபம் அடைந்த செரினா நடுவரிடம் வார்த்தை மோதலில் ஈடுபட்டார்.

'இனி உங்களை எந்த டென்னிஸ் கோர்ட்டிலும் பார்க்க முடியாது என நினைக்கிறேன். உங்களின் செயலுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும். நீங்கள் ஒரு திருடர்.' என திட்டினார். இதற்கும் 'பெனால்டி' புள்ளி வழங்கப்பட்டது. இதன் பின்பும் சீற்றம் குறையாத செரினா 'ரெப்ரி'யை அழைத்து புகார் தெரிவித்தார்.

போட்டிக்குப்பின் பத்திரிகையாளர்களை சந்தித்த செரினா கூறுகையில்,

'நான் ஏமாற்றியதாக நடுவர் புகார் கூறினார். நான் பயிற்சியாளரிடமிருந்து எந்த உதவியையும் பெறவில்லை. பெண்களுக்கான சம உரிமையை பெறத்தான் போராடினேன்.' என்றார்.

**27**
**கோடி பரிசு**

கிண்ணம் வென்ற ஒசாகா ரூ. 27 கோடி பரிசு வென்றார். இறுதியில் வீழ்ந்த செரினாவுக்கு ரூ. 13 கோடி பரிசாக வழங்கப்பட்டது.


நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபடும் செரினா வில்லியம்ஸ்

## யு.எஸ். ஓபன் டென்னிஸ்

# வரலாறு படைத்தார் ஒசாகா

# இறுதியில் வீழ்ந்தார் செரீனா


வெற்றிக் கிண்ணத்துடன் நவோமி ஒசகா

யு.எஸ்., ஓபன் டென்னிஸ் தொடரில் கிண்ணம் வென்று ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா வர லாறு படைத்தார். இறுதியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் தோல்வி அடைந்தார்.

அமெரிக்காவின் நியூ யோர்க்கில் யு.எஸ்., ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் தரவரிசையில் 26ஆவது இடத்திலுள்ள அமெரிக்காவின் செரினா, நவோமி ஒசாகாவை (19ஆவது இடம்) சந்தித்தார்.

23 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ள செரினா நெருக்கடி கொடுப்பார் என எதிர்பார்த்த நிலையில், நவோமி அபாரமாக செயற்பட்டார்.

முதல் செட்டை 6-2 என எளிதாக வசப்படுத்தினார் நவோமி. அடுத்த செட்டிலும் இவர் ஆதிக்கம் செலுத்த செரினா 4-6 என பறிகொடுத்தார். ஒரு மணி நேரம் 19 நிமிடம் நடந்த போட்டியின் முடிவில், நவோமி 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

இதன்மூலம், கிராண்ட் ஸ்லாம் அரங்கில் கிண்ணம் வென்ற முதல் ஜப்பான் நட்சத்திரம் என்ற வரலாறு படைத்தார்.

# மதமாற்ற முயற்சிகளை தடுப்பதற்கு உலக இந்துக்களின் உதவி தேவை

## மறவன்புலவு சச்சிதானந்தன் சிக்காக்கோவில் கோரிக்கை

(சிக்காக்கோ)

இலங்கையில் குன்றி வரும் இந்து சமயத்தைப் பாதுகாப்பதற்கும் மதமாற்ற முயற்சிகளைத் தடுப்பதற்கும் உலக இந்துக்களின் உதவி தேவை என மறவன்புலவு க.சச்சிதானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.




அமெரிக்க மாநிலங்கள், இலினோயி, சிக்காக்கோவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற அரசியல் கருத்துக் களத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்குறித்த கோரிக்கையை முன்வைத்துள்ளார். குறித்த அமர்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

இராவணன் காலத்தில் வழிபட்ட பஞ்ச ஈச்சரங்கள் கொண்ட சிவபூமி இலங்கை. 2500 ஆண்டுகளுக்கு முன் புத்தர் வருகை, 400 ஆண்டுகளுக்கு முன்னர் கிறிஸ்தவர் வருகை, 200 ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்லாமியர் வருகை எனப் படிப்படியாக இலங்கையில் இந்து சமயம் குன்றி வருகிறது.

கடந்த 30 ஆண்டுகளில் 1981 தொடக்கம் இந்துக்கள் தொகை 15 வீதத்திலிருந்து 12 வீதமாகக் குறைவடைந்துள்ளது. ஆனால் பௌத்தர் தொகை 69 வீதத்தில் இருந்து 70 வீதமாகவும் இஸ்லாமியர் தொகை 7.5 வீதத்திலிருந்து 10 வீதமாகவும் கிறிஸ்த்தவர் தொகை 7 வீதத்திலிருந்து 8.5 வீதமாகவும் வளர்ச்சியடைந்துள்ளன.

இலங்கையில் பௌத்தர்களுக்கு அரசே பாதுகாப்பாக உள்ளது. அவர்களே நிதி உதவியும் வழங்குகிறார்கள். அத்துடன் புத்த சமயம் அரசியலமைப்பில் முன்னுரிமைச் சமயம். மேலும் கிறிஸ்த்தவர்களின் சபைகள் மேனாட்டு நிதி வளத்துடன் மதமாற்றத்தை செய்து வருகின்றன. இஸ்லாமியர்களின் சனப் பெருக்கம் அதிகரித்து வருவதுடன் வளை குடா நாடுகளின் நிதி உதவியில் மதமாற்றும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் இந்துக்களே இந்த மூன்று சமயத்தவரால் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். யாருமே இந்துக்களுக்கு உதவ முன்வராத நிலை காணப்படுகிறது. எனவே கிறிஸ்த்தவ-இஸ்லாமிய மதமாற்ற முயற்சிகளைத் தடுக்க உலக இந்துக்களின் உதவி தேவை எனக் கோரிக்கை விடுத்தார்.

இந்த நிகழ்வில் 60 நாடுகளைச் சேர்ந்த இந்துக்கள், வெள்ளையர், ஆபிரிக்கக் கறுப்பர், திபெத்தியர், நேபாளத்தார், இந்தியர், அமெரிக்க இந்தியர், கனேடிய இந்தியர், கலந்து கொண்டிருந்ததுடன் தமிழர்கள் குறைவான எண்ணிக்கையானவர்களே கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

(கரணவாய்)

நாகர்கோவில் தெற்கு அருள்மிகு பெரியவளவு பிள்ளையார் ஆலய (பெரியதம்பிரான் ஆலய) புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 6.29 மணிமுதல் 8.15 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை எண்ணைக் காப்பு சாத்துதல் இடம்பெறும். (இ-60)

# பொலிஸாரின் முறையற்ற செயலால் குற்றவாளிகள் தப்பிக்கின்றனர்

## சட்டத்தரணி சர்மினி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

பொலிஸார் பணத்தைப் பெற்றுவிட்டு முறையாக வழக்கைத் தாக்கல் செய்யாத காரணத்தால் குற்றவாளிகள் தப்பிப்பதாக சட்டத்தரணி வி.சர்மினி குற்றம் சாட்டியுள்ளார். பணம் இருந்தால் எதையும் செய்யலாம் என்ற நிலையில் தான் எமது சமூகமும் உள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்குறித்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாள் வெட்டு தொடர்பான வழக்கு விடயங்களில் எங்களுக்கு ஊடகத்துறையின் உதவி தேவை. ஏனென்றால் அண்மையில் நடந்த வாள் வெட்டு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இந்த வழக்கு தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் குற்றவியல் பொறுப்பதிகாரி நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகும் அளவுக்கு அவரிடம் நாங்கள் கேள்வி கேட்டோம். அவரால் எந்தவொரு இடத்திலும் பதில் சொல்ல முடியவில்லை. இந்த வழக்கில் சான்றுப் பொருள் வாள் என்று அவர் நீதிமன்றத்தில் சொன்னார்.

ஆனால் கத்தியே இருந்தது. வாளைத் தீட்டியவரை பிடித்துக் கொண்டு வந்ததாக பொலிஸ் குற்றவியல் பொறுப்பதிகாரி சொல்கிறார். ஆனால் சந்தேக நபர் தான் கத்தியைத்தான் தீட்டிதாகச் சொல்கிறார். சந்தேக நபர்களை 15 வாள்களுடன் பிடித்ததாக பொலிஸார் சொல்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு கத்திதான் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது. அந்தச் சான்றுப்பொருட்கள் எங்கே போயின எனத் தெரியவில்லை. எந்தவொரு சந்தேக நபரைக் கைது செய்யும் போதும் அது தொடர்பில் அவர்களது குறிப்பேட்டில் எழுதுவார்கள். ஆனால் வழக்கு தொடர்பான விடயங்களை கேட்டால் உரிய பதில் தெரிவிக்கவில்லை. எங்களுடைய கேள்விகளுக்கு குற்றவியல் பொலிஸ் பொறுப்பதிகாரி பதிலளிக்க முடியாத நிலையில் இருந்தார்.

வழக்குகளில் நாங்கள் கேட்கின்ற ஒவ்வொரு கேள்விகளும் எங்களுக்கு ஆபத்தாக இருக்கலாம். அத்தனை விடயங்களும் பதிவில் உள்ளன. இவற்றை வெளிப்படுத்த வேண்டும். அப்போது தான் சட்டத்தரணிகளும் பொலிஸாரும் நீதவான் நீதிபதிகளும் நீதிமன்றத்தில் என்ன பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது பொது மக்களுக்குத் தெரியும். இவை எல்லாவற்றையும் மறைத்து விட்டு வாள்வெட்டில் கைதான அனைவரும் விசார்ணையின் பின் விடுதலை என தலைப்பிட்டு பத்திரிகைகள் செய்தி வெளியிடும். ஏன் விடுதலையானார்கள்? எவ்வாறு விடுதலையானார்கள்? என்பது தொடர்பில் எவையும் இருக்காது.

மேலும் ஒரு சம்பவத்தில் பலர் தொடர்புடையதாக இருந்தாலும் ஒருவரை மட்டும் ஆஜர்ப்படுத்தி வழக்கை பொலிஸார் முடிக்கிறார்கள். இங்கு பணம் பாய்கிறது. இவற்றையெல்லாம் நாங்கள் யாரிடம் சொல்வது? இதனை நாங்கள் நீதிமன்றில் தெரிவித்தோம்.

இந்த நிலையில் எங்களையே குறை சொல்லிக் கொண்டிருக்கிற அமைச்சர்கள், அரசியல்வாதிகள் மற்றும் அனைவரையும் கோருகிறேன். அனைத்தையும் வெளிப்படையாக அறிந்து கொள்ள வேண்டும் என்றால் பொலிஸ் நிலையம் நீதிமன்றங்களில் கண்காணிப்பு கமராக்களைப் பொருத்துங்கள். எங்கு பிழை நடக்கிறது? அந்தப் பிழையால் என்ன விடயங்கள் மேலெழுந்து வருகின்றன என்பது தெரியும். பணம் பாய்வது தெரியும். இன்றைய சமூகத்தில் பணம் இருந்தால் எதனையும் செய்யலாம் என்ற நிலை இருக்கின்றது. நீதியோ, நியாயமோ விளையாடவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# இந்து விடுதியை மீள இயக்க சைவ மகா சபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சுகாதார பணிமனை இயங்கிவரும் சைவ யாத்திரிகர்களுக்கான நல்லூர் இந்து விடுதியை அடியவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு அக்கட்டடத்தில் மீள இயக்குவதற்கு யாழ் மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை சைவமகாசபை கோரிக்கை விடுத்துள்ளது.

எம் சைவ சமயிகளுக்காக நல்லூரில் கட்டப்பட்ட இந்து விடுதி கால் நூற்றாண்டு காலமாக வேறு அரச தேவைகளுக்கு பயன்படுத்தப் படுவது கவலையளிக்கின்றது.

அடுத்த ஆண்டுக்குள் அந்த விடுதியில் அமைந்துள்ள சுகாதாரப் பணிமனையை பொருத்தமான இடத்திற்கு புதிய கட்டட நிர்மாணத்துடன் நகர்த்தி கிழக்கு, வன்னி, மலையகம் என தூர இடங்களிலிருந்து நல்லூர் உள்ளிட்ட ஆலயங்களை தரிசிக்க வரும் அடியவர்களுக்கு வழங்க உதவ மாநகர சபை முன்வர வேண்டும் என பொது மக்கள் சார்பாக கோரிக்கை விடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# இராசி பலன்

**மீனம்**: நீண்டநாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் வழிகளில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம்.

**மேடம்**: தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உள்ளன்போடு பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**இடபம்**: கனவுகள் நனவாக இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**மிதுனம்**: பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்**: முக்கிய விடயங்களை காலைப்பொழுதே செய்து முடிப்பது நல்லது, குறைவாகப் பேசினாலும் குறை கூறாமல் இருப்பது நல்லது, குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி பலன் | | ராகு |
| செவ். கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம்<br>மதியம் 1.00 மணிக்கு<br>கன்னி-சந் | | சூரி. புத சந் |
| சனி | | குரு சுக் | |

10.09.2018

ஆவணி 25, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

பிரதமை முன்னிரவு 10.14 மணிவரை

பூரம் முற்பகல் 07.17 மணிவரை

சுபநேரம் 12.03-01.33 மணிவரை

இராகுகாலம் 07.33-9.03 மணிவரை

வளவன்

**கடகம்**: கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**மகரம்**: சுணங்கிய காரியங்களில் மதியத்திற்குப் பின் மாற்றங்கள் ஏற்படலாம், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், புதிய சிந்தனைகள் தோன்றும், ஆன்றோர் சந்திப்புண்டு.

**சிம்மம்**: புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், ரோக பயமுண்டு.

**தனுசு**: வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், குடும்ப ஒற்றுமை கூடும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**துலாம்**: பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.

**கன்னி**: மகிழ்ச்சி பெருக கண்ணனை வழிபட வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

# காணாமற் போனோரின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணங்கள் மிக அவசியம்

## இடைக்கால அறிக்கையில் அரசிற்கு பரிந்துரை

காணாமற் போனோர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளின் போது காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருப்புமுனையைக் குறிக்கிறது. 2016 இன் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகச் சட்டம் (தாபித்தலும் /நிர்வகித்தலும்/ பணிகளைநிறை வேற்றுதலும்) சுயாதீன ஆணைக் குழு என்ற வகையில் நிறுவப்பட்டுள்ளது. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் குறிக்கோள் காணாமற் போனோரைத் தேடுதல் மற்றும் அவர்களைப்பற்றிக்கண்டறிதல். இத்தயை சம்பவங்கள் மீள நிகழ்வதைத் தடுப்பதற்குப் பரிந்துரைகளை முன்வைத்தல் காணாமற் போனோரினதும் அவர்களது உறவினர்களதும் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய வகையல் உத்தரவாதங்களை மேற்கொண்டு நிவாரணங்களை வழங்குவதற்கு உசிதமான நடவடிக்கைகளை அறிமுகம் செய்தல் என்பனவாகும். 2018 மாசி மாதத்தில் ஏழு (7) ஆணையாளர்களின் நியமனத்தோடு அலுவலகத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. குறிப்பிட்ட அலகுகளையும் பிரதேச அலுவலகங்களையும் அமைத்தல்,தாபித்தல், அலுவலகப் பணியாளர் களை ஆட்சேர்த்தல் மற்றும் கொள்கைகள் ஒழுங்கு விதிகள், செயல் முறைகள் என்பவற்றை உருவாக்குதல் என்பன காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் நடவடிக்கைளில் உள்ளடக்கப்படும் அதேசமயம் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்களோடு பொதுக் கலந்துரையாடலிலும் ஈடுபட்டது. அத்தோடு பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுக்கும் சந்தர்ப்பங்களில் அந்தரங்கமான சந்திப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. சட்டவைத்தியத் தரவுகளை ஆவணப்படுத்துதல் போன்ற விசேட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசியமான விஞ்ஞான ரீதியான அறிவைப் பெறுவதற்கு காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களின் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்ற தோடு அரச நிறுவனங்கள் மற்றும் சில சர்வதேச நிறுவனங்களுடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றது மேலும் சில விசேட சம்பவங்கள் பற்றிய பரிசீலனைகளையும் மேற்கொண்டது. குறிப்பாக மன்னாரில் கூட்டுப்புதை குழிகளை அகழ்வதற்கும் தோண்டி எடுப்பதற்கும் அவசியமான உதவிகளை வழங்கியதோடு காணாமற்போன ஆட்கள் பற்றி நிலவும் அறிக்கைகளைத் தொகுத்து பாதிக்கப்பட்டோர் மற்றும அவர்களது குடும்பங்கள மீதும் தாக்கம் செலுத்தும் சட்டரீதியான பிரச்சினைகளைப் பற்றிய பரிந்துரைகளையும் விளக்கங்களையும் தயாரித்துள்ளது. அதனிடையே பல ஆண்டுகளாக பௌதீக மற்றும் உளவியல் அழுத்தங்களைச் சுமந்து கொண்டு உயிர் வாழும் பாதிக்கப்பட்ட குடும்பங்களினது தேவைகளின் அத்தியாவசியத் தன்மைகளை சமநிலைப்படுத்தல் உட்பட பல சவால்களை காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் எதிர்நோக்குகின்றது. தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று அறிவதிலேயே காணாமற்போன ஆட்களின் குடும்பங்கள் அதிக அக்கறை செலுத்துகின்றன. இதுவரை இதுபற்றிய உண்மையான தகவல்களை அரசினால் வழங்க முடியாமையினால் அரசு மீது பாரிய சந்தேகம் உருவாகியுள்ளது. இதன் காரணமாக காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் மீதும் அவர்களுக்குப் பாரிய நம்பிக்கையீனமேயுள்ளது. இக் குடும்பங்களின் பல்வேறு தேவைகளையும் நிலைப்பாடுகளையும் புரிந்து கொண்டு அவர்களின் நம்பிக்கையைக்கட்டியெழுப்புவதன் அவசியத்தை நாம் அடையாளம் கண்டுள்ளோம்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கடந்த 5 ஆம் திகதி கையளிக்கப்பட்ட காணாமல் போனோர் தொடர்பான இடைக்கால அறிக்கையின் முழு விபரம்

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பயனுறுதிவாய்ந்ததாக அமைவதற்கு அரசின் ஏனைய நிறுவனங்களின் நேரடியான ஒத்துழைப்பு அவசியம். காணாமற்போனோரின் உரிமைகள் மீறப்பட்டதற்கு ஈடாக பாதிக்கப்பட்டோரின் இழப்பினை ஈடுசெய்வதற்கு ஒரு வேலைத் திட்டம் அவசியமாகும். எனவே நம்பகத்தன்மை வாய்ந்த முறையில் பயனுறுதி வாய்ந்த இழப்பீட்டிற்கான ஓர் அலுவலகத்தை தாபிப்பதற்கு சட்டங்களை தயாரிப்பது மிக அவசியமாகும்.

குடும்பங்களின் வருமானத்தை ஈட்டுபவர்கள் காணாமற் போதலினால் அக் குடும்பங்கள் எதிர்நோக்கியுள்ள மிகத் துன்பகரமான நிலைமையும் அதன் காரணமாக ஏற்பட்டுள்ள தேவைகளையும்நாம் அடையாளம் கண்டுள்ளோம். மேற்படி குடும்பங்களின் தேவைகளே இவ்வறிக்கைக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. மேற்படி தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கியே பல இடைக்கால நிவாரணங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் குடும்பங்களின் சேமநலனை குறிக்கோளாகக் கொண்டு இந்த இடைக்கால நிவாரணங்கள் எவ்விதத்திலும் இழப்பீடுகளாக அமைய மாட்டாது என்பதை வலியுறுத்த வேண்டும். காணாமற்போன குடும்பங்கள் இந்த் இடைக்கால நிவாரணங்களை அரசிடம் இருந்து ஏற்பது அவர்களின் இழப்பீடுகளுக்கு உரித்தான உரிமைகளுக்கு எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது என்பதனை விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

அதேசமயம் காணாமற் போன ஆட்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு நீதியை நிலைநாட்ட வேண்டிய ஏற்பாடுகளை காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் அடையாளம் கண்டுள்ளது. 2018 ஆம்-ஆண்டு பங்குனி மாதத்தில் அரசாங்கம் வலிந்து காணாமற் போகச் செய்தல் மூலம் அனைத்து ஆட்களையும் பாதுகாப்பதற்கான அரசுகளுக்கிடையிலான சமவாயச் சட்டத்தை வலிந்து காணாமற் போகச் செய்தல் பற்றிய சட்டத்தை அங்கீகரித்தல்மூலம வலிந்து மேற்கொள்ளப்படும் காணாமற்போகச் செய்தல் குற்றவியல் குற்றமாக அடையாளம் காணுதல், அரசியலமைப்பின் அரச பொறுப்புக்களை வலியுறு த்தி அதற்கு ஏற்புடைய சட்டங்களை அடையாளம் காணுதல் ஒரு சாதகமான நடவடிக்கை என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

அதே சமயம் வலிந்து காணாமற் போகச் செய்தல் குற்றவியல் குற்றமாக அடையாளம் காணுதல் மாத்திரம் போதுமானதாக அமையாது. நீதியை நிலை நாட்டுவது தொடர்பாகவும் மறுசீரமைக்க வேண்டிய பல துறைகளைப் பற்றியும் நாம் அடையாளம் கண்டுள்ளோம். விசேடமாக உரிமைகளை மீறுதல் பற்றிச் செயற்படும் குடும்பங்களும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளும் செயற்பாட்டாளர்களும் துன்புறுத்தல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாவதற்கு எதிராக துரிதமாக உரிய நடவடிக்கை எடுப்பது தாமதமாகின்றது. எனவே இத்தகைய சவால்களை அகற்றுவது அவசரத் தேவையாகும் என வலியுறுத்துகின்றோம்

**1. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தற்போதைய நடவடிக்கைகள்.**

1) 2018 மாசி மாதம் 28 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்குமான நியமனக் கடிதங்கள் ஒப்படைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஆறு மாத காலத்திற்குள் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நிறைவேற்றிய பணிகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம். அதன் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான கட்டமைப்புகளும் செயல் முறைகளும் தாபிக்கப்பட்டதுடன் காணாமற்போன ஆட்களின் குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணங்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2) காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டம்-2016 ஆம் ஆண்டில் 14 ஆம் இலக்க காணமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகச் சட்டம் (தாபித்தலும் நிர்வகித்தலும் பணிகளை நிறை வேற்றுதலும்) இவ்வலுவலகத்தின் முக்கிய நான்கு பணிகளைக் குறிப்பிடுகின்றது்

1) காணாமற்போன ஆட்களைத் தேடுதல் மற்றும் தேடிக்கண்டு பிடித்தல்.

2) மேற்படி காணாமற் போன ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சூழமைவு பற்றிய விடயங்கள் மற்றும் அவர்களின் நிலையை தெளிவுபடுத்துதல்.

3) காணாமற்போன ஆட்கள் பற்றிய சம்பவங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இத்தகைய நிகழ்வுகள் மீளநிகழாமல் இருப்பதை உறுதிப் படுத்துவதற்கும் ஏற்புடைய் நிறுவ்னங்களுக்கு பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

4) உரிய இழப்பீட்டு மார்க்கங்களை அறிமுகப்படுத்துதல்.

3) காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகச் சட்டத்தின் மூலம் நிரந்தரமான அலுவலகம் ஒன்று நிறுவப்படுவதோடு காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் என்போர் யுத்தம் அரசியல் அமைதியின்மை அல்லது சிவில் கிளர்ச்சிகள் கலகங்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்குதல் உட்பட்ட சூழ்நிலைகளில் எவராவது ஓர் ஆளுக்கு ஏற்பட்ட நிலை அல்லது அவர் இருக்கும் இடம் நியாயமான முறையில் அறியவில்லையென நம்புகின்ற அந்த நபர் என்ற வகையில் ஒரு நபர் வரைவிலக்கணம் செய்யப்படுகிறார்.

4) காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நெறிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகச் சட்டம் இலங்கையின் தேசிய சட்டங்கள் மற்றும் ஏற்புடைய ஏனைய சர்வதேசச் சட்ட கடப்பாடுகள் வழிகாட்டியாக அமையும்.

1.1 அலுவலகத்தின் நடவடிக்கைகளை செயற்படுத்துதல்.

5) அலுவலகத்தின் நடவடிக்கைகளை செயற்படுத்துதல் கா.ஆ.அ. உறுப்பினர்களால் உடனடியாக நிறை வேற்றப்பட வேண்டியதாக இருந்தது இதன் பணிகளை அமுலாக்குவதற்கு வேறு அலகுகளை உருவாக்கும் வரை இடைப்பட்ட காலத்தில் பாதிக்கப்பட்டோரை மையப்படுத்தி அவர்களை பிரதிபலிக்கக் கூடிய வகையிலும் பயனுறுதிவாய்ந்த ஒத்துழைப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் நடத்தைக் கோவை, வழிகாட்டிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்குவதற்கு கா.ஆ.அ. ஈடுபாடு கொண்டுள்ளது.

கா.ஆ.அ. எண்ணக்கரு மற்றும் அமுலாக்கம் என்பன இச் செயல் முறைக்கு ஏற்புடைய தேசிய மற்றும் சர்வதேச சட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதோடு கா.ஆ.அ. சட்டம் நல்லிணக்கம் பற்றிய கலந்தா லோசனைச் செயலணி (CTF) மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுப்பாய்வின் அடிப்படையில் ஆலோசனை உட்பட முன்னைய ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளும் கவனத்தில் கொள்ளப்படும்.

கா.ஆ.அ. தற்போது தற்காலிகமாக ஊழியர்களை சேவைக் கமர்த்தியுள்ளதுடன் அலுவலகத்திற்கான நிரந்தர ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு அரசாங்கத்திடமிருந்து அங்கீகாரம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன இவ்வலுவலகம் தற்காலிகமாக இல.34, நாரஹேன்பிட்டி வீதி. நாவல எனும் முகவரியில் அமைந்துள்ளதுடன் நிரந்தரமான பிரதான அலுவலகத்தை கொழும்பில் நிறுவுவதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றது. அத்துடன் நாடு பூராகவும் உள்ள குடும்பங்கள் இலகுவில் அலுவலகத்தை அணுகுவதை உறுதி செய்வதற்கு கா.ஆ.அ. மூலம் பிரதேச ரீதியாக 12 பிராந்திய அலுவலகங்கள் தாபிக்கப்படவுள்ளன மன்னார் மற்றும் மாத்தறை ஆகிய இடங்களில் இரண்டு அலுவலகங்கள் இவ்வாண்டு முடிவடைவதற்கு முன்னர் தாபிக்கப்பட்டு அவற்றின் பணிகளை செயற்படுத்தும்.

(தொடரும்...)



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றத் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
(படங்கள்:மகாலிங்கம்)

# குப்பைத் தொட்டி தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை

## நகர சபை உறுப்பினர் விசனம்

(சாவகச்சேரி)

சாதாரண குப்பைத்தொட்டி வைக்கும் விடயத்தைக் கூட நிறைவேற்ற முடியாத சபை வேறு அபிவிருத்தி பற்றி பேசத் தகுதியற்றது என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ந.திருக்குமரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


வட்டாரத்திற்கு வட்டாரம் குப்பைத் தொட்டி வைக்க வேண்டும் என கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சாவகச்சேரி நகரசபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இன்றுவரை அந்த தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. சாதாரண குப்பைத் தொட்டியைக் கூட வைக்க முடியாத நாம் அடுத்ததைப் பற்றிப் பேசி எந்தப் பிரியோசனமும் இல்லை. முதலில் சாதாரண மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அத்துடன் சாவகச்சேரி நகரசபையின் இறைச்சிக் கடை தொடர்பில் நகரசபையின் சுகாதாரக் குழு சென்று பார்வையிட்டு நிலைமைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (இ-30)

## தொழிலாளர்களை ஏமாற்ற முடியாது

### திகாம்பரம் தெரிவிப்பு

தேயிலையின் விலை உயர்ந்து காணப்படுவதால். கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களை ஏமாற்ற முடியாது என அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாக இந்த 50 வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன.லிந்துலை ஹென்போல்ட் தோட்டத்தில் நிர்மாணிக்கப்படவிருக்கும் இந்த வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.(இ-7)



துன்னாலை தூய சதா சகாய மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா பெருநாள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது. இதில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதையும் மாதா வீதி வலம் வருவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மகாலிங்கம்)

# யாழ்/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர், யாழ்ப்பாணம் நிறுவுநர் தின சிறப்பிதழ் - 2018 செப்டெம்பர் - 10

## ஆலயப் பிரதம குருவின் ஆசிச் செய்தி

சைவமும் தமிழும் சிறக்க ஆலயம், கல்லூரி அன்ன சத்திரம் முதலான மூன்று பெரும் கைங்கரியங்களையும் ஒருங்கே அமைத்து சிவத்தொண்டாற்றியதோடு அவை செவ்வனே செயற்பட அசையும் அசையா சொத்துக்களை வழங்கிய வள்ளல் அமரர் மழவராயர் கந்தையா அவர்களை என்றென்றும் நினைவு கூர்ந்து இன்றைய நாளிலே அன்னாரின் எண்ணம் மேலும் சிறப்புற திரிகரண சுத்தியுடன் வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

வாழ்க வள்ளலார் நாமம்

**சிவஸ்ரீ சாமி சோமசுந்தரக்குருக்கள்**

## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழத்துச் செய்தி

தானங்களில் சிறந்த தானங்களாக வித்தியா தானம், அன்னதானம் என்பவை கொள்ளப்படுகின்றன. அத்தகைய இரு தானங்களையும் இரு கண்ணெனப்போற்றி அறப் பணி செய்த பெருந்தகை வள்ளலார் மழவராயர். அவர்கள் கொடையால் உதித்த. சோமஸ் கந்தாக் கல்லூரி இன்றைய நாளில் அன்னாரின் ஜனனதினத்தை நினைவு கூருவதோடு, பரிசில் தினத்தையும் ஒருங்கு சேர்த்து நடத்து கின்றமை போற்றுதற்குரியது. கோப்பாய் கோட்டத்தில் வளர்ந்து வரும் கல்லூரியாகத் திகழும் இக் கல்லூரியின் செயற்பாடுகள் போற்றுவதற் குரியது அப்பணிமென் மேலும் சிறப்புற எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் தெரிவித்துக் கொள்வதில் ஒப்பற்ற மகிழ்ச்சி யடைகிறேன்.

**திரு.சு.சுந்தரசிவம் - வலயக்கல்விப்பணிப்பாளர்**



**தோற்றம் :- 10.09.1887**
**மறைவு :- 15.05.1936**
**அத்திபாரதினம் :- தைமாத அத்த நட்சத்திரம்**
**வித்தியாரம்பதினம் :- வைகாசி மிருகசீரிட நட்சத்திரம்**
**தந்தை :- சிற்றம்பலம் மணியகாரன் மகன் மழவராயர்**
**தாய் :- சின்னையா மகன் - சின்னத்தங்கச்சிப்பிள்ளை**

## வள்ளலாரின் பணிகள் :

- விசாலாட்சி சமேத விசுவநாத பெருமாளுக்கான ஆலயம் (புத்தூர் சிவன் ஆலயம்) அமைத்தமை.
- புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியை அமைத்து இலவசக் கல்வி வழங்கியமை.
- ஏழைகளின் பசிப்பிணி தீக்க அன்னசத்திரம் அமைத்தமை.
- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைப்பதற்கான கதிர்வேலாயுத சுவாமி மடாலயத்துடன் கூடிய நிலத்தை நல்லூரில் வழங்கியமை.
- கோடிக் கணக்கில் பெறுமதி கொண்ட சொத்துக்களை உலக நன்மை கருதி தர்ம சாதனங்களைச் செய்தமை.

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

1931ஆம் ஆண்டு அமைக்கப்பெற்ற கல்லூரியானது மாணவர் கல்வியில் வளர்ந்து வருவதற்கு உறுதுணையாக இருந்த அமரர் வள்ளல் மழவராயர் கந்தையா அவர்களின் பணி சமூகத் திற்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்தது என்றே கூறலாம்.

ஒரு பாடசாலையை உருவாக்குவது ஆயிரம் சிறைச் சாலைகளை மூடுவதற்கு சமம் என்ற காந்தியின் தத்துவத்திற்கு அமைவாக அமைக்கப்பெற்ற கல்லூரி நிறுவுநர் அமரர் மழவராயர் கந்தையா அவர்கள் உலக நன்மையின் பொருட்டாய் கல்லூரியை அமைத்தது மட்டுமன்றி அவை செவ்வனே தடையின்றி நடைபெற அசையும் அசையா சொத்துக்களை வழங்கிய பெருமகனாரின் சேவையை என்றென்றும் மறவாது நினைவு கூர்ந்து நன்றி கூறுவதோடு அவரது எண்ணங்கள் ஈடேறி மாணவர்கள் ஒழுக்க சீலர் களாக திகழ்ந்து கல்வியில் மேன்மையடைய நிறுவுநர் நாளும் பரிசில் தினமுமாகிய இந்நாளில் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க வளர்க! சோமஸ்கந்தா

**திரு.செ.இளங்கோ - கல்லூரி முதல்வர்**

## தர்மகத்தா சபையினரின் வாழ்த்துச் செய்தி

ஆன்ம ஈடேற்றத்திற்காக ஆலயத்தினையும், அறிவுப் பசிதீர்க்க பாடசாலையையும், பசிப்பிணி நீக்க அன்னசத்திரத்தினையும் ஒருங்கே அமைத்து சிவதர்ம கைங்கரியங்களைச் செய்த வள்ளல் மழவராயர் கந்தையா அவர்களின் ஜனனதினமாகிய இன்றைய நாளிலே நினைவு கூர்வதோடு அவர்பணி மென்மேலும் சிறப்புற்று வளர்ச்சி யடைய வேண்டியும் அவர் வழி சென்று அனைவரும் பயன்பெற வேண்டுமெனவும் இன்றைய நினைவு நாளை நினைவு கூர்ந்து வாழ்த்துகின்றோம்.

**தர்மகத்தா சபை யா/ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.**

# களியாட்ட நிகழ்வில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பு வாள்வெட்டில் முடிந்தது

## நான்குபேர் படுகாயம்; வாள், நெஞ்சாக் மீட்பு



(மல்லாவி )

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட குமாரசாமி புரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கொண்டாட்ட நிகழ்வின் பின்னர் இடம் பெற்ற களியாட்டத்தின் போது, மது போதையில் இரு குழுக்களுக்கு கிடையில் ஏற்பட்ட கைகலப்பு வாள் வெட்டில் முடிந்த போது, நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமல குணரட்ணா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,'

குமாரசாமிபுரம் கிராமத்தில் வீடு ஒன்றில் நடைபெற்ற கொண்டாட்ட நிகழ்வின் பின்னர் இடம் பெற்ற களியாட்டத்தின் போது மது போதையில் இரண்டு குழுக்களுக்கு கிடையில் ஏற்பட்ட கைகலப்பு பின்னர் வாள் வெட்டுத் தாக்குதலில் முடிந்துள்ளது.

இதன்போது, குமாரசாமி புரம் பகுதியைச் சேர்ந்த 23, 24, 25, ஆகிய வயதுகளையுடைய நான்கு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் 02, பேரும் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் 02, பேரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு தருமபுரம் பொலிஸார் சென்ற போது, தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில், சம்பவ இடத்தில் இருந்து வாள், மற்றும் நெஞ்சாக் எனப்படும் ஆயுதம் உட்பட கைத்தொலைபேசிகளையும் கைப்பற்றியுள்ளதுடன் ; சந்தேகத்தின் அடிப்படையில் தப்பிச் சென்றவர்களின் வீடுகளில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டதுடன், விசாரணைகளையும் முன்னெடுத்து வருவதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-15)

# உதவித்திட்டங்கள் வழங்கல்

(வவுனியா)

வவுனியா,மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குட்பட்டோருக்கு 2இலட்சத்து10ஆயிரத்து 500ரூபா பெறுமதியான உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வெளிச்சம் அறக்கட்டளை மற்றும் சுவிஸ் நாட்டில் இயங்கி வரும் வலுவிழந்தோரைத் தாங்குவோம் எனும் அமைப்பு இணைந்து வவுனியா (ஓமந்தை), மன்னார் (மடு) ஆகிய வலயத்திற்குட்பட்ட பூசாரியர் குளம், செட்டிகுளம் (அரசடி குளம் சின்னக்குளம்), நெளுக்குளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த விசேட தேவைக்குட்பட்டோருக்கு குடும்ப வறுமை நிலையை கருத்திற் கொண்டும் அவர்களுக்கு அத்தியாவசியமான உதவிகள், உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் பா.லம்போதரன், பொருளாளர் செ.மேனதாஸ் மற்றும் வலுவிழந்தோரை தாங்குவோம் அமைப்பின் செயற்பாட்டாளர் சந்திரபாலா மற்றும் மனோகரன், சண்முக சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)




# பூநகரியில் ஏழு கிராம உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக கடமைகளைப் பொறுப்பேற்பு

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 50 வீதமான கிராம சேவகர்கள் பிரிவுகள் வெற்றிடமாகக் காணப்படுகின்ற நிலையில் ஒருவர் இரண்டு மூன்று பிரிவுகளுக்கு தற்காலிகமாக கடமையாற்றும் அவலநிலை இருந்தமையால் பொதுமக்கள் உட்பட கிராம உத்தியோகத்தர்களும் சிரமப்படும் நிலையில் தொடர்ந்தும் இருந்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த வாரம் 4ஆம் திகதி முதல் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு ஏழு கிராம உத்தியோகத்தர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டு கிராம பிரிவுகளில் தற்காலிகமாக கடமையேற்றுள்ளனர்.

இதற்கமைவான ஆலங்கேணி பிரிவிற்கு சு.நிலந்தினி மட்டுவில் நாடு கிழக்கு பிரிவிற்கு திருமதி ச.ஜெசீகா கௌதாரி முனை பிரிவிற்கு வி.ஜெயவிந்தன் முழங்காவில் பிரிவிற்கு சி.சபேசன் நாச்சிக்குடாபிரிவிற்குசு.கஜன் ஜெயபுரம் வடக்கு பிரிவிற்கு அ.பியன் வேணு நேரயர் கிராஞ்சி பிரிவிற்கு திருமதி ஓ.றோசிட யானா ஆகியோர் தற்காலிகமாக கடமையை பொறுப்பேற்றுள்ளனர். இங்கு இவர்கள் தத்தம் பகுதிகளில் தற்காலிகமாக கடமைகளை பொறுப்பேற்று செயற்படத் தொடங்கியுள்ளார்கள். (2-84)

# சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்க!

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி கரைச்சி கண்டாவளை பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகங்களில் கடமையாற்றும்பிற மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 200 இற்கும் மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வரும் நிலையில் தமக்கு சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்து உதவுமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு சகலரும் இணைந்து கையொப்பமிட்டு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இக்கடிதத் தின் பிரதிகளை இணைந்த சேவைப்பணிப்பாளர் கிளி நொச்சி மாவட்ட அரச அதிபருக்கும் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கும் அனுப்பியுள்ளனர்.

எதிர்வரும் வருடாந்த இடமாற்றத்திலாவது தங்களை உள்வாங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதுடன் இவர்களில் கூடுதலானோர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-84)

# சர்வமத செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் குழுக்கூட்டம்

(மன்னார்)

கரித்தாஸ் வாழ்வுதய நிறுவனத்தினால் நடைமுறை படுத்தப்பட்டு வரும் சர்வமத செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டம் அண்மையில் மன்னார் வாழ்வுதயம் பொது மண்டபத்தில் நடைபெற்றது.

சர்வமத ஒன்றிய அரச ஊழியர்கள், மற்றும் சமயத் தலைவர்களுக்கான ஆலோசனைகள் இடம் பெற்றது. வாழ்வுதய சர்வமத செயற்பாடுகளின் இலக்குக் கிராமங்களான அளவக்கை, செம்மண்தீவு, வட்டக்கண்டல், ஆண்டாங்குளம், அடம்பன் ஆகிய கிராமங்களில் இருந்து கிராம அலுவலர்கள், சமயத் தலைவர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் சர்வமத செயற்றிட்டத்தின் நோக்கம் தொடர்பாகவும், கடந்த காலங்களில் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மூலம் அடையப்பட்ட விளைவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. டன் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகளுக்கான திட்டமிடலும், ஆலோசனையும் இடம் பெற்றது.

இத் திட்டமிடலில் சர்வமத சமய விழாக்களை சிறப்பிப்பதற்கான நிகழ்வுகள் தொடர்பாகவும், அரச ஊழியர்கள் மற்றும் சமயத் தலைவர்களுக்கான உறவுப்பால நிகழ்வுகள் தொடர்பாகவும், கலை கலாசார நிகழ்வுகள், கண்காட்சி நிகழ்வுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த நிகழ்வின் மூலம் சர்வமதச் செயற்பாடுகள் கிராம மட்டத்தில் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்த ஏதுவாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (2)

விசேட பொதுக்கூட்டம்

# பூந்துணர் நறவம்-8 மலர்க்குழுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் விசேட பொதுக் கூட்டமும் பூந்துணர் நறவம்-8 மலர்க்குழுக்கூட்டமும் இன்று திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கலாசாரப்பேரவையின் தலைவரும் பூநகரி பிரதேச செயலருமான சி.ச. கிருஸ்ணேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பூந்துணர் சஞ்சிகை மலர் வெளியீட்டுக் குழுவினரையும்கலாசாரப்பேரவையின் சகல உறுப்பினர்களையும்தவறாதுகலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கலைநகரி இளங்கலைஞர்விருதுக்கானகலைஞர்கள் தெரிவும் பரிசீலனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அடுத்த மாத நடுப்பகுதியில்பூநகரி பிரதேச கலாசார விழாஇடம்பெறவுள்ளதாகதெரிவிக்கப்படுகின்றது. (2-84)

# வாணிமோட்டை குளத்திற்குட்பட்ட

# வயல் நிலங்களை விடுவித்து காணிகளற்ற விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்குக!

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புத்து வெட்டுவான் பகுதியில் புதிதாக புனரமைக்கப்பட்ட வாணிமோட்டைக் குளத்தின் கீழான வயல் நிலங்களை விடுவித்து காணிகளற்ற விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்குமாறு கிராம மட்ட அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புத்து வெட்டுவான் பகுதியில் சேதமடைந்து கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட வாணிமோட்டைக்குளம் இப்பகுதி மக்களின் தொடர்ச்சியான கோரிக்கையை அடுத்து புனரமைக்கப்பட்டுள்ளபோதும் இதற்குட்பட்ட பயிர்ச்செய்கைக் காணிகள் இதுவரை விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை.

இதனை வழங்குமாறு காணிகளற்ற விவசாயிக்ள கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த குளத்திற்குட்பட்ட காணிகள் வனவளத்திணைக்களத்தினால் அடையாளப் படுத்தப்பட்ட நிலையில் இக்காணிகளை பகிர்ந்தளிப்பதில் பிரச்சினைகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது குளத்திற்குட்பட்ட 100 ஏக்கர் காணி நெற்செய்கைக்காகவும் இதன் கீழுள்ள இருபது ஏக்கர் வரையான மேட்டுக்காணிகள் காணி அற்றவர்களுக்கு குடியிருப்பதற்காக பகிர்ந்தளிக்கும் பொருட்டு காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு விடுவிக்கப்பட்டிருக்கும் காணிகளை துப்பரவு செய்து பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு பகிர்ந்தளிக்குமாறு காணிகளற்ற விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)



முல்லைத்தீவு மாவட்டத்தில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் மாந்தை கிழக்கு பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து வருடாவருடம் நடத்துகின்ற மாந்தை கிழக்கு பிரதேச செயலக கலாசார விழா நேற்று முன்தினம் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ரஞ்சனா தலைமையில் இடம்பெற்றது. இக் கலாசார விழாவில் இவ்வருடம் தெரிவு செய்யப்பட்ட கலைஞர் ஒருவர் கௌரவிக்கப்பட்டதோடு, விசேடமாக மாந்தை எழில் புகைப்படத் தொகுப்பும் வெளியிட்டு வைக்கப்பட்டது. மாந்தை கிழக்கு பிரதேசத்தில் காணப்படுகின்ற இயற்கை எழில்கள் மற்றும் வரலாற்று தொன்மையை வெளிப்படுத்துகின்ற புகைப்படங்கள் அடங்கிய தொகுப்பான மாந்தை எழில் புகைப்படத் தொகுப்பை பிரதேச செயலாளர் வெளியிட்டு வைக்க முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் பெற்றுக்கொண்டார். (படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)

# காணி உரிமைப்பத்திரங்களை வழங்கி வீட்டுத்திட்டங்களை பெற்றுத்தாருங்கள்

## பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேவிபுரம் பகுதியில் மத்திய வகுப்புத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட காணிகளில், நீண்டகாலமாக குடியிருந்து வரும் சுமார் 65 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிரந்தரவீட்டுத்திட்டங்கள் மற்றும் அடிப்படை வசதிகளின்றி பெரும் சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ள அவர்கள், தமக்கான காணி உரிமைப்பத்திரங்களை வழங்கி வீடடுத்திட்டங்களை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேவிபுரம் பகுதியில் ஏற்கனவே மத்திய வகுப்புத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பயிர்ச்செய்கைகளுக்கு உட்படுத்தப்படாத காணிகள் காடுகள் மணடிக்காணப்பட்ட நிலையில் காணி உரிமையாளர் அல்லாத சுமார் 65 இதற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அவற்றை துப்பரவு செய்து சுமார் 30 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்துவருகின்றனர்.

அதாவது பாரதி வீதி, விக்கிகுடியிருப்பு, நடேசம்மான் குடியிருப்பு, கணேஸ் வீதி, ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற மேற்படி குடும்பங்கள் கடந்த எட்டு வருடங்களாக தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வாழ்ந்து வரும் மக்களுக்கு காணி உரிமைப்பத்திரங்கள் இன்மை காரணமாக மலசலகூடவசதி குடிநீர் வசதி எதுவுமே ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை

இதனால் இவ்வாறான வீடுகளில் வாழ்ந்து வருகின்ற. மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணித்தாய்மார், குழந்தைகள், சிறுவர்கள் முதியோர் என பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தமக்கான காணி உரிமைப்பத்திரங்களை வழங்கி வீட்டுத்திட்டங்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்டமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# பிறவுண்வீதி 2ஆம் ஒழுங்கை புனரமைப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் தெற்கு பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கை பல வருடங்களின் பின்னர் யாழ். மாநகரசபையால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

260 மீற்றர் நீளமுடைய குறித்த வீதி, பிறவுண் வீதியில் ஆரம்பிக்கப்பட்டு ரயில்வே ஒழுங்கையில் நிறைவடைகிறது. 35 குடும்பங்கள் வசித்துவரும் குறித்த பகுதியில் அமைந்துள்ள இந்த வீதியால் பொது மக்கள் மழைகாலத்தில் பயணம் செய்ய முடியாத நிலை காணப்பட்டது.

இந்த வீதியில் தான் வலம்புரிப் பத்திரிகை காரியாலயமும் அமைந்துள்ளது. வீதி சீரற்று காணப்பட்டதால் பொதுமக்கள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். பல வருடங்களாக மாநகரசபையிடம் இது தொடர்பில் மக்கள் கோரிக்கைவிடுத்து வந்தனர்.

இந்த நிலையில் குறித்த வீதியைப் புனரமைக்க வேண்டும் என் அண்மையில் மாநகரசபை உறுப்பினர் வரதராஜா பார்த்தீபனும் மாநகர சபையில் கோரியிருந்தார். இதனையடுத்து குறித்த வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. (இ-9)

# இருட்டுமடு வீதியின் நிலையோ படுமோசம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் கிராமசேவையாளர் பிரிவிலுள்ள இருட்டுமடு கிராமத்திற்கு பயணிக்கின்ற பிரதான வீதியானது கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக புனரமைப்பு செய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

இதன் காரணமாக இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு கிராம மக்களால் பலமுறை எடுத்துக் கூறப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் மாரிகாலத்திற்கு முன்பாக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இருட்டுமடு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். குறித்த வீதியான உடையார்கட்டு சந்தியில் இருந்து நான்கு கிலோமீற்றர் நீளமான வீதியாகும். (2-281)

# செவ்வண்டுத்தாக்கத்தை கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்றிட்டம்

(வவுனியா)

தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் இவ்வருட செப்டெம்பர் புரட்டாதி மாதம் தென்னை தின விழாவை முன்னிட்டு வவுனியா பிராந்திய காரியாலய உத்தியோகத்தர்கள் இணைந்து தெரிவுசெய்யப்பட்ட மகிழங்குளம், ஓமந்தை, மருதமடு, பாலமோட்டை போன்ற கிராமங்களில் தென்னை மரங்களைத் தாக்கும் செவ்வண்டுத்தாக்கம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்திட்டம் நாளை செவ்வாய்க்கிழமை 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பிரதேசத்தில் தென்னைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் தென்னை பயனாளிகள் அனைவரும் மேற்படி பிரதேசத்திலுள்ள பொது நோக்கு மண்டபங்களுக்கு காலை 9 மணிக்கு சமுகமளித்து தங்களுடைய பிரதேசத்திலுள்ள செவ்வண்டை முற்றாக அகற்றுவதற்கு தென்னைப்பயிர்ச்செய்கை சபையுடன் இணைந்து ஒத்துழைப்பு வழங்குமாறு வவுனியா, மன்னார் மாவட்ட பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன் இவ்விழிப்புணர்வுச்செயற்றிட்டத்திற்கு வவுனியா மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் லுணுவில தலைமைக்காரியாலயத்திலுள்ள பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2)

# மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள், உபகரணத்தொகுதிகள் வழங்கிவைப்பு




(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 39 பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் 19 பேருக்கு பாடசாலை உபகரணத் தொகுதிகளும் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனின் வேண்டுகோளுக்கமைவாக தமிழ் கல்விச் சேவை சுவிட்சர்லாந்து அமைப்பின் நிதியுதவியில் பெற்றுக்கொள்ளப்பட்ட இந்தப் பொருட்கள் நேற்று முன்தினம் உடையார்கட்டு பாரதி சனசமூக நிலைய கட்டடத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

பாரதி சனசமூக நிலையத் தலைவர் த.சிவமாயஜெயம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் திருச்செல்வம், புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரி சுப்பிரமணியேஸ்வரன், ஓய்வு நிலை அதிபர் விக்னேஸ்வர மூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பாடசாலை உபகரணத் தொகுதிகளையும் வழங்கி வைத்தனர். (2-281)

# சர்வதேச நாடுகள் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## உறவினர்கள் வலியுறுத்து

(பனிக்கன்குளம்)

புலம்பெயர்நாடுகளிலுள்ள தமிழ் மக்கள் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை தொடர்ந்தும் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் சர்வதேச நாடுகள் காணாமல் போனோர் விடயம் தொடர்பில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போதும் அதற்கு பின்னரான காலப்பகுதியிலும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கடத்திச்செல்லப்பட்ட உறவுகளை மீட்டுத் தருமாறு கோரி காணாமலா க்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமிழர் தாயகப் பிரதேசங்களில் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் அரசாங்கம் இதுவரை தீர்வு வழங்காத நிலையில் காணாமல் ஆக்கப்படவர்களுக்கான நிரந்தர அலுவலகம் ஒன்றை அரசாங்கம் நிறுவியுள்ளதுடன் வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் நடத்திய கலந்துரையாடல்களை மையப்படுத்தி இடைக்கால அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்துள்ளது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமக்கான அலுவலகம் ஒன்றை ஆரம்பித்து தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான ஒரு சூழலில் காணாமல் போன தமது உறவுகள் தமக்கு கிடைப்பதற்கு புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழ் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாகப்பட்ட உறவுகளின் சங்கத்தின் இணைப்பாளர் மரியசுரேஸ்ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இராணுவத்தினரிடம் எமது உறவுகளை கையளித்ததற்கான நேரடி சாட்சியாக நாம் காணப்படுகின்ற நிலையில், கையளித்த உறவுகளையாவது அரசாங்கம் முதலில் விடுவிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொணடுள்ளார். (2-281)

# இரண்டு மோட்டார் சைக்கிள்கள் விபத்து; வீதியில் சிதறிக்கிடந்த பியர் போத்தல்கள்



(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தின் கூமாங்குளம் சதொச சந்தியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளாகின. இவ் விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதுதொடர்பில் தெரிய வருவதாவது.

கூமாங்குளத்திலிருந்து வவுனியா நகர் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் வவுனியா நகரிலிருந்து கூமாங்குளம் நோக்கி பியர் போத்தலை ஏற்றிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


இவ் விபத்தில் இரு மோட்டார் சைக்கிள்களும் பகுதியளவில் சேதமடைந்ததுடன் பியர் போத்தல்களும் வீதியில் சிதறிக்கிடந்தன. (2-281)



யாழ்.அடைக்கல அன்னையின் திருச்சொரூப தேர்ப்பவனி பக்தர்கள் புடை சூழ பக்தி வணக்கத்துடன் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. (படங்கள்:-குருநகர் செய்தியாளர்)

# அரசிற்கும் பௌத்த சாசனத்திற்கும் இடையே பிணைப்பை ஏற்படுத்த புதிய பொறிமுறை

## பிரதமர் ரணில் வலியுறுத்து



கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

(கொழும்பு)

**அரசாங்கத்துக்கும் பௌத்த சாசனத்துக்கும் இடையில் பிணைப்பை ஏற்படுத்தக் கூடியவாறு புதிய பொறிமுறையொன்றை ஏற்படுத்த வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்துக்கும் பௌத்த சாசனத்துக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துவதற்கு பௌத்த சாசன பாதுகாப்புச் சபையொன்றை நிறுவுவது அவசியமாகும் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

விகாரையின் நிர்வாகம் மற்றும் விகாரை தொடர்பில் கடமையாற்றும் தேரர்களுக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## உப்பு உற்பத்தி பாரிய வீழ்ச்சி

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கச்சக் கொடித் தீவு, முனைச்சேனை பகுதிகளில் அதிகளவான உப்பளங்கள் காணப்படுகின்றன.

உப்பு உற்பத்திக்கான நிர்ணய விலை சீரற்ற காலநிலை காரணமாக உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

கச்சக் கொடித் தீவு உப்பளத்தில் சுமார் 150 ஏக்கருக்கும் மேலான நிலப்பரப்பில் உப்பு உற்பத்தி இடம்பெற்று வருகிறது.

2001 ஆம் ஆண்டிலிருந்து கிண்ணியாவில் உப்பு உற்பத்தியை செய்து வருகிறோம். இருந்த போதிலும் தங்களுக்கான உரிய விலை கிடைப்பதில்லை என உப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். இம்முறை காலநிலையின் சீரற்ற நிலைமை காரணமாக பெரும்பாலான உப்பு உற்பத்தி நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மழை காலங்களில் இதனை மேற்கொள்ள முடியாது. கோடை காலங்களில் மாத்திரமே உற்பத்திகளை மேற்கொள்ள முடியும்.

உப்பு உற்பத்தி பகுதிகளை உள்ளடக்கிய உட்கட்டமைப்பு வசதிகளும் இங்கு இன்மை காரணமாக பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

## ஐ.தே.கவின் தலைமை கிடைக்கும் போது இளைஞர்கள் முதுமை அடைவர் - மகிந்த

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை எதிர்வரும் 2030 இல் புதிய தலைமுறையினருக்கு வழங்கும் போது அக்கட்சியில் தற்போதுள்ள இளையவர்கள் முதுமையடைந்து விடுவார்கள் என்பதை யாருக்கும் விளக்கத் தேவையில்லையென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



மக்கள் இன்று பாரியளவில் அப்பாவிகளாக்கப்பட்டு ஒடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த அப்பாவி மக்கள் இதனைப் புரிந்து கொள்வதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி கூறும் 2020 முதல் 2030 வரையான காலம்எப்படிஎன்று மக்கள் கருதுவதற்கு முன்னர் நல்லாட்சி அரசாங்கம் எப்படியானது என்பதை மக்கள் விளக்கத்துக்கு எடுத்து விட்டனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தந்தைக்காக வந்து உயிரை விட்ட இருவரின் இறுதிச் சடங்கில் நாமல்



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக மகிந்தவின் பங்கேற்புடன் கொழும்பில் கடந்த 5ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட "ஜனபலய கொலம்பட்ட" என்ற பேரணியில் தமிழர் உள்ளிட்ட இருவர் உயிரிழந்திருந்தனர்.

ஹற்றனைச் சேர்ந்த ஜகத் விமலசூரிய மற்றும் உடபுஸ்ஸல்லாவ பகுதியைச் சேர்ந்த வசந்த ஆகியோரே இந்தப் பேரணியில் உயிரிழந்திருந்தனர்.

இவர்களுடைய இறுதிச் சடங்கில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கலந்து கொண்டு தமது அனுதாபங்களை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பான புகைப்படங்கள் சமூகவலைத்தளங்களில் வெளியாகி உள்ளன.

இதேவேளை, மகிந்த தலைமையிலான குழுவினர் கொழும்பை முடக்கும் வகையில் முன்னெடுத்த போராட்டத்தில் மதுபோதையில் இருந்த 81 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நகர சபையின் அழைப்பு உதாசீனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் கொல்களம் மற்றும் இறைச்சிக் கடையை குத்தகைக்கு எடுத்திருப்பவர் நகர சபையினர் விடுத்த இரண்டு அழைப்பிற்கும் நகரசபைக்கு வருகைதராமல் அழைப்பினை உதாசீனம் செய்துள்ளார்.


இது தொடர்பாக இறைச்சிக்கடை உரிமையாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ஜெயக்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

சாவகச்சேரியில் இறைச்சிக்கடை தொடர்பாக தொடர்ச்சியாக சில உறுப்பினர்களால் குற்றஞ்சுமத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டு உண்மைத் தன்மையை நிரூபிக்க வேண்டும்.

மேலும் இறைச்சிக்கடை உரிமையாளருக்கு ஒரு அழைப்பு கடிதத்தை விடுத்து அதற்கும் அவர் வருகை தராமல் உதாசீனம் செய்வாராக இருந்தால் சபை தீர்க்கமான முடிவினை எடுத்து இறைச்சிக் கடை உரிமையாளருடனான ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டும்.


நகரசபையின் கீர்த்தி புனிதத் தன்மை பேணப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை இறைச்சிக் கடை மின்சாரக் கட்டணம் 35ஆயிரம் ரூபாய் செலுத்தப்படாமல் உள்ளதாக சபையில் தெரிவிக்கப்பட்டது. (இ-30)



வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனின் வேண்டுகோளின் பேரில் வடமாகாண சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 1.2 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள ஏழாலை கிழக்கு இசிதோர் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு முன்பள்ளிக்கான அடிக்கல்லை நாட்டினார். மாகாணசபை உறுப்பினருடன் பிரதேச பங்குத்தந்தை, முன்பள்ளி நிர்வாகிகள் ஆகியோரும் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டினர்.

## மசகு எண்ணை குழாயில் கசிவு



(கொழும்பு)

முத்துராஜவெல நோக்கி மசகு எண்ணை எடுத்துச் செல்லும் குழாய் ஒன்றில் கசிவு ஏற்பட்டுள்ளது.

குறித்த குழாயை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் தம்மிக ரணதுங்க தெரிவித்துள்ளார். (இ-7)





வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ தீர்த்தத்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# நல்லூர்க் கந்தனுக்கு இன்று பூங்காவனத் திருவிழா



## துயரங்கள் நீங்க அருள் தருவாய்

அடியார்களின் குறை கேட்க தேரிலுலாவரும்
நல்லூரில் நல்லாட்சி புரியும் முருகா
வாடிச் சோர்ந்து நிற்கும் எம்மினத்தின்
குறைகளையுமின்று கேளுமையா
தேடிவரும் போதைப் பொருட்களின் பாவனையால்
வன்முறைகள் ஏராளம் வாள் வெட்டும் தாராளம்
பாடித் துதிக்கின்றோமித் துயரங்கள் நீங்கிட
அருள் தர வேண்டுகின்றோம்.

**சி.காசிப்பிள்ளை,**
**கொடிகாமம்.**

## திருமுருகா திருவருள் தாராய்

ஆடி அசைந்து வரும் அழகான தேரிலே
ஆறுமுகா உன் அழகுத் திருக்கோலங்காண
கோடி கண்கள் வேண்டுமை குமரேசா
குறத்தி மணாளனே கோல மயில் வாகனனே
தேடி வந்தோம் உன் பதியை திருமுருகா உந்தனது
திருவருளைத் தந்தெமையாண்டருமையா
வாடிடாமல் எமைக்காத்து வளம் பல தந்துமே
நல்வரமருள்வாய் நல்லூர் பெருமானே

**வே.இராமர்,**
**கைதடி நாவற்குழி.**

## இ.போ.ச.வழங்கிய 3 இலட்சத்தை உதயசூரியன் கிராமத்திற்கு ஒதுக்குக

(சாவகச்சேரி)

இலங்கை வட பிராந்திய போக்குவரத்துச் சபை, சாவகச்சேரி நகரசபைக்கு 12 வருடங்களாக பேருந்து தரிப்பிடத்திற்கான வாடகைப் பணத்தை செலுத்தாமல் இலாபம் அற்று இருப்பதாக காரணம் கூறி வந்தது.

இந் நிலையில் நகரசபையில் இது தொடர்பாக கலந்துரையாடி வாடகை பணத்தை குறைத்து வசூலிப்பது என்ற நிலைக்கு வந்து வட பிராந்திய போக்குவரத்துச் சபையினருடன் பேசி கிடப்பில் இருந்த வாடகைப் பணத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளனர். 3 இலட்சம் ரூபாயை வாடகைப் பணமாக நகரசபையினரிடம் வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக நகரசபை உறுப்பினர் கஜிதன் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த மூன்று இலட்சம் ரூபாய் நிதி எதிர்பாராத விதமாக கிடைக்கப்பெற்ற நிதி. ஆகவே இந்த நிதியினை மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படும் உதயசூரியன் கிராம வீதி திருத்தம், மலசல கூடம் அமைத்தல் ஆகியவற்றுக்கு பயன்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (இ-30)

## கும்பாபிஷேக விஞ்ஞாபனமும் முகப்புக் கோபுரத் திறப்பும்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேக விஞ்ஞாபனம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி 3 நாட்கள் இடம்பெறும். கும்பாபிஷேக ஆரம்ப தினமான இன்று (புங்குடுதீவு 12 ஆம் வட்டாரம் இரட்டைத் தெருச் சந்தியில்) ஆலயத்திற்குச் செல்லும் பிரதான பாதையின் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ கண்ணகைபுரம் முகப்புக் கோபுரத்திறப்பு விழா காலை 9.30 முதல் 10.30 மணிவரை இடம் பெறும் என ஏற்பாட்டாளர் கள் அறிவித்துள்ளனர். (இ-7)

## சிறப்புப் பட்டிமண்டபம்

(யாழ்ப்பாணம்)

வதிரி உல்லிய நொல்லை கண்ணகை அம்மன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு 12 ஆம் திகதி திருவிழாவாகிய இன்று இரவு 7 மணிக்கு சிறப்புப் பட்டிமண்டபம் நடைபெறும். சமுதாய முன்னேற்றத்திற்கு பெரிதும் அவசியமானது அறிவியலா, ஆன்மீகமா எனும் தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் இப்பட்டிமண்டபம் நடைபெறும்.

அறிவியல் என்ற தலைப்பில் ச.லலீசன், செ.கர்சன், சி.சஜிவன். ஆன்மீகம் என்ற தலைப்பில் பேராசிரியர் ரி.வேல்நம்பி, ஆர்.ராஜேஸ் கண்ணா, ஜீவா சஜீவன் ஆகியோர் வாதிடுவர். (இ)

## சாரணர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இலங்கை சாரணர் சங்க ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தில் சேவையாற்றிய சாரணர்கள், குருளைச் சாரணர்கள் மற்றும் திரி சாரணர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் சிறந்த சேவை புரிந்தவர்களுக்கான பதக்கம் வழங்கும் நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும். (இ-7)

**நல்லூர் ஆலயச் சூழலில்**

## நாத சங்கமம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகனின் பூங்காவன திருவிழாவை முன்னிட்டு உலக புகழ் பெற்ற நாதஸ்வர வித்துவான் நாதஸ்வர இளவரசன், கோண்டாவில் பஞ்சமூர்த்தி குமரன் வழங்கும் "நாத சங்கமம்" சிறப்பு நிகழ்ச்சி இன்று இரவு 7 மணிக்கு மகேஸ்வரன் மண்டபத்தில் நடைபெறும். (இ-9)

## 'ஸ்ரீ வள்ளி திருமணம்' இசைப் பேருரை இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நல்லை ஆதீன குருமகா சந்நிதானத்தின் அருளாசியுடன் நல்லூர் சைவ மகா சபை நடத்தி வரும் "கந்தவேற்புராணம்" பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு, மாவை ஆஸ்தான வித்துவான், கானகதாவாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா "ஸ்ரீவள்ளி திருமணம்" பற்றி சிறந்த பக்கவாத்திய சகிதம் தெய்வீக தொடர் இசைப் பேருரை நிகழ்த்துவார். (இ)

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.45 மணியிலிருந்து இரவு 8.15 மணிவரை "தெய்வீக இசையரங்கு" நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று இசைக்கச்சேரி பாட்டு- சி.பத்மலிங்கம், வயலின்- சு.கோபிதாஸ், மிருதங்கம்-எம்.சிதம்பரநாதன், கடம்- கு.ரவிசங்கர், கெஞ்சிரா-நா.சிவசுந்தர சர்மா ஆகியோர் வழங்குவர். (இ)

## நல்லைக் குமரப் "பா"

நாதா வுன்னை நயந்தேற்றி
நற்கவி வாணர் நவின்றதெலாம்
காதாற் கேட்டுக் களிப்புற்றுக்
கவிதை பாட உவப்புற்றேன்
ஊதாக் குழலும் ஓசைதரும்
உந்தன் நாமம் ஓதிடிலோ
வேதா வார்த்தைச் சரந்தந்தாய்
விழைந்தேன் நல்லைக் குமரப்பா!

**கலாபூஷணம்,**
**சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்**



# யாழ்.இந்து மகளிர் கல்லூரி ப

1943-2



### கல்லூரி ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ.பா.நகுலேஸ்வரக்குருவின் ஆசிச் செய்தி

நங்கையர் வாழ்வின் இலட்சியமனைத்தும் நல்கிடும் கல்லூரியாம் எமது யாழ்.இந்து மகளிர் கல்லூரி அன்னை 1943 ஆம் ஆண்டிலிருந்து பெருவளர்ச்சியடைந்து பவளவிழாப் பொலிவு காணும் இவ்வேளையில் கல்லூரியின் ஆலய குருவாகிய நான் ஆசியுரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

எத்தனையோ அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்போடும் தளராத முயற்சிகளாலும் போற்றி வளர்க்கப்பட்ட எமது கல்லூரித்தாய் இன்று பவள விழா காண்கின்றாள் என்ற செய்தி அனைவருக்கும் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அளிப்பதாகும்.தன்னுடைய வளர்ச்சிப்பாதையில் 75 வருடங்கள் நிறைவுசெய்து பொலிவு பெற்றுள்ள உமது கல்லூரி சகல வளங்களும் நிறைவாகப்பெற்று நூற்றாண்டு விழா நோக்கிப் பயணிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கல்லூரி மென்மேலும் வளர்ச்சியடைந்து சீலமிகு பெரும் சிறப்புப் பெற்று ஓங்கக் கல்லூரி நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகர் அருள்புரிய வேண்டும் என்று ஆசி வழங்குகின்றேன்.



### Northern Province governor Reginald Cooray 's message to 75th anniversary celebration of Jaffna Hindu Ladies' College

It gives me great pleasure to offer this message on the occasion of the 75th anniversary celebration of Jaffna Hindu Ladies' College. One of the distinguished schools in Nothern Province of Sri Lanka.

The great service and participation of the Jaffna Hindu Ladies' College community should be admired during this 75th anniversary celebration. It has a long history to bring up the school to its upliftment as an academically effective institute and a proud record of achievement that will place it among the school of excellence in th country.

During the last decades Jaffna Hindu Ladies' College has achieve a number of academic successes. Dedicated leadership of the past and present principals and commitment of their teaching staff have enabled the school to accomplish their mission goals.

On this happy occasion of their 75th anniversary celebration I wish them continued success in the future.



### நீதியரசர் /முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

அமெரிக்க மற்றும் தென்னிந்தியத் திருச்சபைகளின் வருகையினால் உருவாக்கப்பட்ட பாடசாலைகளில் யாழ்ப்பாண சைவசமய பெண் சிறார்கள் கல்வி கற்பதன் மூலம் சைவ சமய பாரம்பரியங்களில் இருந்து அந்நியப்பட்டுப் போவதைத் தவிர்க்கும் நோக்கில் சைவசமய தமிழ்ப் பண்பாட்டுடன் கூடிய ஆங்கில மொழிக் கல்வி அறிவையும் பெண் பிள்ளைகள் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில்;உருவாக்கப்பட்டதே யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆகும்.

1935 இல் யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களுடன் இணைந்த பாடசாலையாக இப் பெண்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போதும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்க 1943 இல் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள பொன்னாலயம் என்னும் வீட்டில் தனியாக பெண்களுக்கான பாடசாலை இயங்கத் தொடங்கியதாக வரலாறுகள் கூறுகின்றன.

கல்வி, படைப்பாற்றல், உடல், உள, ஆன்மீக மேம்பாட்டினூடாக எதிர்கால சவால்களை எதிர்கொள்ளத் தக்க ஆளுமைமிக்க மாணவர்களை உருவாக்கும் ஒரு உன்னத நோக்குடன் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்ற இக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தேசியப் பாடசாலைகளின் தரங்களிற்கு ஒப்பாக வளர்ச்சி கண்டிருப்பதும் கல்வி அறிவூட்டலில் மேம்பட்டிருப்பதும் மகிழ்வுடன் நினைவு கூரப்படுகின்றது. இந்த மகளிர் கல்லூரியானது மென்மேலும் வளர்ச்சியுற்று ஒரு தேசிய பாடசாலையாக உயர்ச்சி பெறுவதுடன் இதன் கல்விச் சேவைகள் சிறப்புற நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.



### யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் யாழ்.இந்துவிற்கென ஒரு நீண்டகாலப் பாரம்பரியம் உண்டு. யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதன் தொடர்ச்சியாய் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை இவை நான்கும் ஒரு சகோதரத்துவப் பிணைப்பில் இற்றை வரை கல்விப் புலத்தில் ஏகப்பட்ட சாதனைகளைப் படைத்து வருகின்ற பாடசாலைகள் ஆகும்.அதன் தொடர்ச்சியாக யாழ்.இந்து மகளிர் கல்லூரி பவளவிழா ஆண்டைக் கொண்டாடிக் கொண்டிருப்பது உண்மையில் மகிழ்ச்சி தருகிறது. மகளிர் பாடசாலைக்கென எம் மண்ணில் நீண்ட வரலாற்றுப் பின்னணிகள், பாரம்பரியங்கள் ஏராளமுண்டு. ஆயினும் யாழ்.இந்து மகளிர் கல்லூரி கல்வி, கலை, விளையாட்டுத்துறை என அனைத்துத் துறைகளிலும் பன்னெடுங்காலமாக முத்திரை பதித்து வருகின்றது. இக்கல்லூரி எமது யாழ்.மண்ணில் முன்னோடிப் பாடசாலையாக சிறந்து விளங்கி மென்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.



### வடமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்தின் சைவ சமயப் பாரம்பரியங்களில் இருந்தும் பெண் குழந்தைகள் அந்நியப்பட்டுப் போவதைத் தவிர்க்கும் வகையில் 1943 இல் ஒரு வீட்டில் தனியான ஒரு பெண்கள் பாடசாலையாக இயங்கிய யாழ்.இந்து மகளிர் கல்லூரி இன்று தனது பவள விழாவைக் கொண்டாடுகின்றது.

"பல்பரிமாணச் செயற்பாடுகள் ஆளிடைத் தொடர்புகளின் ஊடாக அறிவு, நன்னடத்தை, விழுமியம் சார் கல்வியை வழங்குதல்" என்பதைப் பணிக்கூற்றாகக் கொண்டு சிறப்புடன் இயங்கி வருகின்ற ஒரு பாடசாலையாக இந்து மகளிர்களுக்கான ஒரு பாடசாலையாகக் கடந்த 75 ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகின்ற யாழ். இந்து மகளிர் கல்லூரி, இன்று தனது 75 ஆவது வருட நிறைவு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடும் இவ் வேளையில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்க ளைத் தெரிவித்து பவள விழா நிகழ்வுகளும் அது தொடர்பாக வெளியிடப்படும் மலரும் சிறக்க வாழ்த்துகின்றேன்.



### கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழ்ப் பண்பாடும் வாழ்க்கைக்குத் தேவையான விழுமியம்சார் கல்வியையும் ஆங்கில மொழிமூலம் பெறத்தக்க வகையில் பெண் பிள்ளைகளுக்கென நிறுவப்பட்ட இக்கல்லூரி யாழ்.நகரின் பெயர் பெற்ற கல்லூரியாகத் திகழ்ந்து வருகின்றது. இக்கல்லூரி வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், சமூக சேவையாளர்கள் எனப் பலதரப்பட்ட பதவிகளை அலங்கரிக்கும் பெருந்தகைகளை உருவாக்கியுள்ளது. இக்கல்லூரியின் பழைய மாணவிகள் பலர் தமது நன்றியுணர்வாக கல் லூரிக்கு பல பணிகளை செய்து கல்லூரியின் வளர்ச்சிக்கு பங்காற்றியுள்ளனர். இன்று 2364 மாணவிகளைக் கொண்டுள்ள இக்கல்லூரி பல சிறப்புக்களுடன் மிளிர்ந்து வருகின்றமை சிறப்பான விடயமாகின்றது.

. இக்கல்லூரி கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் மேலும் வளர்ச்சியடைந்து பல சாதனைகளைப் படைக்கவும் பவளவிழா நிகழ்வுகள் சிறப்பாக அமையவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



### ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அருளாசிச் செய்தி

பல வரலாறு களிற்கு தன்னை ஆளாக்கிய பாடசாலை அன்றும் இன்றும் என்றும் ஒழுக்க விழுமியங்களிலும் கல்விச் செயற்பாட்டிலும் ஏனைய துறைக ளிலும் தனக்கென இடத்தை வகித்துக் கொண்டு செயலாற்றி வருவது அனைவரது உள்ளத்திலும் கவனத்திற்குரியது. இன்று பவள விழாக் காணும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பணியைச் சிறப்பிக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் அன்போடு சேர்ந்த இறையாசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இனிய அன்பு"



### மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அவர்களின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்து சைவ சமயப் பெண் பிள்ளைகள் சைவப் பாரம்பரியத்துடன் கூடிய கல்வியைப் பெற வேண்டும் எனும் நன்நோக்கில் 1943 இல் தற்போதைய இடத்தில் இயங்க ஆரம்பித்த இப்பாடசாலை 1962 ஆம் ஆண்டில் அரசினால் பொறுப்பேற்கப்பட்டது.

படிப்படியாக வளர்ச்சி பெற்ற இப்பாடசாலை இன்று யாழ்.வலயத்தில் பெண்களுக்கான தனித்துவம் மிக்க பாடசாலையாகத் திகழ்கிறது. க.பொ.த. (உ.த) இல் நான்கு பிரிவுகளையும் கொண்டதாக 2300 இற்கு மேற்பட்ட மாணவிகள் கல்வி கற்கின்ற பாடசாலையாக இப்பாடசாலை திகழ்கின்றது. இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவிகள் உயர்தொழில் புரிபவர்களாகவும் சமூகத்தில் உயர் அந்தஸ்து மிக்கவராகவும் இலங்கையிலும் பிற தேசங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். பவள விழா காணும் இப்பாடசாலை மேலும் வளர்ச்சி பெற்று மகளிருக்கு சிறந்த கல்வியை வழங்க வாழ்த்துகின்றேன்,



திருமதி வி
சிவகுரு
(நிறுவ

சைவமும் தமிழும் பொலிவுற்று விளங்க, நாவலர் பெருமான் காட்டிய நல்வழியை பின்பற்றி யாழ். இந்துக் கல்லூரி அதிகார சபையினர், யாழ். குடாநாட்டில் 13 கல்லூரிகளை நிறுவி நிர்வகித்து வந்தனர். இந்து சமயச் சிறுமிகளுக்கு தனியாக ஒரு மகளிர் கல்லூரி உருவாக வேண்டும் என்ற அவர்களின் நீண்டகாலக் கனவு நிறைவேற, 1943 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10 ஆம் நாள், அதிகாரசபை நிறுவிய மகளிருக்கான ஒரே ஒரு கல்லூரி தான் எங்கள் யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

யாழ்.இந்துக்கல்லூரியில் இருந்து பிரிந்து ஒரு கிளையாக இந்துக் கல்லூரியுடனும் அத்துடன் இணைந்த ஏனைய பாடசாலைகளுடனும், அதிகாரசபையின் நிர்வாகத்தின் கீழ், இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக கஸ்தூரியார் வீதியிலுள்ள இல்லம் ஒன்றில் இந்து மகளிர் கல்லூரி முதன் முதலாக இயங்கத் தொடங்கியது.

அந்நாளில் யாழ்.இந்துவின் அதிபராக இருந்த துணிவும், ஆற்றலும் மிக்க திரு.A. குமாரசுவாமி அவர்களே, இக்கல்லூரியின் முதல் அதிபராகக் கடமை புரிந்து நிற்க, செல்வி காயத்திரி பொன்னுத்துரை அவர்கள் (திருமதி காயத்திரி கணேஸ்) தற்காலி அதிபராக, கல்லூரியின் முன்னேற்றத்தில் கருத்துடையவராகச் செயற்பட்ட பொழுதே சிறிதளவில் ஒரு விடுதியையும் ஆரம்பித்து வைத்தார். 8 ஆசிரியர்களையும், 110 மாணவிகளையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியில் நான்கு தொடக்கம் எட்டாம் வகுப்பு வரையான வகுப்புக்களே இருந்தன.

விசாலமான காணியில்...

கல்லூரியில் மாணவர் எண்ணிக்கை கூடியதன் காரணமாக கல்லூரி 1944 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் நாள் இந்துவின் விளையாட்டு மைதானத்திற்கு மாற்றப்பட்டது. அவ்வேளை இக் கல்லூரியின் அதிபராக செல்வி முத்து அச்சையா அவர்கள் கடமையாற்றினார். வகுப்புக்கள் சிரேஷ்ட கல்லூரித் தராதரப் பத்திர வகுப்பு வரை அதிகரித்தன. இந்து மகளிர் கல்லூரி இட நெருக்கடியால் அவதிப்படுவதை அறிந்த திருமதி விசாலாட்சி சிவகுருநாதர் என்ற அம்மையார் இந்து சமய கலாசார பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட மகளிர் கல்லூரி ஒன்றை நிறுவ வேண்டும் என்ற தனது உயரிய எண்ணம் செயற்படத் தக்க வகையில் அன்புள்ளம் கொண்டு அரசடி வீதியில் தனக்கு உரித்தாக இருந்த (24 பரப்பு) நிலப்பரப்பைக் கல்லூரிக்கு என அன்பளிப்புச் செய்தார். அம்மையார் அவர்களே எங்கள் கல்லூரி ஸ்தாபகர் என்னும் பெருமையையும் பெற்றார். இவரது கணவர் இ.சிவகுருநாதர் அவர்களும் அவரது நெருங்கிய உறவினர் திருமதி வள்ளியம்மா சிவகுரு அவர்களும் 16 நிலப்பரப்புக் காணியை நன்கொடையாகத் தந்து உதவினர். காப்புக் கடவுளாகிய விநாயகருக்கு இராஜவரோதய விநாயகர் கோவிலும் கல்லூரி வளவினுள் ஆரம்பத்திலேயே இருந்தது ஒரு பிரசாதமே.

மேலதிகமான 60 பரப்பு நிலத்தை இந்துக் கல்லூரி அதிகார சபை
சுற்றாடலில் வசித்த அயலவரிடம் குறைந்த விலைக்கு வாங்கினர்.

1945 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7 ஆம் நாள் எங்கள் கல்
முன்னாள் முகாமையாளர் சேர்.வைத்தியலிங்கம் துரைசாமி அவர்க
அடிக்கல் நாட்டப்பட்டது. அரசடி வீதியில் உள்ள நிலப்பரப்பில் கிடுகு
வேயப்பட்ட வகுப்பறைகளைக் கொண்ட கல்லூரியில் மாணவிகள்
யெடுத்து வைத்த நன்னாள் அன்றைய தினமேயாகும்.

கல்லூரி அதிகார சபை உறுப்பினர்கள் கட்டடங்களுக்கான நிதி
சேர்ப்பதற்கு அயராது சலியாது உழைத்ததன் பயனாக ஆரம்ப
வகுப்புக்கள் இருந்த நிலைமை விரைவில் மாறி அழகிய கட்டடங்கள
காட்சி தந்தன. கல்லூரி உயரத் தங்கள் நற்சேவையை நல்கிய அ
சபையினரே கல்லூரியை உருவாக்க வழிவகுத்த சிற்பிகள் என்
பெருமைக்கு உரியவர்களாவர்.

எங்கள் கல்லூரிக்குக் கடந்த காலங்களில் அளப்பரிய சேவை




ஆற்றிய அதிபர் பெருமக்களை நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றே

1945 ஆம் ஆண்டு திருமதி ஜென்மாராணி சிற்றம்பலமும் 1946
ஆண்டு தொடக்கம் 1948 வரை அமெரிக்கப் பெண்மணி திருமதி கிள
மொட்வாணியும் அதிபர்களாகக் கடமையாற்றிய காலங்களில் கல்
பிரபல்யம் அடையத் தொடங்கியது. 1947 ஆம் ஆண்டு பழ
மாணவிகள் சங்கம் உருவாக்கப்பட்டது. 1947 தொடக்கம் கல்லூரி விடுதி
ஒழுங்காக நிர்வகிக்கப்பட்டதனால் மாணவிகள் தொகை மேலும் அதிகரித்த
இக்காலம் கல்லூரி வளர்ச்சியின் முதற்படி எனலாம்.

அடுத்ததாக 1948 ஆம் ஆண்டு இந்தியப் பெண்மணியான திரு
சறோஜினி ராவ் அதிபரானார். இவரது நிர்வாகத்திறமையினால் எ



### முன்னைனாள் அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

1943 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 10 ஆம் திகதி இந்துக் கல்லூரி அதிகார சபையினரால் பெண் சிறார்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்து மகளிர் கல்லூரியின் வளர்ச்சியில் இந்துக் கல்லூரி அதிகார சபையினர், கல்லூரி அமைவிடத்திற்கான நிலத்தை உவந்தளித்த திருமதி விசாலாட்சி சிவகுருநாதர் அவர்கள் அன்றைய காலகட்டங்களில் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பான பணிகள் என்றென்றும் நினைவுகூரப்பட வேண்டியவையாகும்.

மேலும் போர்க்காலச் சூழ்நிலைகளிலும் இடப்பெயர்வுகளின் போதும் தளராது செயற்பட்டு எமது பெண் சிறார்களுக்கு கல்விச் செல்வத்தை வழங்கிய யாழ். இந்து மகளிர் கல்லூரி, இன்று கல்வி, இணைப்பாடவிதானங்களில் சாதனைகள் படைப்பதோடு பௌதீக வளங்களிலும் உயர்ந்த ஒரு மகளீர் கல்லூரியாகத் திகழ்ந்து வருகின்றது. எமது கல்லூரி மென்மேலும் பல உயர்வுகள் பெற இப்பவள விழா ஆண்டில் வாழ்த்துகின்றேன்.



### யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க கனடா கிளை போஷகர் செல்வி நல்லம்மா குழந்தைவேலு

நான் மாணவியாக, ஆசிரியையாக, கனடா பழைய மாணவிகள் சங்கத்தின் போஷகராக கல்லூரியுடன் நீண்டகால தொடர்பு கொண்டுள்ளேன்.

திருமதி விசாலாட்சி சிவகுருநாதன் அம்மையாரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நடுத்தோட்டக்காணியில் கொட்டில்களாக ஆரம்பிக்கப்பட்ட எங்கள் கல்லூரி இன்று பல மாடிக்கட்டடங்களுடன் பலதுறைகளிலும் மாணவிகள் கற்பதற்கான வசதிகளுடன் எழில்மிக்க கல்லூரியாக காணப்படுவது பெருமை தருகின்றது.

பவளவிழாவினை சிறப்பாக நடத்த முன்னின்று உழைக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.



### பாடசால
### முன்ன
### பேராசி

1993 இல்
நாகராசா அவ
சாலை அபிவிருத்திச் சங்கம்,
தின் பால் கல்லூரிக்குப் பொ
தோம். 2003 ஆம் ஆண்டி
கொண்டாடப்பட்டது. இன்று ந
உலகெங்கும் வாழ்ந்து வரும்
பாக 75 ஆண்டுகளாக கல்வி
ரியை அலங்கரித்த அதிபர்க
பேரும் பெருமிதம் கொள்ளும்
ணிப் பாடசாலையான இந்து ம
மாணவிகள் அன்றும் இன்றும் உ
இந்துப் பாரம்பரி யத்தோடு சீரும்
கல்லூரி அளித்த வழிகாட்டலே யெ
தொடர்ந்து நூற்றாண்டைக் க
இந்துப் பண்பாடு பாரம்பரியத்
களின் கல்வி மேம்பாட்டை மு
நடுத்தோட்ட பிள்ளையார் என்ற

# வளவிழா சிறப்புமலர்- 10.09.2018

3-2018



தி விசாலாட்சி
தருநாதர்
(நிறுவுநர்)



**சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா அவர்களின் ஆசிச் செய்தி**

உயரிய எண்ணங்கள் ஒன்றுகூடும்பொழுது அதன் விளைவு மிகவும் பயனுள்ள வெளிப்பாடாக அமையும். அந்தவகையில் இற்றைக்கு எழுபத்தைந்து (75) ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப்பாண இந்துப் பெண்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு திருமதி.விசாலாட்சி சிவகுருநாதரின் பூதானத்தில் இந்துக்கல்லூரி அதிகார சபையினரால் ஆரம்பிக்கப்பட்ட யாழ்.இந்துமகளிர் கல்லூரி ஓங்கி உயர்ந்து பவளவிழா கொண்டாடுவது போற்றுதற்குரியதாகும்.

இவ் இந்துப் பெண்கள் பாடசாலை இல்லம் தோறும் இந்துப்பாரம் பரியம் வளர வழிசெய்து மென்மேலும் வளர்ச்சி அடையவும் பவள விழா இனிதே நிறைவேற ஆசிவேண்டி எல்லாம் வல்ல பரம் பொருளையும் பூஜ்ய குருதேவரின் பாதார விந்தங்களையும் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.



**யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க உபதலைவி செல்வி அன்னலக்ஷமி கந்தையா அவர்களின் வாழ்த்துச் செய்தி**

யாழ்.நகரில் சைவப் பெண்களின் கல்வி, பண்பாடு, சைவப்பற்று முதலியவற்றை வளர்க்கவெனும் விழுமிய நோக்குடன் ஆரம்பிக்கப் பட்ட யாழ். இந்து மகளிர் கல்லூரி தனது பவள விழாவினை நிறை வாகக் கொண்டாடும் இவ்வேளையில் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத்தின் சார்பில் என்னுள்ளம் கனிந்த வாழ்த்துக்களை பெருமிதத்துடன் சமர்ப்பிக்கின்றேன். ஒழுக்கம், வித்தை, சமயம்,விஞ்ஞானம், கலை, விளையாட்டு முதலிய பலதுறைகளில் சிறந்து விளங்கும் எம் கல்விக் கூடம் பல சாதனைப் பெண்களை உருவாக்கி நாட்டின் சேவைக்கு அர்ப்பணித்துள்ளது. இன்று புது எழிலுடன் திகழும் எமது கல்லூரி நூற்றாண்டு விழா, முத்துவிழா போன்ற பல விழாக்களை காண வேண்டும் என்றும் நாட்டிற்கும் நம்மினத்திற் கும் பயன்கள் பல தரக்கூடியவாறு பெண் சிறார்களை வழிப்படுத்த வேண்டுமென்றும் வாழ்த் துகின்றேன்.

து ஒரு வரப்
... சபையினர்
...ளர்.
...கள் கல்லூரி
...அவர்களால்
...கிடுகுகளால்
...விகள் அடி
...ன நிதியைச்
...ஆரம்பத்தில்
...டங்களாகக்
...ய அதிகார
...ர் என்னும்
...சேவையை

கல்லூரி இரண்டாந்தரப் பாடசாலையாக தரமுயர்த்தப் பட்டது. மாணவிகள் தொகை 1100 ஆக அதிகரித்தது. எங்கள் கல்லூரியின் மகுடவாசகமான "It ought to be beautiful I live here" உருவாக்கப்பட்டது. கல்லூரி கீதம் இயற்றப்பட்டது. 1954 இல் களியாட்ட விழா ஒன்றும் நடத்தப்பட்டு கல்லூரிக்கு உயர்ந்த சுற்றுமதிலும் கட்டப்பட்டது. இவரது காலத்தில் எமது கல்லூரி ஒரு முழுவளர்ச்சியடைந்த பாடசாலையாக வளர்ந்தது எனக் கூறலாம்.

இவர் தாய்நாடு திரும்பியதன் பின் 1954 தொடக் கம் 1975 வரை திருமதி விமலா ஆறுமுகம் அதிபராக அயராது பணிபுரிந்தார். இவரது காலத்தில் கல்லூரி முதலாம் தர பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டதுடன் 1962 இல் எமது கல்லூரியும் அரசாங்கத்திடம்




...கின்றோம்.
...946 ஆம்
...தி கிளாறா
... கல்லூரி
... பழைய
... விடுதியும்
...கரித்தது.
...ன திருமதி
...ால் எமது

கையளிக்கப்பட்டது. எமது கல்லூரி ஸ்தாகரான திருமதி விசாலாட்சி சிவகுருநாதரின் பெயரைத் தாங்கிய பிரார்த்தனை மண்டபமும் பலரது அயராத முயற்சியினால் கட்டி முடிக்கப்பட்டது. 1968 இல் கல்லூரியில் வெள்ளிவிழாவும் கொண்டாடப்பட்டது.

திருமதி விமலா ஆறுமுகம் அவர்கள் ஓய்வுபெற்ற தன் பின் 1976 ஆம் ஆண்டு தொடக்கம் 1986 ஜூன் மாதம் வரை செல்வி பத்மாவதி இராமநாதன் அவர்கள் அதிபரானார். கல்லூரியின் புகழ் அகில இலங்கை முழுவதும் பரவக் காரணகர்த்தாவாக விளங்கிய அதிபர் செல்வி. பத்மாவதி இராமநாதன் அவர்களே எமது கல்லூரி சகல துறைகளிலும் முன்னணியில் நிற்க ஊக்கமுடனும் தியாக சிந்தையுடனும் சேவை புரிந்த இவரது நிர்வாகக் காலம் கல்லூரியின் வரலாற்றில் பொற்காலம் என இன்றும் போற்றப்படுகின்றது.

இவர் 1986 இல் ஓய்வு பெற்றதன் பின் திருமதி திவ்விய சிரோன்மணி நாகராஜா அவர்கள் 1986-1993 வரை கல்லூரியை வழிநடத்திச் சென்றார். போர்க்காலச் சூழல்களிலும் கல்லூரியின் செயற் பாடுகளில் தளர்வேதும் ஏற்படாது வழிநடத்திச் சென்ற இவரது காலத்திலேயே கல்லூரி அன்னை 1993 இல் பொன்விழா கண்டு மகிழ்ந்தாள். இவரின் பின் 1993-2006 வரை திருமதி சரஸ்வதி ஜெயராஜா அவர்கள் கல்லூரியைப் பொறுப்பேற்று வழிநடத்தி வந்தார். கல்லூரி அன்னை 3 இல் வைரவிழாவும் கண்டு மகிழ்ந்தாள். போர்ச் சூழல்களும் இடப் பெயர்வுகளும் தொடர்ந்த போதும் கல்லூரியின் சகலதுறை வளர்ச்சியிலும் அக்கறையுடன் செயற் பட்ட அதிபர் அவர்கள் ஓய்வு பெற்றதன் பின் 2006 இல் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் அவர்கள் அதிபரானார். (2006- 2012)

2006 இல் அதிபரான இவரது காலத்திலும் போர்ச் சூழலும் பொருளாதாரத் தடைகளும் தொடர் ந்த போதும் கல்விச் செயற்பாடுகளிலும் கல்லூரியின் பௌதீக வள அபிவிருத்தியிலும் மிகுந்த அக்கறையு டன் செயற்பட்ட காரணத்தினால் கல்லூரி புதுப்பொலி பெறத் தொடங்கியது.

இந்நிலையில் திருமதி வே.பேரின்பநாதன் அவர் கள் பிரதிக் கல்விப் பணிப்பாளராக 2012 இல் பதவி உயர்வு பெற்றுச் செல்ல கல்லூரியின் பழைய மாணவியான திருமதி மிமலாதேவி விமலாநாதன் அவர்கள் 2012 ஜூன் மாதம் கல்லூரியை பொறுப் பேற்று இன்றுவரை வழிநடத்தி வருகின்றார். கல்விச் செயற்பாடுகள், இணைப்பாட விதானச் செயற்பா டுகள் என்பவற்றில் எமது கல்லூரி மாணவிகள் சாதனைகள் பல படைப்பதற்கு வழி நடத்தி ஊக்கமும் உற்சாகமும் தருவதிலும் கல்லூரிக்கு தேவையான பௌதீக வளங்களைப் பெற்றுக் கொள்வதிலும் கல்லூரியை புதுப்பொலிவு பெறச் செய்வதிலும் அதிபரவர்கள் முன்னின்று செயற்பட்டு வருகின்றமை மகிழ்ச்சி தருவதாகும்.

அத்துடன் இன்று கல்லூரி ஸ்தாபகரை நினைவு கூர்ந்து திருவுருவச் சிலையமைத்து திறப்புவிழா செய்வதுடன் கல்லூரியின் பவள விழாவை சிறப்புடன் கொண்டாடும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அபிவிருத்திச் சங்கத்தினருக்கு எமது வாழ்த்துக் களைத் தெரிவிப்பதில் மன மகிழ்வடைகின்றோம். மேலும் கல்லூரியின் பணி சிறக்க உழைக்கும் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

**செல்வி நிர்மலா சோமசுந்தரம்**
**(பழைய மாணவிகள் சார்பில்)**

**...சாலை அபிவிருத்திச் சங்க ...ன்னாள் செயலாளர், ...ராசிரியர் கா.குகபாலன்.**

...இல் அப்போதைய அதிபர் திருமதி
... அவர்களின் தலைமையில் பாட
...ம், பழைய மாணவியின் சங்கத்
...பொன்விழா கொண்டாடி மகிழ்ந்
...ண்டில் மணிவிழாவும் சிறப்பாகக்
... நடைபெறும் பவள விழவான
...ம் இந்துப் பெண்களுக்கு குறிப்
...கல்வி கற்ற மாணவிகள், கல்லூ
...ர்கள், ஆசிரியர்கள் அத்தனை
...ளும் நாளாகும். ஈழத்தில் முன்ன
... மகளிர் கல்லூரி கல்வி கற்ற
... உள்நாட்டிலும் சர்வதேசங்களிலும்
...சிறப்பாக வாழ்ந்து வருவதற்கு
...வெற்றி மிகையாகாது. இக்கல்லூரி
... கடந்து பல நூறு ஆண்டுகள்
...யத்தைக் கட்டிக்காத்து மாணவி
... முன்னெடுக்க எல்லாம் வல்ல
...ன்றும் துணை நிற்பார்.



**பழைய மாணவிகள் சங்க கொழும்பு கிளை தலைவி திருமதி அபிராமி கைலாசபிள்ளை**

என்றும் மாறா இளமையுடன் திகழும் எமது கல்லூரி யாழ். நகரில் வாழும் இந்துச் சிறுமிகளை சமய கலாசார விழுமியங் களுடன் கல்வி அறிவூட்டி வளர்த்து ஆற்றல் மிக்க நங்கையர்களாக மிளிரச் செய்து வருகின்றது.

எம் கல்லூரியில் கற்ற மங்கையர்கள் பலரும் உள்நாட்டிலும் பிறநாடுகளிலும் பல்வேறு உயர் பதவிகளை வகித்து வருவதோடு தாம் கற்ற கல்லூரி அன்னையை மறவாது பல வழிகளிலும் அன்னைக்கு உதவி வருகின்றனர்.

இன்று 75 ஆவது வயதினை எட்டிப் பிடித்துள்ள எமது கல்லூரி எதிர்காலத்தில் மென்மேலும் சகல துறைகளிலும் வளர்ச்சி பெற்று நாட்டிற்கும் நங்கையர்க்கும் நற்பணியாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.



**ஓய்வுநிலை அதிபர் திருமதி திவ்யசிரோன்மணி நாகராஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி**

இக்கல்லூரியின் வளர்ச்சி பாரிய கூட்டு முயற்சி. எந்தக் கருமத்தி லும் பக்க பலமாய் நின்ற பெற்றோர், நலன்விரும்பிகள், அறிவும், ஆற்றலும் சேவையுணர்வும் கொண்ட ஆசிரியர்கள், நன்முறையில் நெறிப்படுத்திய அதிபர்கள், உதவி பல புரிந்த கல் வித் திணைக்கள அதிகாரிகள் என்போர் இக்கூட்டு முயற்சியின் பங்காளிகள் இவர்கள் யாவரும் பவள விழாக்காணும் இந்நாளில் நினைவுகூரப்பட வேண்டியவர்கள்.

பதினேழு ஆண்டுகாலமாக ஆசிரியர், பிரதி அதிபர், அதிபராகக் கடமையாற்றி நெருக் கமுறப் பிணைந்த காரணத்தால் மனமுவந்து நல்லாசி கூறுவதுடன் மென்மேலும் வளர்ச்சி பெற்று உயர்வு கண்டு நாட்டிற்கும் நங்கையர்க்கும் நற்பணியாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.



**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் ஆசிச் செய்தி**

இன்று யாழ். குடாநாட்டில் உன்னதமான ஓர் இந்து மகளிர்கல்லூரியாக இக் கல்லூரி விளங்குவது சைவத் தமிழ் மக்களுக்கு பெருமை தரும் விடயமாகும். கடந்த 75 ஆண்டு காலமாகக் கல்லூரியை வளர்த்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவிகள் என்றும் நன்றிக்குரியவர்கள். தாய் நாட்டிலும் புலம்பெயர் தேசங்களிலும் வதியும் கல்லூரியின் பழைய மாணவிகளும் தமது கல்லூரித் தாயின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகின்றனர். அவர்களின் பணி சிறக்க எனது நல்வாழ்த்துக்கள்.

இன்று பவள விழாக்காலத்தில் சிறந்த ஆளுமையோடு கல்லூரியை ஆற்றுப்படுத்தும் திருமதி மி.விமலநாதன் அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் கல்லூரி வளாகத்தில் எழுந்தருளி இருக்கும் விநாயகப் பெருமான் திருவருளால் பவளவிழா சிறக்க பிரார்த்தித்து அமைகின்றேன்.



**யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் வாழ்த்துச் செய்தி**

யாழ். நகரில் இருந்த முக்கிய பெண்கள் பாடசாலைகள் இந்து சமயக் கற்கைச் சூழலைக் கொண்டிராததாலும் இராமநாதன் பெண்கள் கல்லூரி சுன்னாகத்தில் அமைந்திருந்ததாலும் யாழ்.நகர் இந்துப் பெண்களுக்கு இந்து சமயச் சூழலில் கல்வி கற்கும் பாடசாலையாக அமைக்கப்பட்டதே இந்து மகளிர் கல்லூரியாகும். சைவப் பெரியார்கள் பலரின் முயற்சியின் விளைவே இக்கல்லூரியாகும். நீண்ட காலத் தூர நோக்குடன் இக் கல்லூரி பரந்த நிலப்பரப்பில் இந்துச் சூழலில் நிறுவப்பட்டது. நிறுவியவர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி வருவது மகிழ்ச்சிக்குரியது.

இக்கல்லூரியின் ஆரம்ப கால அதிபர்களைத் தொடர்ந்து வந்த அதிபர்களான செல்வி இராமநாதன், திருமதி நாகராஜா, திருமதி ஜெயராஜா , திருமதி பேரின்பநாதன் ஆகியோர் கல்லூரியைச் சிறப்பாக வளர்த் தெடுத்தனர். இன்றைய அதிபர் திருமதி விமலநாதன் அவர்கள் தலைமையில் கல்லூரி கல்வியிலும் பௌதீகக் கட்டமைப்பிலும் மேலும் வளர்ச்சி க்ண்டு , இன்று பவளவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது பாராட்டுக்குரியது. இக்கல்லூரியில் எனது சகோதரிகள் இருவர் விடுதி மாணவர்களாக இருந்து கல்வி கற்றதனால் எமக்கு இக்கல்லூரியுடன் நெடுக்கமான உறவைப் பேண முடிந்தது. காலமாற்றத்திற்கேற்ற வகையில் இக் கல்லூரியின் பணி மேலும் சிறந்து விளங்கவும் பவளவிழா சிறப்பாக நடைபெறவும் என் வாழ்த்துகள்.



**வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அவர்களின் வாழ்த்துச் செய்தி**

யாழ்ப்பாண மாவட்டத்தின் அதிகளவான மாணவிகளை திறம்பட உருவாக்கி இச்சமூகத்திற்கு கையளிக்கும் பொறுப்பு வாய்ந்த பணியை மேற்கொள்ளும் இக் கல்லூரியின் அளப்பெரிய சேவை போற்றுதற் குரியது. எழுபத்தைந்து ஆண்டுகளாக பாடவிதானச் செயற்பாடுகளில் மட்டுமன்றி இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் மாணவிகளை ஈடுபடுத்தி தேசிய ரீதியில் பல சாதனைகளை ஈட்டி வருகின்றமை பாராட்டுதற்குரியது. மேலும் இக்கல்லூரி சைவப் பாரம்பரியத்துடன் கலை, கலாசார, விழுமியங்களைப் பேணி தொடர்ந்து வரும் காலங்களிலும் தன் பணியில் பார்புகழ உயர்ந்து மிளிர இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.



**யாழ்ப்பாண கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.சி.மாணிக்கராஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி**

சைவமும் தமிழும் தழைத் தோங்கும் இக்கல்லூரி கடந்த பல வருடங்களாக கல்வியிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் பல சாதனைகளை நிலைநாட்டி எமது கல்வி வலயத்திற்கு பெருமை சேர்த்து வருவது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எமது தாய் நாட்டுக்குத் தேவையான விதத்தில் கலாசாரங்களையும் கலையம்சங்களையும் உயர் விழுமியங்களையும் இளந்தலைமுறையினருக்கு பரிமாறும் உயர் பண்பில் இக்கல்லூரி சிற ந்து விளங்குகின்றது. இக்கல்லூரி பவளவிழாவினைக் கொண்டாடுவதற்கு அயராது உழைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவிகள், பெற்றோர் அனைவரும் பாராட்டுதற் குரியவர்கள். பவளவிழா சிறக்க எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எப்.எக்ஸ் அன்ரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி**

உலக இயக்கத்திற்கு சக்தியே பிரதான காரணம் என்கிறது விஞ்ஞானம், மெய்ஞ்ஞானத்திலும் சிவனின் இயக்கத்திற்கு சக்தியே மூல காரணம். அந்த வகையில் எம் குடும்பங்களின் கண்களாக விளங்கும் பெண்களே எம் சமூக த்தின் சக்தியாகும். நல்ல ஆளுமை, அறிவு மனப்பாங்கு மிக்க பெண்களை உருவாக்கும் இந்து மகளிர் கல்லூரி எம் கல்விப் புலத்திற்கே கிடைத்த வரப்பிரசாதமாகும்.

இணைபாடத்துறையில் குறிப்பாக தமிழ்மொழித்திறன் போட்டிகளில் இக்கல்விச்சாலை நாட்டியத் துறைசார் போட் டிகளில் தொடர்ச்சியாக தேசிய மட்டத்தில் சாதித்து வருகின்றது. இவ்வருடமும் நடனத்தில் மூன்று வெற்றிகள் தேசியத்தில் கிட்டியுள்ளன. விளையாட்டுத் துறையிலும் வெற்றிகள் பெற்றிருப்பதுடன் எமது பாரம்பரிய பண்பாட்டு விடயங்களுக்கும் முன்னுரிமைய ளித்து பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருவதும் மகிழ்ச்சிக்குரியது. இக்கல்லூரியின் வெற்றிகளின் பின்புலமாகத் திகழும் அதிபர் திருமதி மி.விமலநாதன், பிரதி உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவிகளைப் பாராட்டுகின்றேன். முழு நிறைவான தமிழ் பெண்ணியத்தை உருவாக்கும் இக்கல்லூரிக்கு என் வாழ்த்துக்கள். இங்கு கற்கும் மாணவிகளின் எதிர்காலம் சிறக்க என் நல்லாசிகள்.



**கல்லூரி முதல்வர் திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி**

மாணவிகளின் ஆளுமை மேம்பாட்டிற்கு அருளை அள்ளி வழங்கும் நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகனைப் பணிந்து பெண்களின் அறிவு, ஒழுக்க மேம்பாட்டிற்கு தன்னிகரில்லாச் சேவையை அள்ளி வழங்கும் கல்லூரித் தாய்க்கு சிரம் தாழ்த்தி, எமது கல்லூரித்தாய் பவளவிழாவைக் கொண்டாடு வதையிட்டு பழைய மாணவி என்ற தளத்திலும் கல்லூரியின் பவள விழா கால அதிபர் என்ற வகையிலும் வாழ்த்துரை வழங்குவதில் மட்டில்லா மகிழ்வடைகின்றேன். 1943 ஆம் ஆண்டு பாடசாலை நிறுவுவதற்கு அரும்பாடுபட்ட அத்தனை அன்பு உள்ளங்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுகூர்ந்து மனநிறைவடைகின்றேன். பாடசாலை மாணவிகள்.பல்வேறு நிகழ்வுகளிலும் தேசிய மட்டம் வரை சாதனை படைத்து நிற்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவதையிட்டு உளப்பூரிப்படைகின்றேன். சைவத் தமிழ் பண்பாட்டிற்கு அணிகலனாக எமது கல்லூரி மிளிர்வதையிட்டு ஆனந்தம் அடைகின்றேன்.

இன்றைய கல்லூரியினுடைய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் எமது கல்லூரியின் அனைத்து ஆளணியினரையும் பாராட்டுவதையிட்டு பெருமை கொள்கின்றேன். இக் கல்லூரி யின் வளர்ச்சிக்கு தன்னிகரில்லாச் சேவையை நிறைவாக வழங்கும் பழைய மாணவிகள், கல்லூரி அபிவிருத் திச் சங்கத்தினர், நலன் விரும்பிகள் அனைவர்க்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகின்றேன். எமது கல்லூரி எதிர் காலத்திலும் பல புதிய சாதனைகளோடு பெண் கல்வியை வழங்க இறையாசியை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**கல்லூரியின் அபிவிருத்திக் குழுவினரின் வாழ்த்துச் செய்தி**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி பவளவிழாக் கொண்டாடுவதையிட்டு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்துப் பெண்களின் கல்வி விருத்தியைக் கருத்திற் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரியானது அதன் நோக்கத்தினை தவறாது கடைப்பிடித்து வருகின்றது. தொடர்ச்சியாக இக் கல்லூரி கல்விசார் துறைகளில் விருத்தி பெற்று வருகின்றது.

மேலும் சமூகத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு அதன் அபிலாசைகளை நிறைவேற்ற எப்பொழுதும் முயன்றுவரும் இக் கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்த அதிபர்களும்,ஆசிரியர்களும் நன்றியுடன் நினைவுகூர வேண்டியவர்கள். தொடர்ந்தும் இக்கல்லூரி எமது சமுதாயத்திற்கு நற்பணிகளை யாற்றி உயர்ந்து விளங்க எல்லாம் வல்ல எம்பிரானைப் பிரார்த்திக்கின்றோம்.

# இலங்கை வரலாற்றில் இதுவே முதல் தடவை

## வழக்கு விசாரணைகள் குறித்து மகிந்த

(கொழும்பு)

**இந்த நாட்டின் வரலாற்றில் முதற் தடவையாக வழக்குத் தொடர்வது குறித்து தீர்மானம் எடுப்பது சட்டமா அதிபர் அல்லவெனவும், அமைச்சர் குழுவொன்றே எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விமர்சித்துள்ளார்.**



இரவில் அமைச்சர்கள் குழுவொன்று கூடி சட்டமா அதிபருக்கு பணிப்புரை விடுப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஒரு குறிப்பிட்ட குழுவைப் பழிவாங்குவதற்கென விசேட நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கவலை வெளியிட்டார்.

சிறையிலுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை பார்வையிடச் சென்ற போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளர் கோத்தாவா? பசிலா? இரு வாரத்திற்குள் முடிவு

## வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)



பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவா? பசில் ராஜபக்ஷவா? என்பது இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலை பொது எதிரணிக்கு சாதகமாக மாற்றியமைத்துக் கொள்ள வேண்டுமானால் மக்களின் விருப்பினை பெறக்கூடிய ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டும்.

ஆகவே ஜனாதிபதி தேர்தலுக்கான பொது வேட்பாளரை தெரிவு செய்வது தொடர்பாக தீர்க்கமான முடிவினை எடுப்பதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

எனவே, எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் ஜனாதிபதி வேட்பாளரின் பெயரை அறிவிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குடிநீர்த் தொழிற்சாலைப் பணிகளை கைவிடாவிடின் போராட்டம் வெடிக்கும்

(புல்லுமலை)

மட்டக்களப்பு, புல்லுமலைப் பகுதியில் அமைக்கப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர்த் தொழிற்சாலைகளுக்கான நிர்மாணப் பணிகளை கைவிடாவிடின் பாரிய போராட்டங்களை முன்னெடுப்போமென அப் பகுதி மக்கள் எச்சரித்துள்ளனர்.

மேலும் அரசியல் பின்புலத்துடன் நிர்மாணிக்கப்படும் குறித்த தொழிற்சாலையின் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தி கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ள போதும், ஜனாதிபதி இதுவரை அது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.

அத்துடன் இந்த பகுதி மக்கள் குடிப்பதற்கே நீரில்லாமல் அல்லலுறும் நிலையில் இவ்வாறான திட்டங்களினூடாக நிலக்கீழ் நீரைப் பயன்படுத்தி இதுபோன்ற தொழிற்சாலை செயற்படுமாயின் புல்லுமலை உள்ளிட்ட அதனை சூழவுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் குடிப்பதற்கு நீரின்றி பலதரப்பட்ட நோய்களுக்கும் இன்னல்களுக்கும் முகங்கொடுக்கவேண்டிய நிலை உருவாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

# தமிழ் மொழியை விழுங்கிய சீனமொழி நியாயப்படுத்தும் நியூசிலாந்து நிறுவனம்

(கொழும்பு)




நியூசிலாந்தின் பிரபல பால் பொருள் உற்பத்தி நிறுவனம் ஒன்றினால், இலங்கையில் சந்தைப்படுத்தப்படும் வெண்ணெய் பொதியில் தமிழ் மொழி நீக்கப்பட்டு சீன மொழியில் அச்சிடப்பட்டுள்ளது கடும் எதிர்ப்பைத் தோற்றுவித்துள்ளது.

முன்னதாக குறிப்பிட்ட நிறுவனத்தின் பால் பொருள் பொதிகளில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டிருக்கும்.

எனினும், தற்போது குறித்த நிறுவனத்தினால் சந்தைப்படுத்தப்பட்டுள்ள வெண்ணெய்ப் பொதிகளில் தமிழ் மொழி நீக்கப்பட்டு, சிங்களம், ஆங்கிலம் ஆகியவற்றுடன் சீன மொழி அச்சிடப்பட்டுள்ளது. இது இலங்கை தேசிய மொழி கொள்கையை மீறுகின்ற செயல் என்று அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

சீன மொழி அச்சிடப்பட்டுள்ளது பிரச்சினையல்ல, ஆனால், உள்ளூர் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது முக்கியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், தமிழ் மொழியை சேர்க்கும் வரை குறித்த நிறுவனத்தின் உற்பத்தியை தமிழ் நுகர்வோர் வாங்காமல் புறக்கணிக்க வேண்டும் என்றும், மனோகணேசன் முகநூல் பதிவு ஒன்றில் கோரியுள்ளார்.

எனினும், குறித்த நியூசிலாந்து நிறுவனம் தமது செயற்பாட்டை நியாயப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளது.

தமது வெண்ணெய்ப் பொதி நியூசிலாந்திலேயே தயாரிக்கப்பட்டு பொதியிடப்பட்டு கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அதே பொதியே இலங்கைக்கு அனுப்பப்படுவதாகவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

பொதுவாக இந்த நாடுகளில் பேசப்படும் மொழி தமது பொதிகளில் அச்சிடப்பட்டிருக்கும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ-7)

# போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் சாலிய பெரேரா தாய்லாந்தில் கைது

(பாங்கொக்)

போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் தேடப்பட்டு வந்த சாலிய பெரேரா என்ற இலங்கையர், தாய்லாந்தின் பங்கொக் நகரில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். சர்வதேச பொலிஸாரினால் இது குறித்து நாட்டுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் 2013 ஆம் ஆண்டு 30 கிலோகிராம் ஹெரோயினுடன் இலங்கையில் கைதுசெய்யப்பட்டதுடன் அது தொடர்பில் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந் நிலையிலேயே 2013 ஆம் ஆண்டு இவர் நாட்டிலிருந்து தப்பிச் சென்றதுடன் அவரை கைது செய்வதற்காக இலங்கை பொலிஸார் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் தேடி வந்தனர்.

இதன்படி சந்தேக நபர் தாய்லாந்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனடிப்படையில் சந்தேக நபரை இலங்கைக்கு அழைத்து வரும் நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக இராஜாங்க மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாகவும் பொலிஸ்போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரும் குற்றத் தடுப்புப் பிரிவினரும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## பேச்சைத் திசை திருப்புவது எப்படி?

சிலபேர் சின்னப் பிள்ளைகளை வைத்துக்கொண்டு ஆபாசமாய்ப் பேசுவார்கள்; இன்னும் சிலர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லாத குடும்ப விடயங்களை அவர்களை வைத்துக்கொண்டே பேசுவார்கள்.

இப்படிப் பேசுகிற இவர்களைத் திசை திருப்பியே ஆக வேண்டுமா வேண்டாமா? நிறுத்துங்கள்! அப்படிப் போசதீங்க என்று சொன்னால் அவருக்கும் நமக்கும் சங்கடம். அது மட்டுமல்ல பிள்ளைகளும் அதைப் பாதியிலேயே விட்டுட்டீங்களே! என்று கேட்பார்கள்.

எனவே பிள்ளைகளுக்குப் பிடிக்கிற மாதிரிப் பேசுறதில் இவர் ரொம்ப வல்லவர். அன்னைக்கு இப்படித்தான்... என்று பேசிக்கொண்டிருக்கிற தலைப்பிலிருந்து விலகி நாம் வழிவகைகளைச் செய்ய வேண்டும். கொஞ்சம் இருங்க. இப்போ நான் கிரிக்கெட் ஸ்கோர் சொல்லிப் போறேன்! என்றும் தாவலாம்.

சிலர் சலிப்பு விரக்தி வெறுப்புத் தொனியில் பேசுவார்கள். சிலர் நேரங்கெட்ட நேரத்தில் சோகத்தைப் பிழிவார்கள். சிலர் தேவையில்லாத விடயங்களைக் குடைவார்கள். இன்னும் சில பேர் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி நம்மைக் கொல்லாமல் சொல்வார்கள்! இவர்களையும் திசை திருப்ப வேண்டும்.

''நீங்கள் இப்படிப் பேசுறீங்க! நம்ப முடியலையே! அன்று ஒருநாள் நான் சோர்ந்து இருந்தப்போ நீங்க ஊட்டின தைரியத்தை என்னால் மறக்கவே முடியாது. அன்னைக்கு நீங்க செம பார்ம்ல இருந்தீங்க'' என்றோ சிலர் கோபத்தில் கத்தும் போது அந்த நேரத்தில் அவன் போறவழியில் சின்ன ஆக்ஸிடென்ட் பாவம் என்றோ அவரது மூடை, அல்லது காட்சிகளை களத்தை மாற்ற வேண்டும்.

பேச்சைத் திசை திருப்பும்போது தொடர்புடைய விடயங்களாகத்தான் தாவ வேண்டும். அடியோடு விலகினால் ''இந்தப் பேச்சை மாத்திற வேலையெல்லாம் எங்கிட்ட வேண்டாம் என்கிற பதில் டாண் என்று வரும். அதேபோல் எதிராளி விடாப்பிடியாக இருக்கும் நேரத் தில் நம் ஜம்பம் பலிக்காது!

மற்றபடி கொஞ்சம் புத்திசாலித்தனமாகச் செயற்பட்டால் ஒன்றைக் கேட்டு அழுகிற பிள்ளையின் கவனத்தை திதிருப்பி அதை சிரிக்க வைத்து விடுகிற தாயின் வெற்றியைப் போலவே நாமும் வெற்றி அடைய முடியும்!

**லேனா தமிழ்வாணன்**

# தற்கொலைகளைத் தடுப்போம்

## இன்று தற்கொலை தடுப்பு தினம் அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது



மனித உயிர்கள் விலை மதிப்பற்றவை. அவை அழிக்கப்படுவ்து வேதனைக் குரியது. அதிலும் தமது உயிரை தாமே அழிக்க நினைப்பது மிகவும் வேதனைக்குரியதும், வெட்கப்பட வேண்டியதும் ஒன்றாகும். அதாவது தற்கொலை எண்ணம் கொண்ட ஒருவர் தாங்கும் சக்தி குறைந்தவராக மன விரக்தியுற்று காணப்படுவார்.

மேலும் தற்கொலை எண்ணம் திடீரென உருவாகி நடைமுறைப்படுத்தும் ஒன்றல்ல. இது நீண்டகால திட்டமிடலின் மூலம் மேற்கெள்ளப்படும் ஒரு துயர நிகழ்வாகும்,

இவ்வாறான எண்ணம் கொண்டவர்கள் தமது உறவுகளுடனோ, அல்லது தமது நம்பிக்கைக்குரியவராக கருதும் ஒருவருடனோ மனம் திறந்து தமது உணர்வுகளை பகிர்ந்து கொள்வதன் மூலம் அவ்வாறான எண்ணத்தில் இருந்து விடுபட்டுக்கொள்ள முடியும். தோல்விகளைக் கண்டு துவண்டு விடாது அத்தோல்விகளுக்கான மூல காரணங்களைக் கண்டு அதை முறியடித்து வெற்றி காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அத்துடன் தற்கொலைகளை தடுப்பதற்கு சமூகத்திற்கும் முக்கிய பொறுப்பு உண்டு, அதாவது தற்கொலை எண்ணம் கொண்டவரை இனம் கண்டு அவரை அதிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டியது சமூகத்தில் உள்ளவர்களின் பொறுப்பாகும்.

தற்கொலை எண்ணம் கொண்டவர்கள் மற்றவர்களிடம் எதிர்பார்ப்பது நட்புடன் கூடிய உணர்வு ரீதியிலான ஆதரவேயாகும்.

எனவே தற்கொலை எண்ணம் கொண்ட ஒருவரை நாம் இனம் கண்டால் அவர்களை எடை போடாது அவர்களை அவர்களாகவே ஏற்றுக் கொண்டு அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் பிரச்சினைகளை செவிமடுப்பதன் மூலம் நட்பு ரீதியான ஆதரவை வழங்கி தற்கொலை எண்ணத்தில் இருந்து அவர்களை விடுவித்துக்கொள்ள முடியும்.

ஒரு பிரச்சினையை சொல்பவருக்கும் அதனை செவிமடுப்பவருக்கும் இடையே உள்ள இடைவெளியே அப் பிரச்சினைக்கான தீர்வாக அமையும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஒருமுறை தற்கொலை முயற்சியில் தோல்வி கண்டவர் பின்னர் அதனை நினைத்து வெட்கப்படுகின்றார். எனவே தற்கொலை எண்ணம் கொண்டவர்கள் அதிலிருந்து முழுமையாக விடுபட்டுக் கொள்ள வேண்டும். அவ்வாறு விடுபட்டுக் கொள்ள முடியாது எனக்கருதுமிடத்து ஆற்றுப்படுத்தல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதன் மூலம் அவ்வாறான எண்ணங்களில் இருந்து விடுபட்டுக்கொள்ள முடியும்.

தற்கொலை முடிவு என்பது முட்டாள் தனமான ஒன்று. சமூகத்தில் எமக்கு வரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு எதிர் நீச்சல் போட்டு அதில் வெற்றி காண மன நம்பிக்கை இல்லாமல் தற்கொலை என்ற கோழைத்தன முடிவை எடுக்கின்றோம் என்ற தற்கொலை எண்ணம் கொண்டவர்களின் மனநிலையை மாற்றி அவர்களையும் இந்த சமூகத்தில் ஒரு நல்ல பிரஜையாய் வாழ வைப்போம் என இன்றைய இந்த தற்கொலை எதிர்ப்பு தினத்தில் திடசங்கற்பம் பூணுவோம்.

**மேல்நோக்கி உயர்த்தும் உணர்வுகள்/ எண்ணங்கள்**

- ஆனந்தம், அறிவு, சுதந்திரம், காதல், பாராட்டு
- பேரார்வம்
- உற்சாகம்
- எதிர்பார்ப்புடன் கூடிய நேர்மறை நம்பிக்கை
- 'எல்லாம் நன்மைக்கே' கொள்கை
- நம்பிக்கைக்கு இடம்கொடுத்தல்
- மனநிறைவு

- சலிப்பு
- தேவையற்ற குற்றவுணர்வு
- பயம்,துக்கம், மனச்சோர்வு
- பழிவாங்கும் மனப்பான்மை
- தன்னம்பிக்கை இழத்தல்
- பாதுகாப்பின்மை
- பொறாமை
- வெறுப்பு, வெறி
- உணர்ச்சிவசப்படுதல்
- குறை கூறுதல்
- சந்தேகம்
- கவலை
- மனக்கசப்பு
- தோல்வி மனப்பான்மை
- ஏமாற்றம், எரிச்சல், பொறுமையின்மை
- இவற்றுக்கெல்லாம் பலியாதல்.

**கீழ்நோக்கி இறக்கும் உணர்வுகள்/ எண்ணங்கள்**

அ.மௌலி

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1504

## கயல்விழி

டெய்லி ஸ்விம்மிங் பண்ணினா ஒல்லியா ஆகலாம்னு சொல்லுறாங்க



அப்புறம் ஏன் திமிங்கலம் குண்டா இருக்கு...

## தீபன்



சுவாசிக்க சுவாசம் இல்லாவிட்டாலும் நேசிக்க உன் நிஜங்கள் இருந்தால் போதும் நான் உயிர் வாழ

## கஸ்தூரி

பழசு: வெட்டு ஒன்னு... துண்டு ரெண்டு...!



புதுசு: செல்போன் ஒன்னு, சிம்மு ரெண்டு

## சியாமளா

டென் எண்ணுறதுக்குள்ள பால் குடிச்சிறனும் ஓ.கே.யா?



நான் பால் குடிச்சு முடிக்கிற வரைக்கும் டென் எண்ணிட்டு இருக்கனும் ஓ.கேயா?

## சித்ரா

கல்யாணம் காட்சினு முடிச்சிட்டு வாழ்க்கைல செட்டில் ஆகலாம்னு பார்த்தா



செட்டில் ஆனாதான் பொண்ணே தருவாங்கலாம் எங்க ஆண்பாவம் உங்களை சும்மாவிடாது

## சியானா

அந்தக் காலத்தில தெரியாதவர்கள்கூட வீட்டில வந்து தங்கட்டும்னு திண்ணை வைச்சோம்



இப்ப எவனும் வந்துவிடக்கூடாதுன்னு காம்பவுண்ட் கட்டுறோம்... அப்புறம் எப்படி மழை வரும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# எழுச்சிப் பேரணி பால் விவகாரம் பல கோணங்களில் விசாரணை சட்ட நடவடிக்கைக்கும் ஆயத்தம்

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின் மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்பட்ட பொதியிடப் பட்ட பால் குறித்து அவ்வெ திரணி பல கோணங்களில் ஆராய்ந்து வருகிறது.



அது குறித்து பொலிஸ் முறைப்பாடும் செய்யப்பட் டுள்ளது. மேலும் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள கூட்டு எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத் தின்போது அது சம்பந்தமாக அவதானம் செலுத்தவுள் ளதாக அவ்வெதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பாரா ளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை நல்லாட்சி அரசாங்கத்திற்கு எதிராக இலட்சக்கணக்கான மக்கள் கொழும்பில் கூடி தமது எதிர்ப்பினைத் தெரி வித்தனர். எனினும் அத னைப் பொறுத்துக்கொள்ள முடியாத அரசாங்கம் பல் வேறு உபாயங்கள் மூலம் பேரணியைத் தடுப்பதற்கு சூழ்ச்சி செய்தது.

அது முடியாது போனது. ஆகவே வெயிலில் நின்று கொண்டு நாட்டைக்காக்க வேண்டும் எனப் போராடிய மக்களுக்கு பாலில் விசம் கலந்து கொடுத்துள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே இவ்வாறான இழி செயல்களை ஒருபோதம் ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியலுக்காக மக்களின் உயிர்களுடன் விளையாடு வதை வன்மையாகக் கண் டிக்கிறோம். மேலும் கூட்டு எதிர்க்கட்சியினால் அவ் வாறு பால் வழங்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே சூட்சுமமான முறை யில் திட்டமிட்டு குறித்த சில இடங்களில் இவ்வாறான பால் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## முதலை தாக்கி ஒருவர் பலி!

(மட்டுவில்)

மட்டுவில், மகிழூர் கிராமத் தில் மீன்பிடிக்க சென்ற மீனவர் முதலையின் தாக்குதலுக் குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

42 வயது மதிக்கதக்க ஒரு வரே நேற்று முன்தினம் காலை மீன் பிடிக்கச் சென்ற போது முத லையின் தாக்குதலுக்குள்ளாகி உயிர் இழந்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகஎளவாஞ்சிக்குடிபொலி ஸார் தெரிவித்துள்ளனர்.(இ-7)

## குமரகுருபரன் நீக்கப்பட்டார்

(கொழும்பு)

கடந்த சில நாட்களாக கட்சியின் கட்டுப்பாட்டை மீறி ஏனைய கட்சிகளின் முக்கிய நபர்களுடன் தொடர்புகளைக் கொண்டு கட்சியின் தனித்துவத்தை பேணிக்காப்பாற்ற தவறியமை மற்றும் கட்சி வளர்ச்சி பணிகளிள் ஈடுபடாமை காரணமாக, கும ரகுருபரன் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந் தும் அடிப்படை அங்கத்தவர் நிலையில் இருந்தும் நீக்கப்பட் டுள்ளார் என, ஜ.ம.கா. தலை வர் மற்றும் முன்னாள் பிரதி யமைச்சர் பிரபா கணேசன் அறி வித்துள்ளார். மேலும், கட்சி செயற் குழுக் கூட்டத்தில் இது சம்பந்த மான விளக்கம் அளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார் (இ-7)

## ஷெஹானுக்கு எதிராக முஜிபுர் சட்ட நடவடிக்கை



(கொழும்பு)

மக்கள் எழுச்சிப் பேர ணியில் கலந்து கொண் டவர்களுக்கு விசம் கலந்த பாலை பகிர்ந்தளித்ததாக என் மீது ஷெஹான் குற் றச்சாட்டினை முன்வைத் தார். ஆகவே அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என பாரா ளுமன்ற உறுப்பினர் முஜி புர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச பாராளுமன்றில் என மீது குற்றச்சாட்டு முன்வைத்தார். அவர் பாராளு மன்ற சிறப்புரி மைகளைப் பயன்படுத்தியே அதனை முன் வைத்தார். பாராளுமன்றில் முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டுக்கு எதிராக நடவடி க்கை எடுக்க முடியாது.

இருப்பினும்பாராளு மன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி என் மீது குற்றச்சாட்டு முன்வைத்துள் ளார். ஆகவே அதற்கெதி ராக சட்ட நடவடிக்கை எடுக்க வுள்ளேன்.

எவ்வாறெனினும் இவ் விடயம் குறித்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக் கிறேன் எனமுஜிபுர் தெரி வித்தார். (இ-7)


# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 5 விதி எண் 7

புதன் கேது ஆதிக்கத் தில் பிறந்த இவர்கள் ஞானமார்க்கம் அறிந்த வர்கள். சுறுசுறுப்புடன் செயலாற்றி இன்முகத் துடன் காட்சியளிப்பார் கள். புராதன காலத்துப் பொருட்களைப் பற்றி நன்கு ஆய்வு செய்வார்கள். சிறந்த அறிவாளிகள். மனதில் பட்டதைச் செய் வார்கள். கண்ணியமிக்க வர்கள். எளிமையான ஆடையில் மிகவும் தூய் மையாகவே காட்சியளிப் பார்கள். சமூகம் வளம் பெறப் பாடுபடுவார்கள். எதிலும் தூய்மையை விரும் புவார்கள். தனிமையில் கற்பனையில் மூழ்குவார்கள். தனது மனதில் இருப்பதை வெளிக்காட்டாமல் தனி மையில் எதையோ நினைத்து வருந்துவார்கள். யாரிடமும் நிரந்தரமாகப் பழக்கம் வைத்துக் கொள்ள மாட் டார்கள்.

மனம் எப்போதும் நேர் மையை விரும்பும். கடவுள் நம்பிக்கை கொண்ட இவர் கள் புனித யாத்திரை செய் வார்கள். இவர்களின் முன் கோபத்தைக் கண்டு மற் றவர்கள் அஞ்சி நடுங்கு வார்கள். இவர்கள் மனம் இயற்கைக் காட்சிகள், மலைப் பிரதேசங்களைக் கண்டு களிக்கும். எந்த் வொரு பொருளையும் பார்த்தவுடன் அதில் ஆராய் ச்சியில் இறங்கிவிடுவார் கள். தைரியசாலி போல நடிப்பார்கள். ஆனால் உள் ளுக்குள் பயந்த சுபாவம் உடையவர்கள். ஒவ்வொரு செயலும் ஆண்டவன் நினை ப்பது நாமென்ன செய்வது என்று வேதாந்தம் பேசு வார்கள். சிலர் இவர்க ளைப் பார்த்தவுடன் வெறுப் படைந்து விடுவார்கள். குறுக்குக் கேள்விகள் கேட் பதிலும் வேதாந்தம் பேசு வதிலும் ஆர்வமுடைய வர்கள். ஆனால் பிறருக்குத் தீங்கு செய்யாதவர்கள். சமயோசிதமாகப் பேசத் தெரியாதவர்கள்.

தன்னைச் சார்ந்தவர் களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர பாடுபடுவார் கள். ஆடம்பரத்தை வெறுப் பார்கள். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பார்கள். இரக சியம் காப்பார்கள். கல்வி அறிவு, உலக அறிவு நிரம்பிய வர்கள். தவறை உணர்ந்து தானே திருத்திக் கொள்ளும் உயர்ந்த பண்பாளர்கள். சம உயரமும் இலட்சியப் பார் வையும் உடையவர்கள். சுறுசுறுப்பான நடையும் உடையவர்கள். தனிமையில் இருக்கும் மனம் பல நல்ல கற்பனைகளில் மூழ்கிடும். இசை, பத்திரிகை, தத்துவம், சினிமா, நாடகம், மருத்து வம், விஞ்ஞானம், ஆன்மீ கம் போன்ற துறைகளில் சிறந்து விளங்குவார்கள். இவர்களின் வாழ்க்கைத் துணை வளைந்து கொடு த்துப் பேசியும் மிடுக்கான உடையணிந்தும் புதிய அணு குமுறைகள் மூலம் இவர்க ளைக் கவர்ந்துவிடுவார் கள். புகழ்ச்சியைப் பெரி தும் விரும்பக் கூடியவர்கள். மற்றவர்கள் இவர்களைப் புகழ்ந்தால் நம்பி விடுவார் கள். பிறருக்கு உதவும் மனமுடைய இவர்களைச் சரியாகப் பயன்படுத்திப் பலபேர் தங்கள் காரியங் களைச் சாதித்துக் கொள் வார்கள். இவர்களின் உணர் வுகள் அடிக்கடி மாறிக் கொண்டேயிருக்கும். அஞ் சாத நெஞ்சம் படைத்தவர் கள். தோல்விகளைக் கண்டு




துவள மாட்டார்கள். மனம் மின்னல் வேகத்தில் செயற் படும்.

சிறிது மனம் வருந்தினா லும் உடனே மாறிவிடுவார் கள். நிலையான நிரந்தர மான இலட்சியம் எதுவும் இருக்காது. அசாத்திய மான மனோதிடம் இருக் கும். பணம் எந்த நிலையி லும் வந்து கொண்டேயி ருக்கும். கையிலும் பையி லும் காசு இல்லையே என்று நினைப்பார்கள். ஏதோ ஒரு வழியில் பணம் வந்து சேரும். தைரியசாலிகள். நல்ல யோசனை சொல்லக்கூடியவர்கள். சுதந் திரமான மனமுடையவர்கள். கலைகளில் மிகுந்த பிரியமு டைய நபர்கள். அமை தியை விரும்பக் கூடியவர் கள். புதிய கொள்கை நடைமுறைகளைக் கொண்ட வர்கள். தவறு செய்தால் மன்னிக்கும் மனமுடை யவர்கள். அழகை மிகவும் ரசிப்பார்கள். உச்சாடன முறைகள் அறிந்தவர்கள். இவர்கள் பற்றி யாரும் எளிதில் அறிந்து கொள்ள முடியாது.

அளவுகடந்த இறை நம்பிக்கை உடையவர்கள். மனதில் குழப்பம் இருந்தா லும் வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்கள். பேச்சினால் புகழ் அடைவா ர்கள். சமாதானப் பிரியர் கள். மலர்கள், இயற்கைக் காட்சிகள், தோட்டம் போன்றவற்றில் மிகுந்த ஆர்வமுடையவர்கள். எப் போதும் இறைநம்பிக் கையில் மூழ்கிக்கிடக்கும் இவர்கள் கோவில் கோவி லாகச் சுற்றுவார்கள். தவறு செய்தவர்களை மன்னிக் கும் மனமுடையவர்கள். இவர்கள் தாங்கள் செய்த தவறுகளை நினைத்துத் தனிமையில் அழுது புலம்பு வார்கள். பெரியவர்களை மதிக்கும் பண்பாளர்கள். பிடிவாத குணமிருக்கும். குடும்ப வாழ்க்கையில் மிகவும் மனவேதனைக்கு ஆளாவார்கள். மனம் சந்நி யாசத்தைக் பெரிதும் விரும் பும். அதிர்ஷ்டக் குறிப்புக் களை முறையாகக் கையா ண்டு வந்தால் அதிர்ஷ்ட மான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
1,10,19,28,6,15,24,5,14,23, 2,11,20,29

**துரதிர்ஷ்ட திகதிகள்**
8,17,26,7,16,25

**அதிர்ஷ்ட நிறங்கள்**
வெளிர் நீலம், மஞ்சள், பச்சை, பொன்நிறம், சாம்பல் நிறம், சிமெண்ட் நிறம்.

**துரதிர்ஷ்ட நிறங்கள்**
கறுப்பு, சிவப்பு, இரு ண்ட நிறங்கள்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**
வைரம், சிர்க்கான், முத்து, வைடூரியம், ஓபல், ஜேட், டைகர்ஸ் ஐ.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




“பொருங்கடல் ஈழத்தரசர் தம்முடி யும், தங்கவர் தேவியர் ஒவ்வெழில் முடியும், முன்னவர் பக்கல் தென்ன வர் வைத்த சுந்தரமுடியும், இரத் தினாரமும், தெண்புரை, ஈழமண்டல முழுதும் மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி பன்மாரன் உடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவர் என்று கல்வெட்டுக் கூறுவதில் இருந்து அறியமுடிகிறது.

மேலும். இம் முக்கிய படையெடுப் பைப் பற்றி இலங்கைக் கல்வெட்டுகளிலும் பாளி, சிங்கள நூல்களி லும் குறிப்பிடப்பட்டுள்ளது.”

## சோழர் ஆக்கிரமிப்பும் அதன் விளைவுகளும் (கி.பி. 900-கி.பி. 1200)

அடுத்த முக்கிய அரசியல் நிகழ்வாக இடம்பெறுவது, கி.பி 985. இல் சோழ அரசனாகப் பதவியேற்ற ராஜராஜசோழன் கி.பி 992 அளவில் அநுராதபுரத்தை தாக்கி வெற்றி கொண்டமையாகும். இவ்வேளையில் அநுராதபுர அரசனாக இருந்த ஐந்தாவது மகிந்தன், அநுராதபுர அரசில் ஏற்பட்ட உட்பூசல்கள் காரணமாக ரோகணத்துக்கு ஒடி ஒளிந்து கொண்டான்.

இவ்வேளையில், ராஜராஜன் இலகுவாக அநுராதபுர அரசை வெற்றிகொள்ள முடிந்தது எனப் பாளி நூல்கள் கூறுகின்றன. ஆனால், ராஜராஜன் இதனை ஒரு பெரு வெற்றியாகக் கருதினான். ராஜராஜன் வெற்றிகொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்க்கப்பட்டது.‘எண்டிசை புகழ்தர ஈழமண்டலம்’ கைப்பற்றப் பட்டதாகச் சோழக் கல்வெட்டுகள் குறிப்புகள் உண்டு. உதாரணமாக திருவாலங்காட்டுச் செப்பேட்டில் பின்வருமாறு ராஜராஜனின் வெற்றி எடுத்துரைக்கப்படுகின்றது.

“வலிமை வாய்ந்த வானரக் குழுவினர் துணைகொண்டு அலைகடலில் அணைகட்டி இலங்கைக் கோனை கூரிய அம்பால் கொன்றொழித்தான் இராகவர் கோமான். அருமொழிவர்மனின் (ராஜராஜன்) பொல்லாப் போர்த்தலைவன் கப்பல் கொண்டு கடல் கடந்து இலங்கைக் கோனை எரித்தொழித்தான். இராமனை வஞ்சியவன் இவனேதான்’

ராஜராஜசோழனின் இலங்கை வெற்றி இலங்கையைச் சோழப் பேரரசின் ஒரு மண்டலமாக, ‘மும்முடிச் சோழமண்டலம்’ என்ற பெயருடன் இணைத்தது. அநுராதபுரத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சோழர் தமது அதிகார மையத்தை அநுராதபுரத்தில் அமைக்கவில்லை. சோழருக்கு ஏற்கனவே கிழக்கிலங்கையில் இருந்த செல்வாக்கினால், அவர்கள் தமது ஆட்சியதிகாரத்தைப் பொலநறுவையில் அமைத்தனர். பொலநறுவை ‘ஜனநாத மங்கலம்’ என்ற பெயரினாலும் பின்னர் ராஜராஜனின் விருதுப்பெயரால் ‘ஜனநாதபுரம்’ என்றும் அழைக்கப்பட்டது.

அநுராதபுர அரசைக் கைப்பற்றி, பொலநறுவையில் சோழர் தமது ஆட்சியை அமைத்தபோதிலும், கூடவே இலங்கையின் வடகிழக்குப் பிரதேசத்தில் சோழராட்சி வலுவுள்ள ஒன்றாக இருந்தபோதிலும், அநுராதபுர மன்னனாக இருந்த மகிந்தன் தொடர்ந்தும் தென்னிலங்கையில் அதிகாரத்துடன் விளங்கினான். ராஜராஜனுக்குப்பின் அவனது மகன் இராஜேந்திர சோழன் 1012 இல் சோழப் பேரரசனாகப் பதவியேற்றான், தென்னிலங்கையில் செல்வாக்குப் பெற்றிருந்த மகிந்தனை அடக்கவும், ஏற்கனவே பாண்டிய மன்னன் அநுராதபுர மன்னனிடம் கொடுத்திருந்திருந்த பாண்டிய முடி, செல்வம் போன்றவற்றை மீட்கவும், 1017 இல் பெரும் படையெடுப்பொன்றை ரோகணத்துக்கு எதிராக நடத்தி, மகிந்தனையும் கைதுசெய்து, பாண்டியரின் முடியையும், செல்வத்தையும் மீட்டு, வெற்றிகரமாக நாடு திரும்பினான். இம் முக்கிய படையெடுப்பு பற்றிச் சோழக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

‘பொருங்கடல் ஈழத்தரசர் தம்முடியும், தங்கவர் தேவியர் ஒவ்வெழில் முடியும், முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தரமுடியும், இரத்தினாரமும், தெண்புரை, ஈழமண்டல முழுதும் மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி பன்மாரன் உடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவர்’என்று கல்வெட்டுக் கூறுவதில் இருந்து அறியமுடிகிறது.

மேலும் இம் முக்கிய படையெடுப்பைப் பற்றி இலங்கைக் கல்வெட்டுகளிலும் பாளி, சிங்கள நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் வடபாகத்தின் ஊர்காவற்றுறையில் கிடைத்த இரண்டு கல்வெட்டுகள் இப் படையெடுப்பைப் பற்றியும், வெற்றி கொள்ளப்பட்டமை பற்றியும் கூறுகி ன்றன.

முதலாவது கல்வெட்டில்:

‘ஈழம்முழுவதும் கொண்டு ஈழத்தரசையும் பெண்டிர் பண்டாரமும், பிடிச்சுக்கொடுபோன அதிகாரத் தண்ட நாயகனார், ஜயங்கொண்ட சோழ மூவேந்தவேளாளர்’ எனவும்,

இரண்டாவது கல்வெட்டில்:

‘ஈழமான மும்முடி சோழ மண்டலத்து பாண்டியன் குலதனமாக வைத்த முடியும், பெண்டிர் பண்டாரமும், பிடிச்சுக் கொடு போன’ எனவும் எழுதப்பட்டுள்ளது.

எனவே மேலே கூறப்பட்ட கல்வெட்டு ஆதாரங்கள், இலங்கையில் ராஜராஜன் கால ஆட்சியின் போது பெரும்பாலும் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பகுதிகளை உள்ளடக்கி ஆரம்பித்த சோழராட்சி இராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில், இலங்கை முழுவதையும் தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தமையைக் காட்டுகின்றன. ஏற்கனவே முன்னொரு பகுதியில் குறிப்பிட்டது போன்று, பராந்தகச் சோழன் இலங்கைக்குப் படையெடுத்த போதிலிருந்தே இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசம் சோழ அரசின் ஆதிக்கத்தினை ஏற்று இருந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது.

மேலும், ராஜராஜன் அநுராதபுர அரசை 992 இல் கைப்பற்றியதிலிருந்து சுமார் 77 வருடங்கள் சோழர் இலங்கையை ஆட்சி செய்திருக்கின்றார்கள். ஆனால், பராந்தகச் சோழன் 945-953 காலப்பகுதியில் முதல் தடவையாகப் படையெடுத்த பொழுதே இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்கள் சோழரின் செல்வாக்கிற்கு உள்ளிட்ட பிரதேசங்களாகக் காணப்படுகின்றன.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு மேலாக, இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் வடமேற்குப் பிரதேசங்கள் சோழர் ஆதிக்கத்திற்கும், செல்வாக்கிற்கும் உட்பட்டு இருந்திருக்கின்றன என்பது மேற்கூறப்பட்ட அரசியல் நிகழ்வுகளினூடாக அறியப்படுகின்றது.

எனவே, இவ்வாறு ஒரு நூற்றாண்டுக்கு மேல் சோழப்பேரரசின் ஆதிக்கம் மேற்கூறப்பட்ட பிரதேசங்களில் நிலவியதன் விளைவாக, இப்பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் அரசியல், நிர்வாகக் கட்டமைப்பு ரீதியாக சமயம், மொழி, கலாசாரம், பொருளாதாரம், தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில், தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் உள்ள தமிழ் மக்களைப் போன்று தனித்துவமான பண்புகளையும், அடையாளத்தையும் பெற்று, கட்டமைப்பு மிக்க ஒரு தேசமக்களாக வாழ்வதற்குரிய சகல அம்சங்களையும் பெற்றிருந்தார்கள் என்பதனை தெளிவாக அறிய முடிகிறது.

அத்தோடு, அவர்கள் மேற்படி பிரதேசங்களில் வரலாற்றுக்காலம் தொடக்கம், பல அரச அமைப்புக்களை ஏற்படுத்தி, அவரவர்க்குரிய நிலப்பரப்புக்களில் சுயாட்சி செய்து வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பது முன்னைய அத்தியாயங்களில் கூறப்பட்டது.

இவ்வாறான அரசு அமைப்புகளில் அரசர்கள், அமைச்சர்கள், உயரதிகாரிகள், படைத்துறையினர், நிர்வாகப் பிரிவினர் எனப் பலர் இருந்திருப்பர். சோழர் மேலாண்மையை இப் பிரதேசம் ஏற்றதன் பின் நிச்சயமாக மேற்குறிப்பிட்டவர்கள் எல்லோரும் சோழர் நிர்வாக அமைப்பு முறையில் இணைந்து நன்று பயிற்சி பெற்றிருப்பார்கள். இவ்வாறான ஒரு பயிற்சி, சோழர் ஆட்சி இலங்கையிலிருந்து நீங்கி, கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியம் ஒரு வலுவுள்ள இராச்சியமாக மலர்வதற்கு பங்களிப்புச் செய்தேயிருக்கும் என உறுதியாகக் கூறமுடியும்.

மேலும், இலங்கையில் சோழர் ஆட்சி 1070களில் முடிவுக்கு வந்த பொழுது, மீண்டும் சிங்கள வம்சத்தவரின் ஆட்சி பொலநறுவையை மையமாகக் கொண்டு எழுச்சி பெற்றது என முன்னர் கூறப்பட்டது. இக்காலப்பகுதியில், தமிழ்மக்களின் வம்சத்தினர் பொலநறுவை அரசிலும், அதன் நிர்வாகத்திலும், உயர் பதவிகளிலும், படை அமைப்புக்களிலும் இடம்பெற்றிருக்கின்றார்கள்.

மேலும் கூறுவதானால், பொலநறுவையில் ஆண்ட மன்னர்களும் இருவர் மட்டுமே தாய் வழியிலும், தந்தை வழியிலும் சிங்களக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் விஜயபாகுவும், அவன் தம்பி ஜயபாகுவுமே அவ்விருவர் ஆவர். (தொடரும்)

# ஏழு தமிழர்களின் விடுதலை தமிழக அரசின் கையில் தான் உள்ளது



## இளங்கோவன் கூறுகிறார்

ராஜீவ் கொலை வழக்கு கைதிகள் 7 பேரின் விடுதலை தமிழக அரசின் கையில் தான் உள்ளது என்று ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மதுரை விமான நிலையத்தில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது,



ராஜீவ்காந்தி கொலை வழக்கின் கைதிகள் 7 பேரின் விடுதலை குறித்து தமிழக அரசுதான் முடிவு செய்ய வேண்டும்.

ராஜீவ் காந்தி கொலை குறித்து ஏற்கனவே சோனியா காந்தி "மறப்போம், மன்னிப்போம்" என்று கூறியிருக்கிறார்.

எனவே 7 பேர்களையும் விடுதலை செய்வது தமிழக அரசின் கையில்தான் உள்ளது. (7)

# மத்திய அரசின் வினைத்திறனற்ற செயற்பாட்டால் மக்கள் பாதிப்பு

## லாலு பிரசாத் விசனம்

(டில்லி)

மத்திய அரசின் வினைத்திறனற்ற செயற்பாட்டால் ஒவ்வொரு சாதாரண மக்களும் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதாக பீகார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் விசனம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக லாலு பிரசாத் யாதவ். தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,




"நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளதை போன்று பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது.

இவ்வாறான நிலைக்கு முக்கிய காரணம் மத்திய அரசின் இயலாமை ஆகும். இதனால் சாதாரண மக்களும் தமது அன்றாட வாழ்க்கையில் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வாழ வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது என லாலு பிரசாத் யாதவ் டுவிட் செய்துள்ளார்.

இதேவேளை எரிபொருள் விலை ஏற்றம் மற்றும் இந்திய பணத்தின் மதிப்பு வீழ்ச்சி ஆகியவற்றுக்கு எதிராக நாடு தழுவிய முழு அடைப்பு போராட்டமொன்றை காங்கிரஸ் கட்சி இன்று திங்கட்கிழமை நடத்த வுள்ளதாக அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7)

### முருகன் – நளினி உருக்கமான சந்திப்பு

# விரைவில் விடுதலை செய்யக்கோரி தமிழக அரசுக்கு மனு





(வேலூர்)

நீதிமன்ற தீர்ப்புக்கு ஏற்ப தங்களை விரைந்து விடுவிக்கக் கோரி முருகன், நளினி ஆகியோர் தமிழக அரசுக்கு கோரிக்கை மனு அனுப்பி உள்ளனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை குற்றவாளிகளை தமிழக அரசே விடுதலை செய்வது குறித்து முடிவு எடுக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

வேலூர் சிறையில் உள்ள நளினி அவரது மகள் திருமணத்துக்காக 6 மாதம் பரோல் கேட்டு சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவை நேற்று முன்தினம் வாபஸ் பெற்றார்.

இந்த நிலையில் வேலூர் சிறையில் நளினி அவரது கணவர் முருகன் சந்திப்பு நேற்றுக் காலை நடந்தது. இருவரும் விடுதலை தொடர்பாக பேசியுள்ளனர். மேலும் அவர்கள் மகள் திருமண ஏற்பாடுகள் குறித்து உருக்கமாக பேசியதாக கூறப்படுகிறது.

ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் 7 பேரையும் விடுதலை செய்வது தொடர்பாக உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு நளினி மற்றும் முருகன் உள்ளிட்டவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மேலும் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ராகுல். முதல்வர் பழனிசாமி, மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி உட்பட அனைத்து தலைவர்களுக்கும் நளினி மற்றும் முருகன் நன்றி தெரிவித்தனர்.

நீதிமன்ற தீர்ப்புக்கு ஏற்ப தங்களை விரைந்து விடுவிக்கக் கோரி முருகன், நளினி ஆகியோர் தமிழக உள்துறை செயலருக்கும், சாந்தன் தமிழக முதல்வருக்கும் கோரிக்கை மனு அனுப்பி உள்ளனர். (7)

# காங்கிரஸ் ஆட்சியை விட பா.ஜ.கவில் தான் அதிக ஊழல்

## டில்லி முதல்வர் கெஜ்ரிவால் காட்டம்

(லக்னோ)

முந்தைய காங்கிரஸ் ஆட்சியை விட தற்போதைய பா.ஜ.க. ஆட்சியில் தான் அதிகமாக ஊழல் நடைபெறுவதாக டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் விமர்சித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் மத்திய முன்னாள் அமைச்சர் யஷ்வந்த் சின்கா, நடிகரும் பா.ஜ.க எம்.பி.யுமான சத்ருகன் சின்கா, டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் போன்றோர் பங்கேற்றனர்.

அப்போது பேசிய அரவிந்த் கெஜ்ரிவால் முந்தைய காங்கிரஸ் ஆட்சியை விட பா.ஜ.க. ஆட்சியில் ஊழல் அதிகரித்துவிட்டதாக குற்றம்சாட்டினார். இதுதொடர்பாக அவர் குறிப்பிட்டுள்ளதாவது,



முன்னர் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி ஊழலில் திளைத்த காரணத்தால் கோபமடைந்த மக்கள் அக்கட்சியை ஆட்சியில் இருந்து தூக்கி எறிந்துவிட்டு மாற்றத்தை உருவாக்குவோம் என வாக்குறுதி அளித்த பா.ஜ.கவிடம் ஆட்சியை ஒப்படைத்தனர். ஆனால் இப்போது இந்த இரண்டு கட்சிகளும் ஊழல் கட்சிகளாகிவிட்டன.

சொல்லப்போனால் முந்தைய காங்கிரஸ் ஆட்சியை விட தற்போதைய பா.ஜ.க. ஆட்சியில் ஊழல் அதிகரித்து விட்டது. காங்கிரஸ் ஆட்சியில் 2ஜி ஊழல் என்றால், பா.ஜ.க. ஆட்சியில் சகாரா - பிர்லா ஊழல்.

காங்கிரஸ் ஆட்சியில் கொமன்வெல்த் ஊழல் என்றால், பா.ஜ.க. ஆட்சியில் லலித் மோடி ஊழல். அவர்கள் போபர்ஸ் விமான ஊழலில் ஈடுபட்டார்கள் என்றால், இவர்கள் ரபேல் விமான ஊழலில் ஈடுபட்டுள்ளனர். டில்லியில் ஆம் ஆத்மியும் மத்தியில் பா.ஜ.கவும் ஒரே நேரத்தில் ஆட்சிக்கு வந்தன.

ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு பாடசாலைகள் தரம் உயர்வு, வைத்தியசாலைகள் எண்ணிக்கை அதிகரிப்பு, குறைந்த விலையில் மின்சாரம் விநியோகம் என்று டில்லியில் நாங்கள் செய்த சாதனைகள் உலகளவில் பேசப்படுகிறது.

ஆனால், இதைப் போன்ற நலத்திட்டங்களை நாடு முழுவதும் மோடியால் ஏன் செய்ய முடியவில்லை. பணமதிப்பிழப்பு நடவடிக்கை, ஜிஎஸ்டி வரி விதிப்பு போன்றவற்றால் மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். (7)

# பேருந்து கவிழ்ந்தது; 21 பேர் உயிரிழப்பு

(ஜகர்த்தா)

இந்தோனேசியாவில் உள்ள ஜாவா தீவில் பேருந்து நிலை தடுமாறி வீதியோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 21 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தோனேசியாவில் உள்ள ஜாவா தீவில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து திடீரென கட்டுப்பாட்டை இழந்து வீதியோர பள்ளத்தில் கவிழ்ந்து நொருங்கியது.

தெற்கு ஜாவா தீவில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தை சேர்ந்த ஊழியர்கள் 4 பேருந்துகளில் அத்தீவில் அமைந்துள்ள சுற்றுலாப் பிரதேசமான சுகாபூமி மாவட்டத்திற்கு சென்றுள்ளனர்.

அதில் ஒரு பேருந்து, அதிக வளைவுகள் உடைய வீதியில் செல்லும் போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து நிலை தடுமாறி




சுமார் 100 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 21 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 9 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மோசமான வீதிகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளையுடைய இந்தோனேசியாவில் வீதி விபத்துக்கள் மிகவும் சர்வ சாதாரணமாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (7)

# வெளிநாடு

# ஜப்பானில் நிலநடுக்கம் உயிரிழப்பு 40 ஆக உயர்வு





(டோக்கியோ)

ஜப்பான் நாட்டின் ஹொக்கைடோ மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை நேற்று முன்தினம் 40 ஆக உயர்ந்துள்ளது.

ஜப்பான் நாட்டில் கடந்த 4 ஆம் திகதி 'ஜெபி' புயல் தாக்கியது. இந்தப் புயல் காரணமாக கனமழை பெய்தது. கடந்த 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. புயல், மழையில் சிக்கி 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பல்வேறு நகரங்கள் வெள்ளத்தின் பிடியில் சிக்கின. விமானங்கள், கப்பல்கள், புகையிரத சேவைகள் இரத்தாகி போக்குவரத்து முடங்கியது. மின்சாரம் துண்டிக்கப்பட்டு இலட்சக்கணக்கான வீடுகள் இருளில் மூழ்கின.

புயலால் ஏற்பட்ட பாதிப்பு மறைவதற்குள் கடந்த 6ஆம் திகதி அதிகாலை 3.08 மணிக்கு ஹொக்கைடோ தீவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.7 புள்ளிகளாக பதிவானது. இந்த நில நடுக்கத்தை தொடர்ந்து பல முறை அதிர்வுகள் ஏற்பட்டன.

மலைப்பகுதிகள் சூழ்ந்த கிராமப் பகுதியான அட்சுமா உள்ளிட்ட பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. இதில் கட்டடங்கள் தரைமட்டமாகின.

பாலங்கள் பிளவுபட்டன. வீதிகள் பெருத்த சேதம் அடைந்தன. மரங்கள் வேரோடு சாய்ந்தன.

தகவல் தொடர்பு சேவை பாதிக்கப்பட்டது. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் சுமார் 30 இலட்சம் வீடுகள் இருளில் மூழ்கின.

நிலநடுக்கத்தால் இடிந்து விழுந்த வீடுகளுக்குள் சிக்கியிருந்த மக்களை மீட்பதற்காக தன்னார்வலர்கள் உட்பட சுமார் 40 ஆயிரம் பேர் இரவு - பகலாக தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அவர்களுக்கு உதவியாக புல்டோஸர் வாகனங்கள், மோப்ப நாய்கள் மற்றும் 75 ஹெலி கொப்டர்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் புதையுண்ட வீடுகளில் சிக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளதாகவும் சுமார் 15 பேர் காணாமல் போனதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இறந்தவர்களில் பலர் அட்சுமா கிராமத்தை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. (7)

## ஆட்சிக்கு எதிராகக் கலகம்

# எகிப்தில் 75 பேருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு



(கெய்ரோ)

எகிப்து நாட்டில் முன்னாள் ஜனாதிபதி முஹம்மது மோர்சியை பதவிநீக்கம் செய்து ஆட்சியை கைப்பற்றிய அப்டெல் பட்டா சிசியின் அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட 75 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

எகிப்து நாட்டில் கடந்த 2013ஆம் ஆண்டில் ஜனாதிபதி பதவியிலிருந்து இராணுவத்தால் வெளியேற்றப்பட்ட முஹம்மது மோர்சியின் ஆட்சியை மீண்டும் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தில் அப்போது அவரது இயக்கத்தை சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் தலைநகர் கெய்ரோவில் உள்ள ரப்பா அடாவியா சதுக்கத்தில் முகாம்கள் அமைத்து போராட்டம் நடத்தினர்.

அவருக்கு ஆதரவாக முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தை சேர்ந்தவர்களும் போராட்டங்களில் குதித்தனர்.

அவர்களை கலைக்க முயன்ற இராணுவத்தினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே நடந்த மோதலில் சுமார் 800 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் ஜனாதிபதி அப்டெல் பட்டா சிசியின் ஆட்சிக்கு எதிரான கலகத்தில் ஈடுபட்டதாக முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தை சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

அவர்களில் சுமார் 700 பேர் மீதான வழக்கு விசாரணையில் பலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, சிலர் தூக்கிலிட்டும் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், இவ்வழக்கில் தொடர்புடைய முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தை சேர்ந்த மூத்த தலைவர்கள் எஸ்ஸாம் அல் ஏரியான், முஹம்மது பெல்ட்டாகி உட்பட 75 பேருக்கு மரண தண்டனை விதித்து நேற்று கெய்ரோ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (7)

# சிரியாவில் இரசாயனத் தாக்குதல்களுக்கு அமெரிக்கா பொறுப்புக்கூறாது

## அமெ.கடற்படைத் தளபதி தெரிவிப்பு



(வோஷிங்டன்)

எதிர்காலத்தில் சிரியாவில் இடம்பெறவுள்ள இரசாயனத் தாக்குதல்களுக்கு அமெரிக்கா பொறுப்புக்கூறாதென அமெரிக்க கடற்படைத் தலைவர் ஜோசஃப் டன்ஃபோட் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இரசாயன வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்களைப் பயன்படுத்துதல் தொடர்பில் சிரியாவிற்கு அமெரிக்கா பல தடவைகள் எச்சரிக்கை விடுத்தும், சிரியாவின் இட்லிப் நகரம் தொடர்ச்சியாக இரசாயன வெடிபொருட்களை தயாரிப்பதாக அமெரிக்காவின் கடற்படைத் தலைவர் தெரிவித்தார்.

இந்தியாவிற்கான பயணத்தினை மேற்கொண்டுள்ள அமெரிக்கத் கடற்படைத் தலைவர் ஜோசஃப் டன்ஃபோட் ஊடகவியலாளர்களுடன் நடத்திய அவசர ஊடக சந்திப்பில் சிரியாவிற்கு இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கம் முறையாக பேச்சுவார்த்தைகளின் மூலம் பிணக்குகளைத் தீர்க்க முயற்சி செய்து கொண்டிருக்கும் அதேவேளை சிரிய பயங்கரவாதிகள் இரசாயன தாக்குதல்களை நிறுத்தாமல் இருப்பது, அமெரிக்காவின் எச்சரிக்கையினைப் புறந்தள்ளுவதாகவும் அமெரிக்க கடற்படை தளபதி தெரிவித்தார்.

மேலும், சிரிய அரசாங்கத்தினால் இட்லிப் நகரில் இரசாயன ஆயுதங்கள் தயாரிப்பதற்கான ஆதாரங்கள் காணப்படுவதாகவும் அதனை விரைவில் வெளியிடப்போவதாகவும் அமெரிக்க கடற்படை தளபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார். (7)

# ஹெலிகொப்டர் விபத்து ஆறு பேர் உயிரிழப்பு!



(காத்மண்டு)

நேபாளம் நாட்டின் காத்மாண்டு நகரில் நேற்று 7 பேருடன் புறப்பட்டு சென்ற தனியார் ஹெலிகொப்டர் காட்டுப்பகுதியில் விழுந்து நொருங்கியதில் 6 பேர் பலியான நிலையில் பெண் பயணி மட்டும் காயங்களுடன் உயிர் தப்பினார்.

நேபாள நாட்டில் சமாகான் என்ற இடத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை 7.40 மணிக்கு தலைநகர் காத்மாண்டு நோக்கி ஆல்டியூட் ஏர் ஹெலி கொப்டர் புறப்பட்டது. இந்த ஹெலிகொப்டரில் ஒரு நோயாளியும் மேலும் 5 பயணிகளும் இருந்தனர். நிஷால் என்ற விமானி ஹெலிகொப்டரை செலுத்தினார்.

இந்த நிலையில், அந்த ஹெலிகொப்டர் தாடிங், நுவாகாட் மாவட்டங்களையொட்டிய அடர்ந்த காட்டில் விழுந்து நொருங்கி விபத்துக்குள்ளானது தெரிய வந்தது. இந்த கோர விபத்தில், விமானி நிஷால் உள்ளிட்ட 6 பேர் பலியாகினர். (7)

# சிறுவர் அரங்கம்

## உழைப்பின் மதிப்பு



வெள்ளிமலை ஜமீன்தார் வீட்டுப் பொற்கொல்லன் வாசு. அவனது பாட்டனார். முப்பாட்டனார் காலத்திலிருந்து அக்குடும்பத்தவர் ஜமீன்தார் வீட்டு நகைகளையும் மற்ற தங்கப் பாத்திரங்களையும் செய்து கொடுத்து வந்தனர்.

வாசுவின் மகன் சசிகுமார் அவன் தன் தந்தை செய்யும் தொழிலைக் கற்காமல் ஊர் சுற்றி வந்தான். உடல் வளைந்து வேலை செய்வது என்றால் அவனுக்கு அது எட்டிக் காயாக இருந்தது.

வாசு இறந்தபிறகு சசிகுமார் வேலைக்கு செல்லாமல் தன் முன்னோர் வைத்துவிட்டுப் போன சொத்தின் வருமானத்தில் வாழ்ந்தான்.

ஒரு நாள் ஜமீன்தார் அழைத்து வரச் சொன்னதாக சசியிடம் ஒரு சேவகன் வந்து கூறினான். அவனும் சென்றான்.

ஜமீன்தார் அவனிடம் சில நகைகள் செய்ய வேண்டும் எனக் கூறவே தன் விரலில் காயம் ஏற்பட்டிருப்பதாகவும் அது ஆறியதும் செய்து தருவதாக சாக்குச் சொல்லி விட்டு வந்தான்.

அதைக்கேட்ட சசியின் தாய் தன்மகனிடம், "சசிகுமார்! ஜமீன்தார் வீட்டு வேலையை விட்டால் நமக்கு வேறு கதி இல்லை. நீ எப்படியாவது அவர் சொல்லும் நகைகளை உன் தந்தையிடம் வேலை செய்தவர்களை வைத்துச் செய்.

அவர்களுக்குக் கூலி கொடுத்து விட்டு பாக்கிப் பணத்தை நாம் வைத்துக் கொள்ளலாம்." என்றாள்.

இரண்டு நாள் கழித்து சசிகுமார் ஜமீன்தாரைக் கண்டு அவர் கூறும் நகைகளைச் செய்து கொடுப்பதாகக் கூறினான்.

அவரும் என்னென்ன நகைகள் செய்ய வேண்டும் எனக்கூறி அவற்றிற்கு எவ்வளவு தங்கமும் இரத்தினக் கற்களும் தேவை எனச் சொல்லச் சொன்னார்.

சசி கணக்குப் போட்டு மறுநாள் காலை விபரமாகச் சொல்வதாகக் கூறிச் சென்றான்.

சசி தன் தந்தையிடம் வேலை செய்தவர்களை அழைத்து ஜமீன்தாரர் சொன்ன நகைகளை செய்து கொடுக்குமாறு அதற்கு அவர்களுக்குக் கூலி கொடுப்பதாகவும் கூறினான். பிறகு அந்த நகைகளைச் செய்ய ஆகும் தங்கம், நவரத்தினங்கள் முதலியவற்றையும் கேட்டு தெரிந்து கொண்டான்.

மறுநாள் காலை ஜமீன்தாரைக் கண்டு விபரங்களைக் கூறி அவரிடமிருந்து தங்கத்தையும் இரத்தினங்களையும் வாங்கிக் கொண்டான். அவரிடம் முற்பணம் ஏதும் வாங்கவில்லை. மேலும் நகைகளுக்கு மதிப்பிட்டதற்கு மேலே கொஞ்சம் தங்கம் போட வேண்டி வந்தது. அதையும் சசிகுமார் தன் கையிலிருந்தே போட்டான். அவர்களும் நகைகளைச் செய்து கொடுத்தனர்.

சசி நகைகளை எடுத்துப் போய் ஜமீன்தாரிடம் கொடுத்தான். ஜமீன்தாரரும் அவற்றின் வேலைப்பாட்டைப் பாராட்டி பத்து வராகன்களை சசிகுமாருக்குக் கொடுத்தார்.

சசி திடுக்கிட்டான்.

ஏனெனில் கூலியாகவும் அதிகத் தங்கம் போட்ட வகையிலும் அவன் நூறு வராகன்கள் வரை செலவு செய்திருந்தான்.

ஜமீன்தாரும் ஓரக்கண்ணால் அவனைப் பார்த்து மனதிற்குள் சந்தோசப்பட்டார்.

"இதோ பார், இன்னும் சில நகைகளைச் செய்ய வேண்டும். இவற்றை நீ ஐந்து நாட்களில்செய்து கொடுக்க வேண்டும்!" என்றார் ஜமீன்தார்.

ஜமீன்தாரர் தங்கத்தையும் நவரத்தினங்களையும் கொண்டு வரச் சொல்லி அவற்றை சசியிடம் கொடுத்து "இதற்கு எவ்வளவு தங்கம் வேண்டும் என்று உன்னை மதிப்பிடச் சொல்லி உனக்கு சிரமம் கொடுக்காமல் நானே கணக்கிட்டு விட்டேன்" என்றார் சிரித்தவாறே.

சசி முன்போலவே கூலியாட்களைக் கொண்டு நகைகளைச் செய்து ஐந்து நாட்களுக்குள் ஜமீன்தாரரிடம் கொண்டு போய்க் கொடுத்தான். அதற்கு அவனுடைய பணம் நூற்று ஐம்பது வராகன்கள் செலவாயிற்று. ஆனால் ஜமீன்தாரர் கூலியாகக் கொடுத்ததோ பதினைந்து வராகன்கள் மட்டுமே! அடுத்த சில நாட்களுக்குப் பின் மீண்டும் ஜமீன்தாரர் சசியை வரவழைத்து மேலும் சில நகைகளைச் செய்யச் சொல்லி அதற்கான தங்கத்தையும் நவரத்தினங்களையும் கொடுத்தார்.

சசியும் அவற்றை வாங்கிக் கொண்டு சோகத்துடன் விட்டுக்குப் போனான். அவன் தன் தாயாரிடம் "இப்போது என்னம்மா செய்வது? ஒவ்வொரு தடவையும்நான்வேலைக்காரர்களுக்கு கூலி கொடுத்து நட்டப்பட்டுக் கொண்டே இருப்பதா? என்றான்.

"வேண்டாம் கடந்த இருமுறைகளில் அந்த வேலையாட்களுடன் உட்கார்ந்து அவர்கள் நகைகளை எப்படிச் செய்கிறார்கள் என்பதை நன்கு கவனித்து வந்திருக்கிறாய். அதனால் நீயே யாருடைய உதவியும் இல்லாமல் இந்த நகைகளைச் செய். உன்னால் முடியும்" என்றாள்.

சசியும் தன் தாய் சொல்வது சரி எனத் தோன்றவே. அவனே ஜமீன்தாரரின் நகைகளைச் செய்யலானான். இரவும் பகலுமாகச் சிரத்தையுடன் அவற்றைச் செய்து முடித்தான். அவற்றை எடுத்துக் கொண்டு போய் ஜமீன்தாரரிடம் கொடுக்கவே அவரும் அவனது வேலைத் திறனைப் பாராட்டிவிட்டு இரண்டு வராகன்களைக் கூலியாகக் கொடுத்தார்.

அதைக் கண்ட சசிக்கு கோபம் கோபமாய் வந்தது.

"ஐயா! தங்களுக்கு உழைப்பின் மதிப்பே கொஞ்சமும் தெரியவில்லை. இந்த நகைகளைச் செய்ய நான் எவ்வளவு பாடுபட்டேன் தெரியுமா? இனிமேல் இம்மாதிரிக் குறைந்த கூலிக்கு வேலை செய்ய இயலாது. என்னை விட்டுவிடுங்கள். வேறு எங்காவது போய் இந்தத் தொழிலை செய்து அதற்கு உரிய கூலியைப் பெற்று சுகமாக வாழ்கிறேன்" என்றான் படபடப்பாக.

"ஓ அப்படியானால் நீயே இந்த நகைகளை உன் கைப்படச் செய்ததாகச் சொல்கிறாயா?" என்று கேட்டார்.

அது கேட்டு சசியும் ஆச்சரியத்துடன் ஜமீன்தாரைப் பார்த்தான்.

அவர் சசியை தன் பக்கம் வரச்சொல்லி அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து "சபாஷ்! கடந்த இரண்டு தடவைகளில் நான் கொடுத்த கூலி குறைவானது என்றுகூறவில்லை. வேறுயாரையோ செய்யச் சொன்னாய். அதன்னால் அப்போது உனக்கு உழைப்பின் மதிப்பு தெரியவில்லை. நான் கொடுத்ததையும் மறுபேச்சு பேசாமல் வாங்கிக் கொண்டு போனாய். ஆனால் இந்தத் தடவை நான் உனக்கு மிகக் குறைந்த கூலி கொடுத்தபோது நீ உழைப்பின் மதிப்பு பற்றிப் பேசியதால் இந்த நகைகளை நீயே உன் கைப்பட செய்திருக்கிறாய் எனத் தெரிந்து கொண்டேன். நீ இவ்வளவு நாட்களாக உன் தொழிலைப் பற்றிக் கவலைப்படாமல் அலட்சியமாக இருந்தது பற்றி நான் கேள்விப் பட்டுத்தான் இப்படிச் செய்தேன். இப்போது உனக்கு உழைப்பின் மதிப்பு தெரிந்து விட்டது. நீ வேறு எங்கும் போக வேண்டாம். இங்கேயே அக்கரையுடன் உன் தொழிலைச் செய்து வா" என்று அறிவுரை கூறி அவனுக்கு ஆயிரம் வராகன்களை கொடுத்தார்.

உழைப்பின் மதிப்பை அறிய செய்த ஜமீன்தாரை வணங்கி அன்றுடன் திருந்தினான்.

## சிந்தனைத் துளிகள்

வாழ்க்கை என்பது
ஒரு சந்தர்ப்பம் - நழுவ விடாதிருங்கள்
ஒரு கடமை - நிறைவேற்றுங்கள்
ஒரு இலட்சியம் - சாதியுங்கள்
ஒரு சோகம் - தாங்கிக்கொள்ளுங்கள்
ஒரு போராட்டம் - வென்றுகாட்டுங்கள்
ஒரு பயணம் - நடத்தி முடியுங்கள்

நீங்கள் ஒரு வாய்ப்பைத் தவறவிட்டால்
உங்கள் விழிகளைக் கண்ணீரால்
நிரப்பாதீர்கள்!
உங்கள் கண்ணீர்.
உங்கள் முன் உள்ள இன்னொரு வாய்ப்பை
மறைத்துவிடும்!
அழகிய புன்னகையுடன் எதிர்கொள்ளுங்கள்!

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் 2018.09 10

❖1759-பாண்டிச்சேரியில் பிரெஞ்சுக் கடற்படைகளுக்கும் ஜோர்ஜ் போக்கொக் தலைமையிலான பிரித்தானியக் கடற்படைக்கும் இடையில் போர் வெடித்தது. பிரெஞ்சுக் கப்பல் பலத்த சேதத்துடன் பின்வாங்கியது.

❖1858-55 பண்டோரா என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.

❖2000-மட்டக்களப்பு நகர முன்னாள் நகரத் தந்தை செழியன் பேரின்பநாயகம் படுகொலை செய்யப்பட்டார்.

❖2002-சுவிட்சர்லாந்து. ஐ.நாவில் இணைந்தது.

❖2006-ஈழப்போர்: முகமாலை முன்னரங்கப் பகுதியில் இலங்கை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெற்ற மோதலில் 28 இராணுவத்தினர் கொல்லப்பட்டு 119 பேர் படுகாயம் அடைந்தனர்.

### பிறப்புகள்

❖1862-பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், தமிழறிஞர், உரையாசிரியர், கவிஞர் (இ.1914)

❖1887-கோவிந்த் வல்லப் பந்த், உத்தரப் பிரதேசத்தின் முதலாவது முதலமைச்சர் (இ.1961)

❖1912-பசப்பா தனப்பா ஜாட்டி, இந்தியாவின் 5 ஆவது குடியரசுத் துணைத் தலைவர் (இ.2002)

❖1920-சி.ஆர்.ராவ், இந்திய-அமெரிக்க கணிதவியலாளர், புள்ளியியலாளர்

❖1934-பி.எம்.சுந்தரம், தமிழக இசையியல் அறிஞர்

❖1965-அதுல் குல்கர்ணி. இந்தியத் திரைப்பட நடிகர்

❖1971-மேஜர் காந்தரூபன், விடுதலைப்புலி உறுப்பினர் (இ.1990)

❖1975-விவேகா, தமிழகத் திரையிசைப் பாடலாசிரியர்

❖1980-ஜெயம் ரவி, தமிழ்த் திரைப்பட நடிகர்

❖1984-சின்மயி, தமிழ்த் திரைப்படப் பின்னணிப் பாடகி

### இறப்புகள்

❖1915-பாகாஜதீன். இந்திய மெய்யியலாளர், எழுத்தாளர் (பி.1879)

❖1925-எல்.டி.சாமிக்கண்ணு பிள்ளை, இந்திய அரசியல்வாதி, வரலாற்றாளர், மொழியியலாளர், வானியலாளர் (பி.1865)

❖1983-அ.க.செட்டியார், தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் (பி.1911)

❖1997-பாக்கீர் மாக்கார், இலங்கை அரசியல்வாதி (பி.1917)

❖2008-வி.கே.கானமூர்த்தி, இலங்கை நாதஸ்வரக் கலைஞர் (பி. 1948)

### சிறப்பு நாள்

❖குழந்தைகள் நாள் (ஒண்டுராசு)

❖உலக தற்கொலைத் தவிர்ப்பு நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 90 | 80 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 85 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 100 | 80 | 100 | 100 |
| தக்காளி | 160 | 40 | 30 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 90 | 140 | 60 | 160 | 200 |
| கரட் | 300 | 180 | 200 | 300 | 200 |
| பூசணி | 80 | 50 | 40 | 80 | 40 |
| புடோல் | 80 | 60 | 30 | 80 | 40 |
| வாழைக்காய் | 50 | 90 | 70 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 90 | 85 | 100 | 120 |
| பாகற்காய் | 180 | 100 | 90 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 40 | 100 | 100 |
| கருணைக்கிழங்கு | 150 | 80 | 60 | 120 | 100 |
| பயற்றங்காய் | 160 | 10 | 80 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 100 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 70 | 60 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 60 | 80 | 40 |
| போஞ்சி | 200 | 140 | 120 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 70 | - | 60 | 120 | 20 |
| கீரை-1பிடி | 20 | 20 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 40 | 80 | 70 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 45 | 30-50 | 50 |
| இராசவள்ளி | 160 | 150 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 80 | 120 | 90 | 160 | — |
| முள்ளங்கி | 80 | 40 | 30 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 40 |
| வல்லாரை | 40 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | 110 | 80 | 30 |

தினசரிப் பத்திரிகைகள்தாம் உலகைக் காட்டும் கண்ணாடிகள்.
— பாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சுமந்திரனின் கருத்துக்கு ரெலோவின் பதில் என்ன?

எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதைவிட வாழ்ந்த காலத்தில் அவர் சாதித்தது என்ன என்றறிவதுதான் கற்றறிந்தார் செயல்.

சுவாமி விவேகானந்தர், பாரதியார் போன்றவர்கள் வாழ்ந்த காலம் மிகச் சொற்பமானது.

ஆனால் இன்றுவரை இந்த உலகம் அவர்களைப் புகழ்ந்தும் வியந்தும் பேசுகின்றது.

எனவே ஒருவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதைவிட; எவ்வளவு காலம் அரசியலில் இருந்தார் என்பதைவிட அவர் சாதித்தது என்ன? மக்கள் மத்தியில் அவரின் செல்வாக்கு எப்படி? அவரின் நேர்மைத்தன்மை தொடர்பில் மக்களின் கருத்து என்ன? என்பது போன்ற விடயங்களைக் கவனத்தில் எடுப்பதுதான் நடுநிலையாளர்களின் செயலாக இருக்க வேண்டும்.

இது ஒருபுறம் இருக்க, சமஷ்டி தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமாகிய எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் கூறிய கருத்துத் தொடர்பில் ஊடகங்களிலும் அரசியல் தரப்புகளிலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதில் சமஷ்டி தொடர்பில் தான் கூறிய சந்தர்ப்பத்தைப் புரிந்து கொள்ளாமல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளதாக எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் கருத்துரைத்துள்ளார்.

தவிர, சமஷ்டி பற்றி கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கு விளக்கம் போதாது என்ற கருத்துப்படவும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியுள்ளார்.

இதில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் என்பது புளொட், ரெலோ ஆகியவற்றையே குறித்துரைக்கும்.

ஆக புளொட், ரெலோ ஆகிய கட்சித் தலைவர்கள் அல்லது செயலாளர்கள் அல்லது அந்தக் கட்சி சார்பில் குரல் கொடுக்க வல்லவர்கள் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் கூறிய கருத்துக்குப் பதிலளிக்க வேண்டியவர்களாக இருப்பர்.

இதில் புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் சமஷ்டி பற்றித் தமக்குப் போதிய தெளிவு உண்டு என்றும் அது தொடர்பில் யாரும் தமக்கு வகுப்பெடுக்கத் தேவையில்லை என்றும் பதில் கூறியுள்ளார்.

ஆக, இனிக் கருத்துரைக்க வேண்டிய பொறுப்பு ரெலோவினுடையதாகும். நேற்று முன்தினம் ரெலோவின் பத்திரிகையாளர் மாநாடு இடம்பெற்றது.

சமஷ்டி குறித்து எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்த கருத்துத் தொடர்பில் ரெலோ பதில் அளிக்கும் என எதிர்பார்த்திருந்த போதிலும் அதுபற்றி அவர்கள் எதுவும் கதைக்கவில்லை.

மாறாக ரெலோவின் முக்கியஸ்தர் ஒருவர் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை நேற்று அரசியலுக்கு வந்தவர் என்று கூறியிருந்தார்.

இது எதற்காகக் கூறப்பட்டது என்பது புரியாமல் இருப்பதுடன் சமஷ்டி பற்றிய தெளிவு ரெலோவிடம் இருக்கிறதா? என்பது பற்றி ரெலோவின் தலைமை பதிலளித்திருந்தால் அது பொருத்தப்பாடான விடயமாக இருந்திருக்கும்.

# தமிழர் காணிகள் விடுவிக்கப்படும்

## ஜனாதிபதி உறுதி என்கிறது கூட்டமைப்பு

படையினர் வசமுள்ள பட்டிப்பளை ஆசிரியர் மத்திய பயிற்சி நிலையம் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.

அதற்கமைய காணிகளை உடனடியாக சில தினங்களில் விடுவித்துத் தருவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர்,

"மட்டக்களப்பு மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஆசிரிய மத்திய பயிற்சி நிலையம் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பொலிஸ் காவல் நிலையமாக இயங்கி வருகின்றது.

இதனால் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய ஆசிரியர்களுக்கு கல்வி சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மிகப்பெரிய தடையாக அமைந்துள்ளது.

இக்காணி மற்றும் பொது மக்களின் வாழ்வாதார காணிகள், குடியிருப்புக் காணிகள், பாடசாலைகள் போன்ற படையினரின் கைவசம் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பாக கடந்த மூன்று வருடங்களாக குரல் கொடுத்து வருகின்றேன்.

கல்வி நடவடிக்கைகளுக்கு தடையாக உள்ள காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் நேரடியாக கோரிக்கை விடுத்திருந்தேன்.

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி, கல்வி நடவடிக்கைகளுக்கு தடையாக படையினர் கைவசம் உள்ள காணிகளை உடனடியாக சில தினங்களில் விடுவித்துத் தருவேன் என வாக்குறுதி அளித்தார்" எனக் குறிப்பிட்டார். (மு)

# அடையாளம் காணப்படாத 300 சடலங்கள்

(கொழும்பு)

கடந்த 2013ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரையிலான காலப் பகுதியினில், அடையாளம் காணப்படாத சுமார் 300 சடலங்கள் கொழும்பில் உள்ள மயானங்களில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதேபோல நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பல சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த ஆண்டு இதுவரை அடையாளம் தெரியாத 67 சடலங்கள் கொழும்பு சட்ட மருத்துவ சவச்சாலைக்கு கொண்டு வரப்பட்டன.

அவற்றில் 32 சடலங்களுக்கு உரிமை கோரப்பட்டது.

ஏனைய 35 சடலங்கள் கொழும்பு மாநகர சபையினால் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரினால் அடக்கம் செய்யப்பட்டன.

இதேபோல, கடந்த ஆண்டில் 117 சடலங்கள் கொண்டு வரப்பட்டு அவற்றில் 65 சடலங்கள் 'அடையாளம் காணப்படாத நிலையில் அடக்கம் செய்யப்பட்டன. (மு)

# திருவெண்காட்டில் நாளை சங்காபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகப் பெருமானுக்கு நாளை செவ்வாய்க்கிழமை 1008 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

சித்திவிநாயப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகமும் விசேட வழிபாடுகளும் இடம்பெற்று, மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும். (மு)

# ஒரே பிரசவத்தில் இலங்கை அகதி பெண்ணுக்கு 4 குழந்தைகள் பிறந்தன

இலங்கை அகதி கலானி என்பவருக்கு ஒரே பிரசவத்தில் 2 ஆண் குழந்தையும் 2 பெண் குழந்தையும் பிறந்துள்ளன.

ஈரோடு மாவட்டம் அறச்சலூரில் உள்ள இலங்கை அகதி முகாமை சேர்ந்தவர் விஜயகுமார் (வயது 36). இவர் அதே பகுதியை சேர்ந்த கலானி (30) என்பவரை கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டார்.

இந்த நிலையில் கர்ப்பம் தரித்த கலானியை விஜயகுமார் சென்னிமலையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தார். அங்கு கலானிக்கு அழகான 4 குழந்தைகள் பிறந்தன.

இதுகுறித்து கலானியின் உறவினர் ஒருவர் கூறும்போது, "கலானிக்கு 2 ஆண் குழந்தையும் 2 பெண் குழந்தையும் பிறந்துள்ளன.

எங்களது உறவினர்களில் சிலருக்கு இரட்டை குழந்தைகள் பிறந்து உள்ளன. ஆனால் 4 குழந்தைகள் ஒரே பிரசவத்தில் பிறந்து இருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது", என்றார். (மு)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ் வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில சிவகாமி அம்மன் கோவிலடி காரைநகர் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் பிரதேசம், 681BDE முள்ளிவாய்க் கால், SLNS Gotabaya ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தவசிக்குளம் கிராமத்திலும் மன்னார் பிரதேசத்தில மடுமாதா ஆலயப் பிரதேசம், மடுமாதா ஆலயம், கற்கடந்தகுளம், நீராவிபுரம், South bar Sub மன்னார் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## த்வைதம், அத்வைதம், விசிஷ



நீங்கள் வெளியூருக்கு செல்கிறீர்கள் அங்கு பகல் உணவு கிடைக்காது என்பதால் உணவுப்பெட்டியில் (Tiffin Box) உணவை எடுத்துச் செல்கிறீர்கள். இப்போது, நீங்கள் வேறு, உணவு வேறு. பிறகு பகல், ஒரு மணி அளவில் அந்த உணவை உண்ணுகிறீர்கள். இப்போது அந்த உணவு பெட்டியில் இல்லை. உங்களுக்குள் சென்று விட்டது. இவ்வளவு நேரம் அந்த உணவும் நீங்களும் தனித்தனியே இருந்தாலும் இப்போது ஒன்றாகிவிட்டீர்கள். இப்போது உங்களை நினைத்துப் பாருங்கள். நீங்கள் யார்? இது வரையில் நீங்கள் எடுத்துக் கொண்டுள்ள மொத்த உணவின் சாரம் (essence) தானே?

அணு நிலையில் உடலும் ஒன்றே. சிவம் என்ற இருப்பு நிலையிலிருந்து சக்தியெனும் விண் மலர்ந்தது. சில விண் துகள்கள் உடலாயின. சில விண் துகள்கள் உணவாயின. இதனால் உடலும், உணவும் தோன்றிய மூலப்பொருள் அணுவே. இங்கு அத்வைதம் துவைதமாயிற்று. 1 மணிக்கு, நீங்கள் வேறு, அந்த உணவு வேறு. 5 மணிக்கு நீங்களும் அந்த உணவும் இரண்டறக் கலந்து ஒன்றாகி விட்டீர்கள். 1 மணியிலிருந்து 5 மணி வரை நடைபெற்ற வேலைக்கிரமம் (Process) இருக்கிறதே அதுதான் விசிஷ்டாத்வைதம்.

மனிதன் அத்வைதம் என்பதையும், த்வைதம் என்பதையும் உணர்ந்து கொள்கிறான். த்வைதம் என்ற நிலையிலிருந்து, உண்மையைப் புரிந்து கொண்டு, இயற்கையின் ஒழுங்காற்றலைப் புரிந்து கொண்டு, தன்னை உயர்த்திக் கொண்டு அத்வைதம் என்ற நிலைக்குச் சென்றடைகிறான். இந்த செயல் ஒழுங்கு (Process) தான் விசிஷ்டாத்வைதம். அதற்குத் தனித் தன்மையுள்ள அத்வைதம் (Special advaitha) என்பதும் பொருந்தும்.

இவ்வாறான உண்மைகளைத் தெளிவாக உணர்ந்து கொள்ளாமல், "த்வைதம் ஒன்றுதான் கடவுளை அடையவழி" என்றும், "அத்வைதம் ஒன்று தான் கடவுளை அடையவழி" என்றும், சண்டையிட்டுக் கொண்டு மக்களில் பலர் தங்களைக் குழப்பத்தில் ஆழ்த்திக் கொள்கிறார்கள். ஒவ்வொரு பொருளுக்கும், நிகழ்ச்சிக்கும் மூன்று அடிப்படைக் கொள்கைகள் (Principles) உண்டு. "எல்லாம் ஒன்று" என்பது அத்வைதம். "ஒவ்வொன்றும் அதனதன் தனித்தன்மைக்கும் குணாதிசயங்களுக்கும் ஏற்ப ஒன்றுக்கொன்று "மாறுபடுகிறது" என்பதை த்வைதம்." எல்லாமே பகுத்துக் கொண்டே வரப்படும் பொழுது (While disintegrating) அணுவாகிப் பின்னர் பரமாகிறது என்பது விசிஷ்டாத்வைதம்.

# ஆனைக்கோட்டை யூனியனை வீழ்த்தி இணுவில் கலையொளி அணி சம்பியன்

ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் 45 வதுஆண்டுநிறைவுவிழாவை முன்னிட்டு நடத்தும் மட்டுப் படுத்தப்பட்ட கழகங்களுக் கிடையிலான துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை குப்பிளான் விக்னேஸ்வரா மைதானத்தில் நடைபெற் றது.



நாணயச்சுழற்சியில் வென்ற ஆனைக்கோட்டை யூனியன் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானிக்க இணுவில் கலையொளி முத லில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்பம் முதல் அதிரடி காட்டிய இணுவில் கலை யொளி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் கோகு லன் 2 ஆறு உள்ளடங் கலாக 14 ஓட்டங்களையும் நிருபன் 4 ஆறு 1 நான்கு உள்ளடங்கலாக 33 ஓட்டங் களையும் மோகன்ராஜ் 2 ஆறு உள்ளடங்கலாக ஆட் டமிழக்காமல் 12 ஓட்டங் களையும் பெற்றுக்கொடுத்த னர்.

பந்துவீச்சில் ஆனைக் கோட்டை யூனியன் அணி சார்பாக கபில் 1 ஓவர்கள் 2 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து ஒரு இலக்கினை கைப்பற் றினார்.

64 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதி லுக்கு துடுப்பெடுத்தாடிய ஆனைக்கோட்டை யூனி யன் அணி 3.2 ஓவர்கள் நிறைவில் சகல இலக்கு களையும் இழந்து 28 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

பந்துவீச்சில் இணுவில் கலையொளி சார்பாக ஜீவி தன் 1 ஓவர்கள் 6 ஓட்டங் களுக்கு 2 இலக்குகளை வீழ்த் தினார்.

இதனால்இணுவில்கலை யொளி 35 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியனாக முடிசூடியது.

இறுதிப் போட்டியில் விளை யாடிய இரு அணிகளுக்குமான வெற்றிக்கிண்ணங்கள், பரிசில்கள், பதக்கங்கள் என்பன இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள ஸ்ரீ முரு கன் ஐக்கிய விளையாட் டுக்கழக ஆண்டு நிறைவு விழாவின் போது வழங் கப்படும். (க-26)

# எப்.ஏ.கிண்ண சுற்றுப்போட்டி சென்.மேரிஸ் அணி அபாரம்

இலங்கைக் கால்பந் தாட்டச் சம்மேளனம் தேசிய ரீதியில் எப்.ஏ. கிண்ணத் துக்காக கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தி வருகின்றது.



இதன் போட்டியொன்று, ஹற்றன் மைதானத்தில் கட ந்த 8 ஆம் திகதி நடைபெ ற்றது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து ஹற்றன் ரெனோன் அணி மோதியது. முதற் பாதியாட்டத்தில் சென். மேரிஸ் அணி, 2 கோல்களை அடித்தது.

இரண்டாவது பாதியாட் டத்தில் சென்.மேரிஸ் அணி மேலும் ஒரு கோலை அடித் தது. பதிலுக்கு ஹற்றன் ரெனோன்அணிஒருகோலை அடித்தது.

முடிவில் சென்.மேரிஸ் அணி, 3:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. சென்:மேரிஸ் அணி சார் பாக அடிக்கப்பட்ட கோல்களை, யோனிஸ்ரன், சுபோதரன் மற் றும் மதி ஆகியோர் அடித்த னர். (க-26)

# எமது தனித்துவம் பாதுகாக்கப்படவேண்டும் விவசாயப் பிரதி அமைச்சர் அங்கஜன் தெரிவிப்பு



பருத்தித்துறை கற்கோ வளம் உதயதாரகை விளை யாட்டு மைதானத்தில் யாழ். மாவட்ட உதை பந்தாட்ட அணிகளுக்கிடையிலான இறுதிச் சுற்றுப் போட்டி நேற்று இடம்பெற்றிருந்தது.




சிறப்பு விருந்தினராக விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு உரை யாற்றும் போது.

இன்றைய இளைஞர் கள் நாளைய தலைவர்கள் எமது கல்வி, விளையாட்டு, விவசாயம் என்பவற்றை நாம் மீள கட்டியமைக்க வேண் டும்.

எமக்கே உரிய தனித் துவமானவை பாதுகாக் கப்பட வேண்டும் அவை விளையாட்டாக இருந்தா லும், கலாசாரமாகவும் இருக் கலாம்.

அடுத்த சந்ததியினரின் ஆரோக்கியத்தை நாம் முன் னின்று கொண்டு செல் வோம் என பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் மேலும் தெரிவித்தார். (க-30)

# கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் மாபெரும் தாச்சிப்போட்டி முடிவுகள்



கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலை யத்தின் 71 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சன சமூக நிலையமும் விநாய கர் விளையாட்டுக் கழகமும் இணைந்து யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனு சரணையுடன் விநாயகர் விளையாட்டுக் கழக மைதா னத்தில் தென்மராட்சி ரீதி யில் நடத்தி வரும் மாபெ ரும் தாச்சி சுற்றுப் போட்டி தொடரின் நேற்று முன்தினம் பத்தாம் நாள் நடைபெற்ற பெண்களுக்கிடையீலான தாச்சி சுற்றுப் போட்டியில் நாவற்குழி காந்தி விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி மத்தி வளர்மதி விளை யாட்டுக் கழகம் மோதி யது.

இதில் நாவற்குழி காந்தி விளையாட்டுக்கழகம் 6:2 என்ற புள்ளிகள் அடிப்படை யில் வெற்றியீட்டியது.

ஆண்களுக்கான குழு பி பிரிவிற்குரிய போட்டியில் கைதடி மத்தி வளர்மதி ஏ விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி கலைநகர் துர்க்கா ஏ விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் கைதடி மத்தி வளர்மதி ஏ விளையாட்டுக் கழகம் 12:6 என்ற புள்ளிகள் அடிப்படை யில் வெற்றியீட்டி காலிறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

இதேவேளை இன்று இரவு 8 மணியளவில் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில்நடைபெற வுள்ள குழு பி பிரிவுக்குரிய போட்டியில் கைதடி கச்சாய் கலைமகள் ஏ விளையாட் டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி பி விளையாட்டுக் கழகம் மோத வுள்ளது. (க)

# யாழ்ப்பாணம் சுப்பர்லீக் இருபது - 20 கிரிக்கெட் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத் தலைவர் அறிவிப்பு

யாழ்.மாவட்ட துடுப்பாட் டச் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட துடுப்பாட்ட வீரர்களை ஒருங்கிணைத்து, யாழ்ப்பாணம் சுப்பர் லீக் என் னும்இருபது-20சுற்றுப்போட்டி யொன்று நடத்தப்படவுள்ள தாக யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் வி.மணி வண்ணன் தெரிவித்தார்.

சங்கத்தால், பெயரிடப் பட்ட தலா 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியில் 8 அணிகள் ஏலத்தில் விடப்படும். அந்த அணிகளை ஏலத்தில் எடுப் பது தொடர்பில் பத்திரிகை யில் விளம்பரப்படுத்தப்படும். அதிக தொகையை ஏலத்தில் கேட்கும் உரிமையாளர்கள் அணிகளைஏலத்தில்எடுப்பார்கள்.

தொடர்ந்து, வீரர்களுக் கான ஏலம் நடைபெறும் போது, அணியின் 15 வீரர் களையும் 75 ஆயிரம்ரூபாய்க் குள் ஏலத்தில் எடுக்க வேண் டும். உரிமையாளரே அணி யின் முகாமையாளர் மற்றும் பயிற்றுவிப்பாளர்களை நிய மிக்கமுடியும். உரிமையாளர் அணியை ஏலம் எடுக்கும் முழுத் தொகையும் சங்கத் துக்கு வழங்கப்படுவதுடன், அதில் அரைவாசித் தொகை யானது அணிகளின் பராமரிப் பிற்காக மீளவும் வழங்கப்படும்.

யாழ்.மாவட்ட துடுப்பாட் டச் சங்கத்தில் பதிவு செய்யப் பட்ட கழகங்களின் வீரர் கள், தலா 500 ரூபாய் செலுத்தி ஏலத்தில் தங்களை பங்கெடுத் துக்கொள்ள முடியும். அணி களின் தெரிவில், ஒரு அணி யில், ஒரே கழகத்தைச் சேர்ந்த 5 வீரர்கள் மாத்திரம் இருக்க முடியும் என்பதுடன், போட்டி யின் போது 4 பேர் மாத்திரம்




விளையாடவும் முடியும்.

ஏலத்தில் எடுக்கப்படும் வீரர்கள் சுற்றுப்போட்டி முடியும் வரை உரிமையாளரின் விதிமுறைக்குட்பட்டு இருத் தல் வேண்டும்.

ஏலத்தொகை வீரர்களுக்கு வழங்கப்படமாட்டாது. மாறாக அணியின் வெற்றி பரிசுத் தொகையாக வழங்கப்படவுள் ளது. தெரிவு செய்யப்படும் வீரர்கள் தகுந்த காரண மின்றி இடைநடுவில் வில கினால் சங்கத்தின் ஒழுக் காற்ற நடவடிக்கைக்கு உட் படுத்தப்படுவர்.

இதற்கான விண்ணப் பங்கள் யாவும் எதிர்வரும் 16 ஆம்திகதிக்கு முன்னர் அனுப் படவேண்டும். அன்றைய தினம் மாலை 4 மணிக்கு அனைத்து விண்ணப்பங்க ளும் திறக்கப்பட்டு அணி உரி மையாளர்கள் தெரிவுசெய்யப்ப டுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (க-26)

## ராஜீவ் காந்தி கொலை...

விக்க ஆளுநருக்குப் பரிந்துரை செய்யத் தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட முருகன், சாந்தன், நளினி, பேரறிவாளன், ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய 7 பேர் 25 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் உள்ளனர்.

இவர்களின் விடுதலை குறித்த மனு மீதான விசாரணையில் அண்மையில் தீர்ப் பளித்த ரஞ்சன் கோகாய், நவீன் சின்கா, கே. என்.ஜோசப் ஆகியோர் அடங்கிய அமர்வு 7 பேரையும் விடுதலை செய்வது தொடர்பாக முடிவை எடுத்து ஆளுநரின் முடிவுக்கு அனு ப்பி வைக்கலாம் என்று அறிவுறுத்தினார்கள்.

அத்துடன், சிறையில் இருக்கும் 7 பேரை யும் விடுதலை செய்வதற்கு எதிராக மத்திய அரசு தாக்கல் செய்துள்ள மனுவை ஏற்றுக் கொள்வதற்கு முகாந்திரம் ஏதும் இல்லை என்று கூறி அந்த மனு மீதான விசாரணையை முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

இந்தநிலையில், ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகள் 7 பேரின் விடுதலை குறித்து முடிவு எடுத்து ஆளுநருக்குப் பரிந்துரை செய் வது தொடர்பாக, முதல்வர் எடப்பாடி பழனி சாமி தலைமையில் தமிழக அமைச்சரவை யின் அவசர கூட்டம் தலைமைச் செயலக த்தில் நேற்று மாலை 4 மணிக்கு கூடியது. ஏறக்குறைய 2 மணிநேரம்வரை இந்தக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் 4 முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அமைச்சரவை முடிவுகள் குறித்து அமை ச்சர் ஜெயக்குமார் நிருபர்களுக்கு பேட்டி அளி த்தார்.

அவர் கூறியதாவது:

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு ஆயுள் தண்ட னைக் கைதிகளாக சிறையில் இருக்கும் முரு கன், சாந்தன், நளினி, பேரறிவாளன், ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய 7 பேரையும் விடுவித்து சட்டப்பிரிவு 161 பிரிவின் கீழ் ஆளுநருக்குப் பரிந்துரை செய்ய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்ப ட்டுள்ளது. இந்தப் பரிந்துரை காலதாமதம் இன்றி உடனடியாக செய்ய நடவடிக்கை எடு க்கப்படும்.

ராஜீவ் கொலையில் நீண்ட ஆண்டுகளா கச் சிறையில் இருக்கும் 7 பேரையும் விடு விக்க வேண்டும் என்பது ஒட்டுமொத்த தமிழக மக்களின் விருப்பமாகும். எந்தவிதமான தாமதமும் இன்றி ஆளுநருக்கு உடனடியாக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும். 7 பேர் விடுதலை செய்ய வேண்டிய விடயத்தில் ஆளுநர் தாமதம் செய்ய வேண்டிய அவசிய மும் இல்லை. தமிழக அமைச்சரவையின் இந்தப் பரிந்துரையை ஆளுநர் கண்டிப்பாக ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். 7 பேர்விடுதலை தொடர்பாகஜெயலலிதா எடுத்த முடிவுக்கு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு வலுசேர்த்திருக்கிறது. இவ்வாறு அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்தார். (மு)

## மாகாண சபை...

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் பொரு ளாதாரத்தை கட்டியெழுப்பி கொடுத்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பி 2003ஆம் ஆண்டை போன்று எதிரணிக்கு நாட்டை ஒப்படைக்கவா என சிலர் எண்ணு கின்றனர்.

ஆனால் அதற்கு இம்முறை நாம் இடமளி க்கப் போவதில்லை என்றும் பிரதமர் தெரிவி த்தார். (மு)

## மக்களுடன் தொடர்ந்தும்...

அத்துடன் தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் வெளியிட்ட நான்கு தெரிவுகளில் நான்காவதாக குறிப்பிட்ட தெரிவே மிகச் சிற ந்தது என்று தெரிவித்துள்ளார்.

சிலோன் ருடே ஆங்கில நாளிதழுக்கு அளித்துள்ள செவ்வியில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில், முதலமைச்சர் விக்னேஸ்வரன் தம்மிடம் நான்கு தெரிவுகள் இருப்பதாக கூறியிருந் தமை தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டுள் ளது.

அதற்கு அவர், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நியமனம் வழங்காவிடின், நான் என்ன செய்ய விரும்புகிறேன் என்று ஊடக வியலாளர்கள் கேள்வி எழுப்பிய போதுதான், நான்கு தெரிவுகளை கூறியிருந்தார்.

முதலாவது அரசியலில் இருந்து ஓய்வு பெறுவது.

இரண்டாவது, இன்னொரு அரசியல் கட்சியில் இணைந்து கொள்வது.

மூன்றாவது, புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பது.

நான்காவது, எமது அரசியல் நோக்கங் களை அடைவதற்கு பாகுபாடு இல்லாத தமிழ் மக்கள் பேரவை போன்ற சமூக இயக்கம் ஒன்றுக்குத் தலைமை தாங்குவது என்று குறிப்பிட்டிருந்தார்.

இதில் உங்களுக்குச் சிறந்தது எது என்று கேள்வி எழுப்பப்பட்ட போது, நிச்சயமாக நான் காவது தெரிவு தான் என்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதிலளித்துள்ளார். (மு)

(இது தொடர்பில் வேறொரு செய்தி 3ஆம் பக்கத்தில்...)

## வடமராட்சி...

மாறியதில் மோதலுக்கு தயாராக வந்த 42 பேரினை தாம் கைது செய்துள்ளதாக பரு த்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை கற்கோவளம் உதயதா ரகை விளையாட்டு மைதானத்தில் யாழ் மாவட்ட அணிகளிற்கிடையிலான உதைபந் தாட்ட சுற்றுப் போட்டி ஒன்று இடம்பெற்றுள் ளது.

இப்போட்டி நேற்று முன்தினம் சனிக் கிழமை இடம்பெற்றது.

இப் போட்டியில் பலாலி விண்மீன், குறு ஞ்சிக் குமரன் ஆகிய அணிகள் மோதின.

இப் போட்டியின் போது ஒருவர் தாக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து நேற்று ஞாயிற்றுக் கிழமை பலாலி பகுதியைச் சேர்ந்த இளைஞ ர்கள் குழு ஒன்று சக்கோட்டைப் பகுதியில் உள்ளவர்களை தாக்குவதற்காக கொட்டன்க ளுடன் வந்தபோது 42 பேரினை கைது செய் ததாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்த னர். (மு-60)

## 2020ஆம் ஆண்டும்...

சுமையிலிருந்தும், சர்வதேச அழுத்தங்க ளிலிருந்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவே மீட்டெடுத்தார்.

அவர் ஜனாதிபதியாகியிருக்காவிட்டால் இந்நேரம் நிலைமை படுமோசமாகியிருக் கும்.

கடந்த ஆட்சியின் போது நாமல் என்னை மச்சான் என்று அழைத்தார். அந்தளவுக்கு குடும்ப ஆதிக்கம் கோலோச்சியிருந்தது. அன்று துள்ளிய நாமலால் இன்று ஆர்ப் பாட்டமொன்றைக்கூட முறையாக நடத்த முடியாதுள்ளது.

யார் என்ன சொன்னாலும் மைத்திரிபால சிறிசேனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலி லும் பொதுவேட்பாளராகக் களமிறங்குவார் என தெரிவித்தார். (மு)

# சொந்த இடங்களில் நாங்கள் வாழ்வதற்கு எங்களுக்கு உரிமையுண்டு-யாழ்ஆயர்

(யாழ்ப்பாணம்)

"சொந்த இடங்களில் நாங்கள் வாழ்வ தற்கு எங்களுக்கு உரிமையுண்டு. அதனை நாங்கள் விடக்கூடாது. இதற்கு எவரும் மறு க்க முடியாது" என்று யாழ்ப்பாண மறை மாவ ட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண் டகை தெரிவித்தார்.

கட்டைக்காடு புனைத் தொடுவாய் புனித வேளாங்கன்னி மாதா ஆலய திறப்புவிழா நேற்று நடைபெற்றது.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆலயத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே ஆயர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எங்களுடைய சொந்த இடங்களில் வாழ் வதற்கு எமக்கு உரிமையுண்டு. இதனை யாரும் மறுக்க முடியாது. துணிவுடன் எங் கள் இடங்களுக்கு செல்லவேண்டும் .

இந்த ஆலயம் கட்டுவதற்கு முயற்சி எடு க்கப்பட்ட போது பலதடைகள் ஏற்பட்டன என ஆலயத்தினர் என்னிடம் வந்து கலந்துரை யாடினார்கள். அவர்கள் விவரங்களையும் தந்தார்கள். நான் அதனை கிழித்து போட்டு விட்டு, இது எங்களுடைய இடம் இதற்கு யாரும் தடைபோட முடியாது. யாரும் தடுத் தால் என்னிடம் அனுப்பக் கூறினேன்.

அதன் பின் யாரும் அங்கு வரவில்லை. ஆலயத்தை சார்ந்தவர்களை உற்சாகப்படு த்தினேன். இன்று ஆலயம் நிறைவுபெற்று கம்பீரமாக காட்சிதருகின்றது.

இன்றைய சூழலில் ஒரு பேனாவின் மை முடிந்ததும் எவ்வாறு அதனை தூக்கி எறிகி றோமோ அவ்வாறே திருமணங்களும் ஒரு சில குழப்பங்கள் வந்ததும் விவாகரத்தாகி பிரிவுஏற்படுகின்றது. இதில் மாற்றங்கள் உரு வாகவேண்டும். மனங்களில் தெளிவும் துணிவும் இருத்தல் வேண்டும் என்றார்.(மு)

## இலங்கைக்கு இனியும்...

முழுமையாக இந்தத் தீர்மானம் அமு லாக்கப்படவில்லை.

இந்த நிலையில், இலங்கை அரசு மேல திக காலத்தைக் கோரலாம் என்று கூறப்படு கின்றது.

அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் என்று அதன் நாடாளுமன்ற உறுப்பினர் சித் தார்த்தனிடம் வினவப்பட்டது.

இதற்குப் பதில் வழங்கிய அவர், இல ங்கை அரசுக்கு மேலும் கால அவகாசம் வழங்குவது மிகப்பெரிய தவறாக அமையும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை ஐ.நா மனித உரிமை பேர வையின் 39ஆவது கூட்டத்தொடர் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது. (மு)

## அரசின் தீர்மானத்தை...

தேசிய கூட்டமைப்பு எதிர்க்கும் என கூட் டமைப்பின் பொதுச் செயலாளரும நாடாளு மன்ற உறுப்பினருமான மாவை சேனாதி ராசா தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று இடம்பெற்ற நிகழ் வொன்றில், எதிர்வரும் மனித உரிமை மாநாட்டில் தாம் யோசனையொன்றை முன் வைக்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தமை தொடர்பில், கருத்து தெரிவித்த போதே நாடாளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இதனை தெரிவித்தார்.

போர்க்குற்றச்சாட்டில் இருந்து இராணுவ த்தை விடுவிக்கும் வகையில் தம்மால் ஐக் கிய நாடுகள் சபைக்கும் மனித உரிமைகள் பேரவைக்கும் புதிய யோசனை ஒன்று முன் வைக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

எதிர்வரும் 24ஆம் திகதி தாம் அமெரி க்காவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் மாநா ட்டில் உரையாற்றுவதாகவும், அதில் இந்த புதிய யோசனையை முன்வைக்கவுள்ளதா கவும் குறிப்பிட்டார்.

முக்கியமாக இராணுத்தினருக்கு எதி ரான மனித உரிமை குற்றச்சாட்டுக்களை அகற்றுதல், விடுதலை புலிகள் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கை கள் உள்ளிட்ட விடயங்களில் எத்தகைய நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்ற வகையில் இந்த யோசனை அமையும் என வும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராசா, இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு தமி ழர் தரப்பு அரசாங்கத்திற்கு வழங்குகின்ற ஆதரவை தவறாக கையாள இடமளிக்கக் கூடாதென தெரிவித்தார். (மு)

## விபத்தில் காயமடைந்த...

வரன் நீகன் (வயது 29) என்ற இளை ஞரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞர் கடந்த 30ஆம் திகதி மண்டைதீவு பாலத்தில் துவிச்சக்கர வண்டி யில் மண்டைதீவு நோக்கிச் சென்றுள்ளார். பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் நோக்கி செல்லுவதற்கு துவிச்சக்கரவண்டியை திரு ப்பியுள்ளார்.

அப்போது எதிரே வந்த மோட்டார் சைக் கிள் அவரை மோதியதில் அந்த இடத்தில் படு காயமடைந்து மயக்கமடைந்தார். உடனடி யாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்ற குறித்த இளைஞர் ஒரு வாரத்தின் பின்னர் நேற்று முன்தினம் காலை உயிரிழந்துள் ளார்.

இந்த மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (மு-9)

## மனித உரிமை பேரவை...

அமர்வை நடத்தவுள்ளது. இந்த அமர்வு எதிர்வரும் 16ஆம் திகதி வரை நடைபெற வுள்ளது.

இந்த அமர்வில் 46 நாடுகளைச் சேர்ந்த 840 சம்பவங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (மு)

## ஜனாதிபதியின் அதிகாரம்...

காணப்படும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மத்துகம-அகலவத்தை பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அதன் நாடாளுமன்ற உறுப்பி னர் நலிந்த ஜயதிஸ்ஸ இதனை தெரிவித்து ள்ளார். (மு)

## ஆசிய கிண்ண சம்பிய...

இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சிங்கப்பூர் வலைப்பந்தாட்ட அணியை வெற்றி கொண் டதன் மூலம் இலங்கை அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் அணியை 69-50 என்ற அடிப் படையில் இலங்கை அணி வீழ்த்தியுள்ளது டன், இந்தத் தொடரில் இலங்கை அணி ஒரு போட்டியிலும் தோல்வியை சந்திக்கவில்லை என்பது சிறப்பம்சமாகும்.

இலங்கை அணியில் தர்சினி சிவலிங் கம் மற்றும் எழிலேந்தினி சேதுகாவலன் என்ற தமிழ் வீராங்கனைகளும் உள்ளட ங்கியுள்ளனர்.

இந்தத் தொடரில் இறுதிப் போட்டிக்கு தெரி வான இலங்கை மற்றும் சிங்கப்பூர் அணிகள் 2019ஆம் ஆண்டு இங்கிலாந்து லிவர்பூலில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண வலைப்பந் தாட்டப் போட்டியில் பங்குபெறவுள்ளமை குறி ப்பிடத்தக்கது. குறித்த போட்டியில் 16 நாடு களின் வலைப் பந்தாட்ட அணிகள் கலந்து கொள்ளவுள்ளன. (மு)

### தன நிதானய

திகதி 2018-09-09
சீட்டிழுப்பு இலக்கம் 47

B 17 28 31 69

### கொவிசெத

திகதி 2018.09.09
சீட்டிழுப்பு இலக்கம் 1877

D 15 34 58 77

### மஹஜன சம்பத

திகதி 2018/09/09
சீட்டிழுப்பு இலக்கம் 3742

R 9 2 8 6 7 4

### நீரோகா

திகதி 2018/09/09
சீட்டிழுப்பு இலக்கம் 444

மிதுனம் 09 18 34 35 11

## சமஷ்டி பெரும்...

நாயக சோஷலிச குடியரசு என்றே அரசியலமைப்பில் எழுதப்பட்டுள்ளது. இருப்பினும் ஜனநாயக குடியரசு என்றோ அல்லது சோஷலிச குடியரசு என்றோ யாராலும் சான்றிதழ் வழங்கமுடியாது. ஜனநாயகத்தின் அங்க இலட்சணங்களில் ஒன்றுதான் பெரும்பான்மையின் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவதாகும்.

பெரும்பான்மையானவர்களின் தீர்மானத்தினைத்தான் எண்ணிக்கையில் சிறுபான்மையானவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இந்த நாட்டில் சிங்கள பௌத்த மக்களே பெரும்பான்மையாக உள்ளனர். இது அனைவரும் அறிந்தவொரு விடயமாகும்.

வெவ்வேறுபட்ட மக்கள் குழுவினர் இருக்கின்றபோது பெரும்பான்மையை மையப்படுத்தி தீர்மானங்களை எடுக்கின்றமையானது ஒருபக்கத்திற்கு சார்பானதாகவே சென்றுவிடுகின்றது. அதன் காரணமாகவே அதிகாரப் பகிர்வு அவசியம் என்ற தர்க்கம் எழுகின்றது.

ஆம், பல்வேறு குழுவினர் இருக்கின்றபோது சிறுபான்மை குழுவினரின் நிலைப்பாட்டிற்கு மாறாக பெரும்பான்மை குழுவினரை மையப்படுத்தியே தீர்மானங்களை எடுப்பதை ஜனநாயக பண்பு என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

பல்லினங்களைக் கொண்ட எமது நாட்டிற்கு ஜனநாயகப் பண்பு எனக் கூறப்படும் பெரும்பான்மையின் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துதல் என்பது பொருத்தமற்றதாகவுள்ளது. ஆகவே தான் உலகத்தின் சில நாடுகளில் காணப்படுகின்றமையைப் போன்று அதிகாரங்களை பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறான அதிகார பகிர்வினை சமஷ்டி முறைமை என்றும் கூறலாம். இல்லாது விட்டால் சமஷ்டி முறைமை என்று கூறாதும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.

உலக வல்லரசு நாடான ஐக்கிய அமெரிக்காவினை எடுத்துக்கொண்டால் அது சமஷ்டி முறைமையைக் கொண்ட நாடு என்பதை அனைவரும் அறிவார்கள். ஆனால் அந்த நாட்டின் அரசியலமைப்பில் சமஷ்டி முறைமை என்று எங்கும் எழுதப்படவில்லை. இதே போன்று தான் இந்தியாவை எடுத்துக்கொண்டால், இந்தியா ஒரு ஜனநாயக நாடு. அங்குள்ள அரசியலமைப்பிலும் அது ஒற்றை ஆட்சி அரசா இல்லை சமஷ்டி முறைமையான அரசா என்று குறிப்பிடப்படவில்லை.

ஆனால் அனைவரும் ஒன்றிணைந்து அந்த நாட்டிற்கு பொருத்தமாக உருவாக்கிய அதிகாரப்பகிர்வுடனான அரசியலமைப்பினை நடைமுறைப்படுத்தியுள்ளார்கள்.

இந்த நாட்டில் சமஷ்டி அடிப்படையில் அதிகாரப்பகிர்வு அவசியம் என்று முதன் முதலாக முன்மொழிந்தவர் வேறு யாருமில்லை எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவே ஆவார். தமிழ்த் தலைவர்கள் எவரும் இக்கோரிக்கையை முன்வைக்க வில்லை.

1926ஆம் ஆண்டு எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவே சமஷ்டி முறை என்பதை இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்தினார். அத்தோடு அவர் இந்த விடயம் சம்பந்தமாக சிலோன் மோர்னிங் லீடர் என்ற பத்திரிகையில் கட்டுரைகளையும் தொடர்ச்சியாக எழுதினார். அத்துடன் அவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து சமஷ்டி முறைமை தொடர்பான விளக்கங்களைச் செய்ததோடு இலங்கைக்கு அம்முறைமையே மிகப் பொருத்தமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதுமட்டுமல்ல சமஷ்டி முறைமையில் பல வடிவங்கள் உள்ளன. எமது நாட்டிற்கு சுவிட்சர்லாந்தில் உள்ள சமஷ்டி முறைமையே பொருத்தமானது என்றும் பண்டாரநாயக்க எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சுவிட்சர்லாந்து அரசியலமைப்பில் கூட்டாட்சி அரசு என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பண்டாரநாயக்கவே குறிப்பிட்டுள்ள நிலையில் சமஷ்டி முறைமை என்பது பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு எதிரான முறை என்று கருதமுடியாதல்லவா?

டொனமூர் ஆணைக்குழு இந்த நாட்டிற்கு வருகை தந்தபோதும், சோல்பரி ஆணைக்குழு இந்த நாட்டிற்கு வருகை தந்தபோதும், இந்த நாட்டிற்கு சுதந்திரம் வேண்டும் என்று கோரிய தருணத்திலும் சமஷ்டி முறைமை தான் பொருத்தமானது என்று கூறியவர்கள் வடக்கு, கிழக்கினைச் சேர்ந்த தலைவர்கள் அல்லர். இங்குள்ள மக்கள் பிரதிநிதிகளும் அல்லர். கண்டியத் தலைவர்களே ஆவர்.

1944ஆம் ஆண்டு இந்த நாட்டின் ஆட்சிக்கு பொருத்தமானது சமஷ்டி முறைமையே என்று ஸ்ரீலங்கா கம்னியூஸ்ட் கட்சியே அவர்களது வருடாந்த மாநாட்டில் தீர்மானத்தினை எடுத்தார்கள். அக்காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் அதனை ஏற்றுக் கொண்டிருக்க வில்லை. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1949இல் மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. அதன் பின்னர் தான் தமிழ்த் தலைவர்கள் சிந்திக்க ஆரம்பித்தார்கள். நாட்டின் ஆட்சி முறை தவறானது, பொருத்தமற்றது என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

அதாவது பெரும்பான்மையினரின் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுவது சிறுபான்மையினருக்கு பாதகமாகும் என்ற தீர்மானத்தினை எடுத்தார்கள். 101 உறுப்பினர்களைக் கொண்ட முதலாவது பாராளுமன்றத்தில் மலையக மக்களை 7உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார்கள். பெரும்பான்மை வாக்கெடுப்பின் காரணமாகவே அவர்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது.

இந்த நிலைமைகளை அடுத்துத்தான், நான் தற்போது பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருக்கும் இலங்கை தமிழரசுக் கட்சி 1949 டிசம்பர் 18ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நாட்டிற்கு சமஷ்டி முறைமையே அவசியம் என்ற நிலைப்பாட்டில் பெடரல் கட்சி என எமது கட்சி உருவாக்கப்பட்டது. அந்த நிலைப்பாட்டில் தான் நாம் தற்போதும் இருக்கின்றோம். அதில் எந்தவொரு மாற்றமும் இல்லை என்பதை நான் தெளிவாக இந்த இடத்தில் குறிப்பிடுகின்றேன்.

புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கை யில் கூட எமது இந்த நிலைப்பாட்டினைக் குறிப்பிட்டுள்ளோம்.

ஆனால், தற்போதைய உலகச்சூழலை கருத்தில் கொள்கின்றபோது சமஷ்டி என்ற பெயர்ப்பலகை போடப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதே அனைவருக்கும் புரிந்ததொரு விடயமாகும்.

ஆகவே பெயர்ப்பலகை அவசியமற்ற விடயமாகும். உலகத்தில் உள்ள சில நாடுகளின் அரசியல மைப்பில் சமஷ்டி முறைமை என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் நடைமுறையில் அதனைக் காணமுடியாது. அங்கு ஒற்றை ஆட்சி முறைமையையே காண முடிகின்றது.

அதேபோன்று ஸ்பெயின் போன்ற இன்னும் சில நாடுகளின் அரசியலமைப்பில் ஒற்றை ஆட்சி என்று காணப்பட்டாலும் அங்கு சமஷ்டிக்கு சமமான அதிகாரப்பகிர்வு காணப்படுகின்றது. ஆகவே பெயர்பலகைகளை உயர்த்திப்பிடித்து யாரையும் ஏமாற்ற வேண்டும் என்ற அவசியம் எமக்கு இல்லை. தற்போது எமது நாட்டிற்கு ஜனநாயக, சோஷலிச குடியரசு என்று பெய ர்ப்பலகை இருந்தாலும் ஜனநாயமும்இல்லை சோஷலிசமும்இல்லை ஆகவே பெயர்ப்பலகைகளை விடுத்து அரசியலமைப்பின் உள்ளடக்கத்தையே பார்க்க வேண்டியுள்ளது. அங்கு அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளக் கூடிய முறைமை இருக்கின்றதா எனப் பார்க்க வேண்டும்.

தமிழர்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருந்தாலும் வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள். ஆகவே அதிகாரங்களை சரியாக பகிர்கின்றபோது அவர்களுக்குரிய தீர்மானங்களை அவர்களே எடுக்க முடிவதற்கான நிலைமை ஏற்படுகின்றது என்றார் சுமந்திரன். (மு)


## சிறுநீரகம் தேவை

23 வயதுடைய ஆணிற்கு B+ இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.

தொடர்புக்கு:
075 529 0090
(5619)

## விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-3597)
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## விற்பனைக்கு

NP -BA XXXX எனும் இலக்கமுடைய CR42 TOWN ACE HIGRASS Van விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:
077 532 2470
(C-3781)

உயர்தர கணக்கீடு \ வணிகக்கல்வியும் கணக்கீடும்
பிரத்தியேக / குழு வகுப்புக்கள்
Mr. BALAKAJEN
A/L 2019, A/L 2020
O/L 2018, Grade 10
இடம்: ● சுந்தர்மடம் சந்தி ● கொழும்புத்துறை
தொடர்புகளுக்கு: 0772168884
(5579)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி 500/= மட்டும். கூடுதல் கொள்வனவுகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு. வியாபாரிகளுக்கு குறைந்த விலையில் கொடுக்கப்படும்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை
தொடர்பு: 077 868 9500
(5621)

## உயர் கலைக் கல்லூரி - A9 வீதி, மீசாலை.

A/L 2018 மாணவர்களுக்குரிய செயன்முறை வகுப்புக்கள்

பொறியியல் தொழில் நுட்பம்
20செயன்முறை வகுப்பு
10 பரீட்சைகள்
உயிர்முறைமைகள் தொழில் நுட்பம்
20செயன்முறை வகுப்புகள்
Spot Exam -5
B1, B2 - 5

ஆரம்பம்: 10.09.2018 4.00 pm
● ஒவ்வொரு மாணவர்களும் தனித்தனியாக செயன்முறை பயிற்சிக்கானவசதி.
● கடந்த வருட பரீட்சையின் பெறுபேறுகள் சான்று
நிர்வாகி- 0764664021
(இ-3780)

## வேலைவாய்ப்பு

A/L பரீட்சைக்கு தோற்றிவிட்டீர்களா? Granton (Pvt) Ltd இன் புதிய கிளைகளில் பணிபுரிய வாய்ப்புக்கள். ஆண், பெண் இருபாலாருக்கும் எமது நிறுவனத்தில் இணைய புதிய வேலைவாய்ப்புக்கள் உள்ளன. யாழ்ப்பாணம், வவுனியா கிளைக்கு 50ற்கு மேற்பட பதவி வெற்றிடங்கள் உள்ளன.

● தங்குமிட வசதிகள் செய்துதரப்படும்.
● பயிற்சிக் காலத்தில் 18,000/= - 25,000/= வரையிலும் பயிற்சியின் பின்னர் 45,000/= மேல் பதவிகளுக்கு ஏற்ப வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் நேர்முகதேர்வின் போது தெரிவு செய்யப்படும் (CV, NIC Copy, Birth Certificate) கொண்டு வரவும்.

● முன்னனுபவம் தேவையில்லை.
● 18 - 30 வயதிற்கு உட்பட்டவர்கள்.
தொடர்பு: 0767707759, 0779994807
Granton THE GRANTON GROUP
(5623)

● வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
➤ மிக குறைந்த கட்டணம்.
➤ 3 - 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
➤ இல்லங்களில் வந்து பொறுப்பு ஏற்கப்படும்
UK- 550/=, France- 700/=, Swiss- 750/=, Australia- 850/=

● சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் அதற்கான ஆலோசனைகள் ஒழுங்கு செய்து தரப்படும்.
● சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் பெற்றுத் தரப்படும்.
● யாழ் - கொழும்பு பஸ் ஆசனப்பதிவுகள் முன்பதிவு செய்து தரப்படும்.

## திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd

321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (முட்டாஸ்கடை சந்திக்கு அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (555)
04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. (அன்னைமுத்துமாரி ஆசனப் பதிவகம்)
கனகபுரம் வீதி, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு
077 755 4528, 070 375 0002

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

## அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
(இ-3758)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.